No 24 P. Ponnampalam
No 4
620.
P. PONNAMPALA
No 4
TEACHER PALALY

# ஞாயிறு

கலை ஆக்கங் கருதிய வெளியீடு

மெய்ப்பொருள் காண்பதறிவு
கலாநிலையம், யாழ்ப்பாணம்.

கூதிர்க் கதிர்
ஐப்பசி—கார்த்திகை
ஸ்ரீமுக ஆண்டு

யாழ்ப்பாணக் கலாநிலையம்

1933

ஒன் ருபா

# யாழ்ப்பாணக் கலாநிலையம்

(கலை ஆக்கங் கருதிய கழகம்)

## நோக்கங்கள்

1. இலக்கியம், தத்துவஞானம், பௌதிக சாத்திரம், ஓவியம், நாகரிகம், சரிதம் என்னும் இவற்றில் இந்தியாவும் இலங்கையும் அடைந்த பேறுகளை ஆராய்ந்தறிதல்;
2. இவற்றை இக்கால ஆராய்ச்சியறிவின் முறையில் விளக்குதல்;
3. கலைகளின் புத்துயிர்ப்புக்காகவும், நாட்டின் நோக்கங்கள் கைகூடுவதற்காகவும் முயலுதல்;

## அங்கத்தினர்

சிறப்புவகையினர், பொதுவகையினர் என அங்கத்தினர் இருதிறத்தினராவர்;

### பொதுவகை அங்கத்தினர்

நாட்டின் கலை ஆக்கத்தில் ஊக்கமுள்ளார் யாவரும் இந்நிலையத்தின் அங்கத்தினராதற் குரியர். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஓரளவிற்குக் கல்வியறிவுடையராய் இருத்தல் இன்றியமையாதது. ஒரு மொழியறிவும் புறநடைப்பான்மையில் ஏற்கப்படும்.

### சிறப்புவகை அங்கத்தினர்

கலையாக்கத்திற்கு உதவிய கல்வியாளர் சிறப்புவகை அங்கத்தினராய்த் தெரிவுசெய்யப்படுதற் குரியர்.

நம் தமிழ்க் கலைகளின் வளர்ச்சியில் கருத்துடையாரெல்லாம் இந்நிலையத்தின் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, இந் நன்முயற்சிகளைப் பெருகச் செய்வார்களென்று நம்புகின்றோம்.

---

## ஞாயிறு

ஆண்டுக் கட்டணம்: ரூ. 4. தனிக் கதிர்: அணு 12.

'ஞாயிறு' அலுவற்கூடம்
கலாநிலையம்
யாழ்ப்பாணம்.

# ஞாயிறு

## கலையாக்கங் கருதிய வெளியீடு

---

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனைபது
தன்னே ரிலாத தமிழ்.

தொகுதி 1

கூ திர்க்
கதிர்

ஐப்பசி – கார்த்திகை
ஸ்ரீமுக ஆண்டு

யாழ்ப்பாணக் கலாநிலையம்

1933

# ஞாயிறு ஆசிரியக் கழகம்


தலைவர்

திரு சு. நடேசபிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்., எப். ஆர். இ. எஸ்.,

(பரமேசுவரக் கலாசாலைத் தலைவர்)

அமைச்சர்

உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர்

வியாகரண மகோபாத்தியாய

பிரமஸ்ரீ. வை. இராமசாமி சர்மா அவர்கள்

(மத்திய கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்)

திருவாளர். வ. குமாரசுவாமி அவர்கள், பி. ஏ.

(வழக்கறிஞர்)

திருவாளர். வே. நாகலிங்கம் அவர்கள்

(வழக்கறிஞர்)

அலுவலாளர்

திருவாளர். க. நவரத்தினம் அவர்கள்


குறிப்பு.—கட்டுரைகள், மதிப்புரைகளுக்குரிய நூல்கள், பத்திரிகைகள் முதலாயின அமைச்சருக்கும், ஆண்டுக் கட்டணப்பொருள், விளம்பரம் முதலாயின அலுவலாளர்க்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

கட்டுரைகள் அனுப்பும் அன்பர்கள் தமிழ்மக்கள் வரலாறு, ஏனையோர் வரலாறு, தமிழ் இலக்கிய இலக்கண நூலுரைகள், பக்தி ஞான நூலுரைகள் சம்ஸ்க்ருத காவியாலங்கார நாடகங்கள், தத்துவ தருக்க நூலுரைகள், சங்கீத சித்திர சிற்பக் கலைகள், மேற்றிசை நவீன பௌதீக நூல்கள் முதலான பொருள்களைக் குறித்து இஞ்ஞான்றை அறிவொளியால் சரித்திர முறையில் ஆராய்ச்சியுரைகளால் வரைந்தனுப்புவார்களாக. இத்தகைய கட்டுரைகள் ஒரே முறையில் வெளிவர விரும்புவோர பூல்ஸ்காப் காகிதத்தில் ஒரே பக்கத்தில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் வரைதல் வேண்டும். தொடர்ச்சியாக வருமாறு எழுதப்படுபவைகள் எத்தனைப் பக்கங்களாக இருப்பினும், அவை எம்மால் அவ்வக் கதிர்களுக்குப் பகுத்துக் கொள்ளப்படும்.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| புலத்திய முனிவர் | .... | 285 |
| தமிழ் இலக்கியத்தில் பருவவருணனை | .... | 287 |
| கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி<br>திரு. சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல். | .... | 291 |
| செழுங்கதிர்ச் செல்வம்<br>ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் | .... | 294 |
| தேவியைப் பிழைபொறுக்க வேண்டுதல்<br>பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் | .... | 298 |
| சங்ககாலத்துத் தெய்வவழிபாடு<br>சுவாமி விபுலாநந்தர் | .... | 301 |
| பெருங்காப்பிய ஆராய்ச்சி<br>பிரமஸ்ரீ வை. இராமசாமி சர்மா | .... | 305 |
| ஒரு கவிநயம்<br>"பதஞ்சலி" | .... | 311 |
| பாவலர்சொற் போற்றிய காவலர்<br>பண்டிதர் கா. பொ. இரத்தினம் | .... | 314 |
| "செம்மலி"யும் கம்பலமும்<br>சுவாமி ஞானப்பிரகாசர் | .... | 318 |
| தொல்காப்பியப் பாயிர ஆராய்ச்சி<br>வித்துவான் சி. கணேசையர் | .... | 325 |
| சாங்கியதத்துவ ஆராய்ச்சி<br>திரு. க. விசுவலிங்கம் | .... | 329 |

பக்கம்.

தமிழகத்துத் தருக்கநூல் வளர்ச்சி .... 338
திரு. பொ. கைலாசபதி, பி. எஸ்சி.

இருளின் மிளிரும் ஒளி
அல்லது
துன்பத்தில் துலங்கும் இன்பம் .... 341
திரு. க. கி. நடராஜன்

பராக்கிரமவாகுவின் உருவச்சிலையன்று,
மற்று ஒருமுனிவரின் உருவச்சிலையாகும் .... 350

சேர். பொன். இராமநாதப் புகழ்ச்சிப் பாக்கள் .... 355
திரு. க கி. நடராஜன்

தமிழன்பர் மகாநாடு .... 357
சுவாமி உருத்திரகோடீசுவரர்

ஆசிரியர் குறிப்புகள் .... 365

நிகழ்ச்சிகளும் ஆராய்ச்சிகளும் .... 368

பன்மணிக்கோவை .... 373

மதிப்புரைகள் .... 377

## சித்திரப்படம்

புலத்திய முனிவரின் உருவச்சிலை முன்பக்கம்

# புலத்திய முனிவரின் உருவச்சிலை

முற்பக்கத்திலுள்ள படத்திற் காணும் சிலை இலங்கையிற் பிரசித்தமான ஒரு சிற்பமாகும். இது பொலன்னருவாவில் உள்ளது. இதனை முதலாம் பராக்கிரமபாகு என்ற சிங்களச் சக்கரவர்த்தியின் உருவச்சிலை என்று பெரும்பாலார் இதுகாறும் கருதியிருந்தனர். இவ்வுருவத்தின் பீடுடைய தோற்றத்தைக் காண்போர் இது சிங்கள மன்னர்களுள் பெரும் புகழ்படைத்தவனும், பொலன்னருவாவிற் பல கட்டடங்கள் அமைத்து அதை வனப்பு வாய்ந்த தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தவனுமாகிய பராக்கிரம பாகுவின் சிலை யென்று நினைத்தல் இயற்கையே. ஆனால், இச்சிலையை உற்று நோக்குங்கால், இஃது ஒரு மன்னனது உருவச்சிலையாயிருத்தல் கூடுமோ என்று ஐயுறுவதற் கிடமுண்டு. ஓர் அரசனுக்குரிய அணிகலனாவது மணிமுடியாவது இச்சிலையிற் காணப்படவில்லை. இவ்வுருவம் சடைமுடி அணிந்து கையில் ஓர் ஏட்டுச்சுவடி தாங்கியதாகக் காணப்படுவதால், இஃதோர் வைதிக முனிவரது சிலை யென்று கொள்ளுதலே பொருத்தமானதென்று சிற்ப ஆராய்ச்சி வல்லுநர்கள் இப்பொழுது கருதுகின்றார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கொண்ட ஓர் ஆங்கிலக்கட்டுரையின் மொழிபெயர்ப்பை இக்கதிரில் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம்.

இவ்வாராய்ச்சியாளரில் ஒருசாரார் இச்சிலை அகத்திய முனிவரது சிலையென்று கொள்கின்றனர். இதுவும் ஆதாரமற்ற கொள்கையாகவே காணப்படுகின்றது. அகத்தியர் சிலைகளில் அவர் ஒரு கையிற் கரகமும் மற்றொரு கையில் அக்கமாலையும் கொண்டவராக அமைக்கப்படுவது மரபாயிருக்க, இவ்வுருவத்தில் அத்தகைய அமைதிகள் இல்லாதிருப்பது கவனிக்கற்பாலது. தவிர, அகத்தியரது சிலை பொலன்னருவாவில் நிறுவப்படுதற்கு ஏற்ற காரணம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

இச்சிலை இலங்கையின் பூர்வீக சரித்திரத்தோடு சம்பந்தப்பட்ட புலத்திய முனிவரது சிலையாயிருக்கலாம் என்பது எமது கொள்கையாகும். புலத்திய முனிவரது வமிசத்தினின்றே இராவணாதியர்கள் தோன்றினார்களென்று உத்தர ராமாயணம் கூறும். புலத்தியரது புத்திரராகிய விசிரவசு முனிவருக்கு இயக்கர் மரபில் குபேரனும், அரக்கர் மரபில் இராவணாதியரும் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். புலத்திய முனிவரும் அவரது புத்திரரும் இலங்கையில் தவஞ்செய்திருக்க வேண்டுமென்பது அறியக்கிடக்கின்றது. புலத்தியர் தவஞ்செய்த இடமே புலத்தி நகரம் என வழங்கப்படுவதாயிற்று. சிங்கள மன்னர்களது வரலாறு கூறும் மகாவமிசத்திற் புலத்தி நகரம் என்று குறிக்கப்பட்ட இடமே பின்னர் பொலன்னருவா என்று சிதைந்த பெயர் கொண்டதென்பது பலரும் அறிந்ததாகும். சிங்கள மன்னர்கள் அநுராசபுரத்தை விட்டகன்று பொலன்னருவாவைத் தமது தலைநகரமாகக் கொண்ட காலத்தில், இந்நகரின் பூர்வீக ஐதிகத்தை முன்னிட்டுப் புலத்திய முனிவரது சிலையைத் தாபித்திருக்கலாம் என்று ஊகித்தற்கிடமுண்டு. புலத்திய முனிவர் அரக்கர்களது மூதாதையாகையால், அவர் உருவம் மிகப் பெரியதாக அமைக்கப்பட்டது பொருத்தமுடையதே.

இவ்வுருவம் ஒரு கற்பாறையினின்று செதுக்கப்பட்டதென்பது படத்தினின்று நன்கு புலனாகும். மானுடவுருவச் சிலைகளுள் இதைக்காட்டிலும் கம்பீரமான தோற்றம் காட்டும் சிலை இந்தியாவிலும் பார்த்தற்கரிது என்று கலையறிஞராகிய ஆனந்த குமாரசுவாமி கூறுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

சு. ந.

# தமிழ் இலக்கியத்தில் பருவ வருணனை

## கூதிர்க் காலம்

**கூதிர்** ஆவது குளிர்காற்று. அது வீசும் காலம் எனவோ அல்லது குளிரை உடைய காலம் எனவோ கொள்க. ஐப்பசி கார்த்திகை மாதங்களே கூதிர்க் காலம் எனப்படும். பருவ மழையால் மாநிலம் அடங்கலும் கடல் போல் நீர் பெருகிவிடவே, இப்பருவத்தில் வீசும் வாடைக்காற்று குளிர்மை கொள்ளுவது இயல்புதானே. இதன் விளைவுகளைச் சிறிது ஆராய்வாம்.

இப்பருவத்தில், வானம் வெளிக்கவே, மாரியிற்றோன்றிய பாயிருள்மாய்ந்துவிடும். வெண்ணிற முகில்களே ஆண்டும் ஈண்டும் ஒவ்வொன்றாக வானத்திற் சஞ்சரிக்கும். யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை முதலாம் நிலையாமைகளுக்குத் தென்மொழி வடமொழிப் புலவர்கள் இப்பருவக் கொண்டல்களை உவமையாகக் காட்டுவார்கள். வானவில்லின் பன்னிற வனப்பை இப்பருவத்திற் காண்டல் அரிது. இரவில் இந்துவின் நிலவு எழில் கொண்டு இலங்கும். வெண்மைக்கு உவமை கூறும் இடங்களில் இப்பருவத்தில் தோன்றும் சந்திரனையே புலவர் பலரும் உதாகரிப்பர். அன்னங்கள் வானத்திற் பறக்கும்; கொக்குகள் பறவா; நல்ல வாடை வீசும்.

நீர் நிலைகள் யாவும், மாதவர் மனம் எனத் தெளிந்த நீரைத் தம்முட்கொண்டு, காண்போர் மனத்தைக் கவரும் காட்சியுடையனவாய் விளங்கும்; தடாகங்களில் செந்தாமரை மலர்கள் மலர்ந்து விரியும்; ஆறுகளின் வேகம் குறைந்துவிடும்; சந்துகளும், தெருக்களும், சாலைகளுஞ் சேறின்றி வண்டிகள் போவதற்கு வாய்ப்புடையனவாக விளங்கும்.

மக்கள் யாவரும் குளிரின் மிகுதியால் தண்ணீர் பருகுவதை விடுத்து வெந்நீர் பருகுவர்; சந்தனம் முதலிய பூச்சுக்களைப்

பூசாது ஒழிவர்; தென்றலை விரும்பித் தேடித் திரியாமல், கதவு களை அடைத்துக்கொண்டு வீட்டினுள்ளேயே கிடப்பர்; விசிறி யைக் கண்கொண்டும் பார்க்கக் கூசுவர்; மாதர்கள் நறுமலர் மாலைகளைக் கூந்தலில் அணியார்.

பசுக்கள் குளிரின் மிகுதியால் கன்றுகளைக் காலால் உதைத் துத் தள்ளும்; மரங்களிற் றங்கின புள்ளுக்கள் குளிர் தாங்க முடியாது நிலத்தே விழும்.

வயல்களில் பயிர்கள் கதிர் முற்றித் தலைசாய்ந்து நிற்கும்; கமுகுகளின் குலைகளிலுள்ள காய்கள் முற்றிப்பழுக்கும்; சுருங்கக் கூறின், உழுவோரின் கிருஷித் தொழில் பயன்படும் பருவம் இஃதே ஆகும்.

மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவர (7—17)

அங்க ணகல்வய லார்பெயர் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற. (21—26)

மனையுறை புறவின் செங்காற் சேவ
லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்ப. (45—48)

கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுத்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க. (57—59)

காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர் நின்றன்றால்......................... (71—72)

—நெடுநல் வாடை.

மூளமர் தொலைவுற முரசு விந்தபோல்
கோளமைக் கோண்முகில் குமுற லோவின
நீளடு கணையெனத் துளியு நீங்கின
வாளுறை யுற்றென மறைந்த மின்னெலாம்.

கடந்திறந் தெழுகளி றனைய கார்முகில்
இடந்திறந் தேகலிற் பொலிந்த திந்துவும்
நடந்திற னவில்வுறு நங்கை மார்முகம்
படந்திறந் துருவலிற் பொலியும் பான்மைபோல்.

மன்னவன் றலைமகன் வருத்த மாற்றுவான்
அந்நெறிப் பருவம் வந்தணுகிற் றாகலால்
பொன்னினை நாடிய போது மென்பபோல்
அன்னமுந் திசைதிசை யகன்ற விண்ணின்வாய்.

சொன்னிறை கேள்வியிற் றொடர்ந்த மாந்தரின்
இன்னிறப் பசலை யுற்றிருந்த மாதரின்
தன்னிறம் பயப்பய நீங்கித் தள்ளரும்
பொன்னிறம் பொருந்தின பூதத் தாறெலாம்.

— கம்பராமாயணம்.

உடலலை குளிரினுக் குடைந்த வில்லவர்
கடலினு ணெருப்பினைத் தணக்க லஞ்சினர்
கடவுளர் பசிப்பிணி களையும் வேள்வியிற்
சுடரழல் பிரிகலாத் தொழுகு லத்தர்போல்.

தண்டையஞ் சிறடித் தருண மைந்தரும்
வெண்டயிர் வெண்ணெய்மோர் வெறுத்து வேட்டனர்
உண்டொறும் வெய்யன வுணவு நீரிடங்
கொண்டன வுயிர்களுங் குளிர்க்கு டைந்தனவே,

எரிசுடர் நெருப்பைநீ ரென்ன வேட்டனர்
தருகுளிர் நீரினைத் தழலி னஞ்சினர்
இருசெவி களுந்துகி லிறுகச் சுற்றுபு
விரனிரை மறைபட மெய்ப்பை புக்கனர்.

—சீகாளத்திப் புராணம்.

வை. இ.

## 'ஞாயிற்'றைக் குறித்த விதப்புரை

தமிழ் மொழியை வளர்ப்பதற்கு இத்தாள் (ஞாயிறு) ஒரு சிறந்த சாதனம் என்பதே எனது துணிபு. தமிழ்மொழியின் உயர்நிலையையும், பழைமையையும், தூய்மையையும் இதுகாறும் காத்துவந்தது யாழ்ப்பாண மேயாம். இனிமேல் தமிழ் வளர்ச்சிக்கு ஆகவேண்டியவைகளை விடா முயற்சியுடன் செய்துவரவேண்டியது சிறந்த உயரிய நோக்கங்களுடன் நிறுவப்பட்டிருக்குங் 'கலாநிலை'யத்தின் பொறுப்பாம்.

—த. பொன்னம்பலம்பிள்ளை, M. R. A. S.,
(Retired Excise Commissioner,
Travancore.)

# கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி

திரு. சு. நடேசபிள்ளை அவர்கள், பி. ஏ., பி எல்,
இயற்றியது

எண்சீர் ஆசிரிய விருத்தம்

1. திருவரு ளாமென விடிந்தது காலை
திகழொளி பரப்புசெங் கதிரவ னெழுந்தான்
குருகுகள் மதுபொழி மலர்வனத் திடையிற்
கூடிநற் கீதங்க ளியம்பின கேளாய்
உருகிநைந் தடியவ ருன்புகழ் கூறி
ஒளிவளர் கழலிணைத் தொழுதிட வணைந்தார்
கரிமிகு பயில்கிரிக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

2. மாயைசேர் பேரிருள் மறைந்தது மாந்தர்
மணிதிகழ் கங்கைவந் தணுகினர் திரண்டு
வேயமை தோளினர் வீணைமென் கரத்தர்
விரும்பியுன் மெய்ப்புகழ்ப் பாடிட விரைந்தார்
சேயநின் பொன்னடிக் கதிரொளி பரப்பிச்
சுருதிக ளியம்பின சூரிய னெழுந்தான்
பாய்மரை பலதிரி கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

3. குழைந்தநல் லடியரின் முகமெனக் கமலம்
கண்டுளி கொண்டன களிப்புடன் மலர்ந்து
தழைமலி தருக்களின் கிளையிடை யருணன்
றன்கதிர் நுழைந்திடப் பைந்துண ருதிரும்
விழைவொடு வேடரின் மகளிர்கள் பலரும்
விருந்துதேன் கனிவகை வெந்தினை கொணர்ந்தார்

---

1. குருகள் - பக்ஷிகள்; கரி - யானை.
2. மரை - மான்.
3. துணர் - பூங்கொத்து.

மழைமுகிற் பலதவழ் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

4. அரனொலி யெங்கணு மலைகடல் போல
ஆர்த்திடு மன்பர்க ளடைந்தன ரருகில்
முரசுகள் பல்லியம் முழங்கின வெழுந்து
முருகுடை மகளிரின் மெய்யிடை முகிழ்த்த
குரவமுங் கோங்கமுங் காவியங் கண்ணும்
கூத்தியல் புரிவநின் குரைகழல் போற்றி
திரைபினர்த் துயின்றிடுங் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

5. புகையிருள் பறந்தது பொங்குகர்ப் பூரப்
புகையொளி மிகுந்தது புங்கவ ரடியார்
வகைபல விரைதரு புகையொடு புகுந்தார்
வலிமிகு தொண்டர்தீப் புகையிடைக் குளித்தார்
தொகையுடை மயிற்குலம் முகிலெனப் புகையை
மதித்தன நடித்தன மகிழ்குயி லார்த்த
பகையசு ரொழித்திடு கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

6. கானிடைக் கோழிகள் கூவின கழறிக்
கரைந்தன காகமுங் கறங்கிய சங்கம்
தேனிமிர் வண்டுகள் மொய்த்தன மலரில்
தீங்குழற் பாணிகள் பாடின மயங்கி
மோனிகள் முனிவரர் முப்பதின் மூவர்
மேவின ருன்கழல் மெய்யடி வழுத்த
வானுயர் நெடுங்கிரிக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

7. அருமறை யோதிடு மந்தண ரொருபால்
அமுதெனுந் தமிழிசை யன்பர்க ளொருபால்
தருமமே சரணெனுஞ் சாக்கிய ரொருபால்
தருக்கிடுஞ் சமயிகள் சார்ந்தன ரொருபால்

---

4. முருகு - இளமை; குரவம், கோங்கம் - மலர் விசேடம்; ஈண்டு பாதத்தையும் தனத்தையும் குறிப்பன.
5. விரை - வாசனை; தொகை - தோகை.
7. சாக்கியர் - பௌத்தர்.

திருப்புக ழொடுதொழுந் தேவர்க ளொருபால்
திருமகள் கலைமகள் சயமக ளொருபால்
விருப்பொடு வணங்கிடுங் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

8. உலகினி லுறுபொரு ளனைதரு ளெனவே
உணர்ந்திடு மடியவ ருளத்திடை யெழுந்த
பலகதிர்ப் பகலவ னினதருக் கரந்து
பற்பல வற்புதம் புரிவதுன் றிறமே
நிலமிசை நின்னடி யோங்களெம் வினைகள்
நைந்திடத் திருக்கடை நோக்கம தருள்வாய்
புலவர்கள் பரவுநற் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

9. உளதென விலதென வுண்மையை யுணரா
துளறிடு மதத்தர்க ளுரையினைக் கடந்த
பழமறைப் பொருளினைப் பத்தர்க ளுணர்வார்
பாரிட மனைத்தினும் படர்ந்தபே ரொளியே
உளமென வுயிரென வுணர்வென வுன்னை
உலகென வுருவென வருவென வழைத்தோம்
களமெனக் குறித்திடுங் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

10. முன்னைநா ளசுரர்தம் பொய்யினைக் கடிந்துன்
மெய்யினை நிறுத்திய மொய்கழ லரசே
அன்னியர் பொய்ந்நெறி யழித்திடற் கெழுந்துன்
அருளுருக் கொள்ளுதற் கமையுநா ளணித்தால்
தன்னிக ரில்லதோர் தேவினைத் தொழுதோம்
தண்ணருள் சுரந்தெமைக் காப்பதுன் பரமாம்
பொன்மயக் கிரியுடைக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

---

10. அன்னியர் - ஈண்டு நாத்திகர்.

# செழுங்கதிர்ச் செல்வம்

## ஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்

இயற்றியது

(193-ம் பக்கத் தொடர்ச்சி)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

13. மண்ணாய் மறைந்து மண்காக்கும்
மழையாய் வளியாய் வளம்பெருக்கி
உண்ணா நின்றாய்; போகமெலாம்;
உயிராய்க் கோடி யுருவமெடுத்(து)
எண்ணா நின்றவ் வுயிரையெல்லாம்
எற்றத் தாழ்வி லிருத்துகின்றாய்;
அண்ணா நீயார்? அவையாரென்(று)
அடியேற் கருளாய்; செழுங்கதிரே!

14. உலகிற் பொழுதை யுளதாக்கி
யுனக்கஃ திலதா யுயர்ந்தொளிர்வோய்!
கலகத் துயிர்க்காங் கவலைக்குக்
காலாய்த் தீர்க்கு மருமருந்தே!
இலதென் றுளதென் றெதிர்ப்போருக்(கு)
இலதன் றாகி நடுவிருந்து
நலமே புரியும் நாயகமே!
ஞானக் கொழுந்தே செழுங்கதிரே!

15. கதிரா மேனி பிடித்தேறிக்
காலைப் பிடித்தென் கவலையெலாம்
அதமே புரிந்திவ் வவனிக்கே
யாடுங் கூத்தைக் கண்டுவரும்
விதமாக் கனவும் பகற்கண்டு
விழித்துக் காணா தயர்கின்றேன்;
சிதையா வண்டக் கழங்காடுந்
திருவே! குருவே! செழுங்கதிரே!

16. கோழிக் குலமே! பிறருரிமை
கொள்ளை கொளுஞ் சூரியகாந்தி!
ஏழைக் குயிலே! நீவிரெலாம்
எம்மாற் காந்து பெருங்காதல்
ஆழிக் குள்ளே யவனையணைந்(து)
அமிழ்த முண்ண லறமேயோ?
மாழைக் கண்ணி யுணர்கிலென்னும்?
மணமாண் பிதுவோ செழுங்கதிரே?

17. இன்ப துன்ப மியல்பாயே
இல்லா வுனக்கென் றுன்பமெலாம்
என்பு முருக வெடுத்துரைத்தும்
என்னுந் துன்பத் தியல்பையுணர்ந்(து)
அன்பு புரிதற் கெழுகில்லாய்!
பகலே யன்றி யிரவறியாய்!
துன்பக் கடற்காந் துரும்பானேன்
துறைகாண் கில்லேன் செழுங்கதிரே!

18. மாலைப் பொழுதி லிளந்திங்கண்
மைந்துக் கன்று கதிர்வெள்ளப்
பாலைப் பருகும் வேட்கைவிஞ்சிப்
படர்ந்து தொடர முன்சென்று
வேலைக் குள்ளே புகுந்தொளித்து
விளையாட் டயரும் பெருந்தாயே!
மூலச் சுடரே! முழுமணியே!
மூவா முதலே! செழுங்கதிரே!

19. அன்னே யுதைக்காண் கடற்குளமிழ்ந்(து)
அந்தோ வாவி பதைபதைப்புற்(று)
இன்னுங் குறுத லெனச்சுட்டி
யிரங்கென் சிறுமித் துயர்கண்டும்
பொன்னே! கடற்குட் டாவாது
புலம்பா நின்றே னன்றியிலேன்
என்னே! என்னே! என்னேயிஃ(து)
இதுவோ மணமாண் செழுங்கதிரே!

20. காலைக் குணக்குக் கடலகத்துங்
கவின்சான் மாலைக் குடகடலின்
பாலுந் தோன்றி மறைந்துவரும்
பயன்றேய் காட்சி வள்ளையெலாம்
கோலிப் புனைந்து கூத்தாடிக்
கும்பிட் டேனு மாறுதற்குச்
சால முயன்று மஃதடையுந்
தவமொன் றிலனே செழுங்கதிரே !

21. நிலமட் டத்துக் கடன்முகட்டை
நீசே ரியல்பைக் குறிக்கொண்டாள் ;
கலைவற் றுன்னைக் கூடுதற்குக்
காலாற் பறந்து கார்த்திருந்தாள்;
நலிவுற் றுளென் சிறுபேதை
நயவாய் நீஅப் பாலெழுந்து
செலலுற் றுய்விண் ணெனக்களைத்தாள் ;
யானென் செய்வேன் செழுங்கதிரே !

22. கொல்லுஞ் சினத்துக் கான்விலங்கைக்
கோளங் குணாள் ஓடிப்போய்ப்
புல்லிப் போற்றி யென்னுதன்
பூங்கை புனைந்த பாவையெனச்
சொல்லித் தனையு மறக்கஅந்தத்
துட்ட விலங்கும் நல்விதியால்
அல்லல் செய்தின் றென்பேதைக்(கு)
அறிவேன் கெடுத்தாய் செழுங்கதிரே !

23. தேவுப் படிவந் திருவாற்றல்
செறிந்தாய் நீயென் றுனைவேட்டென்
பாவுக் குள்ளாய்க் கியான்காதல்
படைத்தே னல்லே னிழிவடிவும்
பாவப் பழியு மழிசெயலும்
படைத்தா யேனு மாற்றகிலேன்
ஆவிக் குள்ளே யானறியா
தமைந்த தன்பே; செழுங்கதிரே !

24. போகப் போக வென்னுடனே
தானும் போந்தும் யான்றிரும்ப
மாகத் தாற்றிற் ருன்றிரும்பி
வந்தாய் வழிக்கு வருவாயாப்
பாகொத் தாய்நான் பார்த்திருந்தேன்
மாயப் பண்பான் மறைந்தொளித்தாய்;
மேகப் பித்தர்க் குணர்வுண்டோ
மொழியா யழகார் செழுங்கதிரே!

25. வந்தா லின்பம் பெறலாமா?
மனத்தா னினித்துக் காலமெல்லாஞ்
சிந்தா குலமுற் றுழந்ததன்றிச்
செழிப்புற் றிருந்த பாடில்லை.
எந்தா யன்பென் பதுதுன்பத்
திருந்தே விளையு மியல்பிற்றே?
பிந்தா வாய்மைப் பெரும்பொருளே!
பேசா வரத்தாய்! செழுங்கதிரே!

26. வெய்ய பகலிற் பலமுயன்று
மெலிந்த வுலகோ ரிளைப்பாறி
எய்து மிருளில் திங்களுடு
என்னும் பள்ளிச் சிறுவிளக்கம்
பைய்ய வொளிரும் படிதூக்கிப்
பாங்காத் துயில்கென் றவரைவிடுத்(து)
ஐய வொதுங்கிப் புறங்காக்கும்
அண்ண லேயென் செழுங்கதிரே!

27. உரிமை யாள ருளங்கலங்கி
யோட வதைத்தன் னூர்குடிலாற்
பிரிய மாகத் தனதுகுடில்
பெருக்கி வாழும் வாழ்வன்றித்
தெரியிற் பிறிதோர் வாழ்வில்லாத்
தீய வுலகில் வாழ்வதெங்ஙன்?
அரிய பொருளே! செழுமறையி
னகத்தார் சோதிச் செழுங்கதிரே!

# தேவியைப் பிழைபொறுக்க வேண்டுதல்*

## துதி

யாழ்ப்பாணம் தலைமைத் தமிழ்வித்தியாதரிசி
பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள்

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

1. மந்திர மியந்தி ரஞ்சொல் மாண்துதி யறியே னென்னே!
வந்திட வழைத்தல் முன்னல் வான்புகழ்க் காதை தேரேன்
நொந்துரை புலம்பல் நோன்சால் முத்திரை யறியே னேனும்
அந்திகத் துன்ப கற்று னடிப்பட லறிவே னன்னே.

2. ஒத்திடு விதியோர் வின்மை யுண்மையால் மிடியாற் சோம்பால்
வைத்திடு கடப்பா டாற்றும் வலியிலா தடிபி ழைத்தேன்
இத்திறம் பொறுப்பா யெல்லா மேன்றருள் சிவையே யன்னே
குத்திரப் புதல்வ ருண்டாற் குணமிலாத் தாயு முண்டோ?

3. குணங்கிளர் புதல்வர் பல்லோர் குவலயந் தனிலு னக்குண்
டிணங்கிய குணமி லாரு ளேற்றமிக் குடைய சேய்நான்
நுணங்கிடைச் சிவையே நிற்கு நோன்மையன் றெனைத்து றத்தல்
குணங்கெடு புதல்வ ருண்டாற் குணமிலாத் தாயு முண்டோ?

4. முச்சக முதல்வி யன்னே முயன்றிலேன் பதத்துன் சேவை
உச்சித தேவி யொண்பொ னுன்பொருட் டுதவி லேனல்
இச்சிறு மதிசே ரென்பா லிணையிலா வருள்நீ செய்தாய்
குச்சிதப் புதல்வ ருண்டாற் குணமிலாத் தாயு முண்டோ?

---

* இது ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் வடமொழியில் அருளிச்செய்த "தேவி யபராத க்ஷமாபண ஸ்தோத்திர"த்தை மொழிபெயர்த்து யாத்தது. அம்பிகையின் அருட்குணங்களையும் சரணடைந்த அடியாரை ஆதரித்து உய்விக்கும் மட்டற்ற அவளதன்பின் திறனையும் வியந்து போற்றுவது.

1. முன்னல் - தியானித்தல்.

5. அரவம தாருந் தேவ ராகுலச் சேவை தன்னால்
விரவவர் நீத்தெண் பானோ டைந்துமேல் வயதும் மேவி
உரவரி தாகிப் போதா யுன்னரு ளெனக்கின் றேலா
தரவரி தாவேன் யாரைச் சரண்புகேன் கணேசன் றாயே.

6. இழிமொழி பிசற்று நீசன் தேனன இன்சொ லேல்வன்
கழிமிடி யுற்றோ னுய்ந்தே கனககோ டியிற்க ளிப்பன்
எழிலுமை நின்பேர் காதி லெட்டிய பலன்மற் றீதால்
மொழிமனுச் செபிக்கு முண்மை முறையுணர் பவரார் மோயே.

7. அடலைமெய்ப் பூச்சு நஞ்ச மயில்வது சூழ்திக் காடை
சடைமுடி கழுத்தில் நாகந் தயங்கணி கபாலி மற்றும்
அடலுறு பூத நாத ஞமரன் அகிலே சத்வம்
அடைதிறம் பவானி! யுன்றன் அணிகரம் பிடித்த சீரே.

8 பீடுறு முத்தி வேண்டேன் பெருஞ்செல்வப் பேறு வேண்டேன்
கூடுறு ஞான மின்பம் குளிர்மதி முகத்தாய் வேண்டேன்
தேடுருத் திராணி தேவி சிவைசிவ பவானி யென்றே
பாடுறும் பிறவி சார்க பணிந்துவேண் டுவனீ தொன்றே.

9. விதமுறு முபசா ரத்தால் விதிமுறை பூசித் தில்லேன்
இதமறு சிந்தை சொல்லா லெப்பிழை செய்தி லேனால்
சிதமறு நிறத்தி நீயே திக்கிலேன் சிறியே னென்பால்
சதமுற வருள்செய் கின்றாய் தக்கதீ துனக்கே யன்றோ ?

10. அல்லலங் கடலி லாழ்ந்தே யையைநின் றனையுள் கின்றேன்
மல்லலங் கருணை வெள்ள வடிவினாய் மடைமை யீது
புல்லலில் லாதென் பால்நீ புரந்தருள் புவியிற் சேயர்
செல்லலம் பசிதா கத்தாற் செனனியை நினைப்ப ரன்றே?

---

5. [தேவர் (அது) அரவமதாருஞ் சேவை ஆதலந்தன்னால் விரவு அவர் (தேவரை) நீத்து எண்பானோடைந்தும் (85) மேல் வயதும் மேவி உரவு அரிதாகு இப்போது ஆய் (தாயே!) உன்னருள் எனக்கு இன்றேல், ஆதரவு அரிதாவேன் (யான்) யாரைச் சரண் புகுவேன் எனப் பிரித்துப் பொருள் கொள்க.]

6. மனு - மந்திரம்; மோய் - தாய்.

9. சிதம் - வெள்ளை; மறு - எதிர்; சிதமறு - பச்சை, கருமை.

10. செல்லல் - துன்பம்.

கலி விருத்தம்

11. உலக வன்னை விசித்திர மோவிது
இலகு மாரரு ளென்வயி னுக்கினை
அலகி லாப்பழி யார்ந்துள சேயையும்
விலக நீக்குமோ வீங்கருட் டாயுமே.

12. என்னை யொக்கும் பதகரு மிங்கிலை
உன்னை யொக்கும் பவமறுப் போரிலை
இன்ன துன்னி யெழிற்பெருந் தேவிநீ
என்ன தொக்கு மதுபுரி யென்றுமே.

முற்றிற்று.

'ஞாயிற்'று விதப்புரை

ஈழமண்டலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ் அபிவிருத்திக்காகப் பாடு படும் கலாநிலையத்தாரால் "ஞாயிறு" என்னும் பத்திரிகை உயர்தரத்தில் புதிய முறையில் வெளியிடப்படுகின்றது. சென்னையில் ஆங்கிலத்தில் வெளி யிடப்பெறும் "திருவேணி" யைப் போலவே, முதன்மையாக இலக்கியம், பொதுவாகச் சமயம், ஓவியம், நாகரீகம், சரித்திரம் முதலியவைகளின் விருத்தியைக் கருதி இருமாதங்களுக் கொருமுறை "ஞாயிறு" பதிப்பிக் கப்படுகிறது. தமிழகத்திலே எல்லா வழிகளிலுஞ் சிறந்த இம்மாதிரியான பத்திரிகை வெளிவந்ததே கிடையாது. அருமையான கட்டுரைகள் பத் திரிகையை அலங்கரிக்கின்றன; பால்போன்ற காகிதம்; முத்துப் போன்ற எழுத்துக்கள்; அளவும் அமைப்பும் வசீகரிக்கத் தக்கன. இஞ் "ஞாயிறு" ஞாயிறு போன்று எல்லாத் தமிழ் மக்களுக்கும் ஒளியை அளிப்பதாக!

—பாரதி.

# சங்க காலத்துத் தெய்வ வழிபாடு

சுவாமி விபுலாநந்தர் அவர்கள் எழுதியது

"ஆலமுங் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்!
எவ்வயி னோயு நீயே" (பரிபாடல், 4. 67—70.)

"ஆலுங் கடம்பும் யாற்றிடைக் குறையுங் குன்றும் பிறவுமாகிய அவ்விடங்களைப் பொருந்திய பலதெய்வங்களாக வகுத்துச் சொல்லப்படும் பெயரையுடையோய்!" என்றமையின் சங்ககாலத்துத் தமிழ்மக்கள் கடவுள் ஒருவனேயென்னும் உண்மையை நன்குணர்ந்தாரென்பது வெளிப்படை. பலதெய்வங்களாக வகுத்துச் சொல்லப்படும் பெயரையுடையோன் ஒருவனேயென உணர்ந்த அறிஞர் அவனை அகத்தும் புறத்தும் வழிபடல் மேற்கொள்வாராயினர். மதிலும் மண்டபமுமாகி யமைந்த கோயில்கள் இயைவதன் முன்னர்ப் பழந்தமிழர் ஆலமர் நீழலினும் கடப்பமர நீழலினும் யாற்றிடைக் குறையகத்தும் குன்றத்தின் மிசையும் பிறவிடத்தும் சிலையுரு நிறுத்தியும் அஃதின்றியும் தெய்வத்தை வழிபட்டுவந்தனர்.

"காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புந்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்"
(திருமுருகாற்றுப்படை, 223—226.)

என்பதனாலும்,

"ஆலமர் செல்வன்", "கடம்பமர் காளை", என்பவற்றாலும் இயற்கை வனப்பு எவ்வெவ்விடத்துளதோ அவ்வவ்விடத்திலெல்லாம் தமிழ்மக்கள் தெய்வத்தை முன்னிட்டு வழிபாடியற்றினரென்பது அறியக்கிடக்கின்றது.

இயற்கையி னமைந்த வனப்புடைப் பொருள்களுள் "அறி வெல்லையா லறியப்படாத புகழுடனே பொலிந்து நிலவெல்லையைத் தாங்கிய நிலைமை நீங்காத தொல்லிசைப்புலவர் ஆராய்ந்துரைத்த நெடிய குன்றங்கள்" பலவகைச்சிறப்புடையன. மலரையுடைய அகன்ற தடாகங்களும் மேகங்கள் படியுஞ் சிகரங்களும் பொருந்தி நிலத்திலுள்ளாரது பசிவெம்மையை யகற்றும் நீர்மையவாகித் தெய் வங்கள் தாமாக விரும்பியுறைதற்குரிய குலவரைகள் சிலவுள. அவைதம்முள் சங்கமிருந்து தமிழாராய்ந்த கூடலம்பதிக்கு அணித் தாகிய பரங்குன்றமும் இருங்குன்றமும் கழிபெருஞ் சிறப்புடையன.

"மாடமலி மறுகிற் கூடற் குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமல
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்"

(திருமுருகாற்றுப்படை, 71—79)

பரங்குன்றம் முருகக்கடவுள் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பது, திருமாலிருஞ்சோலைமலை யென்னும் இருங்குன்றம் மாயோனையும் வாலியோனையும் தாங்கிநிற்பது; இவ்விருகுன்றமும் இவற்றின்மீது எழுந்தருளிய தெய்வங்களும் தமிழ்ப்புலவரால் உவந்து பாடப்பட்டன. பரங்குன்றத்தின் அடியின்கண் மாலைகடோறும் பொருந்தியிருத்தலைத் தேவருலகத் துறைதலினும் சிறந்ததாகக் கொண்ட தமிழ்ப்புலவர், "மாலை மாலை யடியுறை யியைநர், மேலோ ருறையுளும் வேண்டுநர் யாஅர்" (பரிபாட்ல், 17: 7—6) எனக் கூறினர். "அரிதிற்பெறுதுறக்கத்தை எளிதிற் பெறுதலுரிமையான் மாலிருங் குன்றத்தை எல்லாருங்கேட்க ஏத்தக்கடவேம்" என இருங்குன்றத்தின் சீர் கூறப்பட்டது. யாண்டும் நிறைந்த அரு வடிவாகி யமைந்த பிறவாயாக்கைப் பெரியோனும், பரங்குன்றமர்ந்த அறுமுகச் செவ்வேளும், இருங்குன்றமர்ந்த மாயோனும் வாலி யோனும் ஞாலங்காக்கும் கடவுளராகக் கருதப்பட்டனர்.

"ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையு மேனி

யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வர்" (புறம், 56)

என்னும் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் வாய்மொழியாலும்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலு
மறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்"
(சிலப்பதிகாரம், ரு: 68—72)

எனவும்,

"நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு
முவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமுங்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"
(சிலப்பதிகாரம், கச: 7—10)

எனவும் இளங்கோவடிகள் கூறியமையாலும்,

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக"
(மணிமேகலை, க: 54—55)

என்னும் சீத்தலைச் சாத்தனார் உரையாலும்,

'முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் றடொழா தார்க்கு" (இன்னாநாற்பது, க

என்னும் கபிலருரையாலும் இவ்வுண்மையை யுணர்க.

பிறவாயாக்கைப் பெரியோனாகிய இறைவனே யாவராலும் முதல்வனாகக் கருதப்பட்டனன். குறிஞ்சி நிலத்துறைவோர் பூவும் புகையுங்கொண்டு முருகனையேத்தி வழிபட்டனர். முல்லை நிலத்

துறையுங் கோவலர் குரவைக்கூத்தாடி மாயோனையும் வாலி யோனையும் வழிபட்டனர்.

மருதநிலத்துத் தெய்வமாகிய இந்திரனும், நெய்தல் நிலத்துத் தெய்வமாகிய வருணனும், பாலைத் தெய்வமாகிய கொற்றவையும் அவ்வந்நிலத்து மக்களால் வழிபாடு செய்யப்பெற்ற வரலாற்றினை சங்கத்தமிழ் நூல்களிற் பரக்கக் காணலாகும். மூத்த பிள்ளையா ராகிய விநாயகக் கடவுளது வழிபாடு சங்கநூல்களுட் பயின்று வாராமை அறிஞரான் ஆராயற்பாலதொன்றாகும்.

# பெருங்காப்பிய ஆராய்ச்சி

வியாகரண மகோபாத்தியாய

வை. இராமசாமிசர்மா அவர்கள் எழுதியது

## மணிமேகலை

(207-ம் பக்கத் தொடர்ச்சி)

**சா**ர்க்கதிரில் பொருள் வழுக்கள் இன்னவை என்றும், வாக்ய வழுக்கள் இன்னவை என்றும், குணங்கள் இன்னவை என்றும், அணிக்கும் குணத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இன்னவை என்றும், குணம் என்பது எழுத்தையோ, சொல்லையோ, யாப்பையோ பற்றிநிற்கும் என்றும், அது மூவகைப்படும் என்றும், ஒன்பான்சுவைதோறும் ஏதானும் ஓர் குணம் ஒளிர்ந்துகொண்டிருக்கும் என்றும் விரித்துரைத்தாம். இக்கூதிர்க்கதிரில் அணியைப்பற்றி ஆராய்வாம்.

நல்லிசைப் புலவர்களின் காப்பியங்களை நவிலுந்தோறும் சிற்சிலருடைய மனம் மலர்ந்து மகிழ் பூப்பதை யாம் அனைவரும் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். இம்மன மகிழ்ச்சியைக் கவி மனங்கொண்டு தாமும் உய்த்துணர்ந்து அநுபவிக்கும் ஆற்றல் உடையவரே உணர்வுடை மாந்தர் என உரைக்கப்படுவர். உணர்வுடைமாந்தரின் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கும் கவிதாதர்மமே சமத்காரம் எனப்படும். (சமத்காரம்=அழகு). சமத்காரத்திற்கு இடம் அளிக்கும் சொற்றொடரின் அமைப்பே அணியாம். சமத்காரம், காப்பிய உடலான சொற்பொருள்களில் யாதேனும் ஒன்றைப் பற்றியே நிற்கும். அஃது சொல்லைப்பற்றி நிற்பின் சொல் அணி எனப்படும்; பொருளைப்பற்றி நிற்பின் பொருள் அணி எனப்படும். எனவே, சொற்பொருள்களில் ஒன்றைப்பற்றி நிற்பதும், சமத்காரத்தை விளைவிப்பதுமான கவிதாதர்மமே அணியின் பொதுஇலக்கணம் எனக் கொள்க. உவமை முதலாம் அணி

களின் சிறப்பிலக்கணத்தோடு இப் பொதுஇலக்கணத்தையும் கூட்டிச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அல்லாவிடில், "காக்கைச் சிறகன்ன கருமயிர்," 'பூசைபோலப் பாய்ந்தான்', 'குயில் காகம் போலக் கரியது' என்னும் வசனங்களிலும் உவமையின் இலக்கணம் அமைந்து கிடப்பதால் இவைகளும் உவமை அணிக்கு உதாரணங்களாகிவிடும். சமத்காரத்தை விளைவிப்பதும் என்ற பொது இலக்கணத்தை உவமையின் இலக்கணத்தோடு கூட்டவே இவ் வசனங்களில் சமத்காரம் இல்லாமையால் இவை உதாரணங்கள் ஆகா.

சொல் அணி, பொருள் அணி என்னும் இருவகைத்தாய அணிகளுள் பொருள் அணிகளே மிகச் சிறப்புடையன என்று உணர்வுடையோர் கூறுவர். சொல் அணிகளும் ஓர் அளவுக்குச் சிறப்புடையனவே. யாம் இக்கட்டுரையில் இருவகை அணிகளையும் ஒவ்வொன்ருக எடுத்துக்காட்டி அவைகளின் இலக்கணத்தையும், உதாரணங்களையும் விரிவாக எழுதக்கருதிலேம். அணி இலக்கண நூல்களிலிருந்து அவற்றின் விரிவைக்கண்டு கொள்ளலாமன்றோ? பின்னர், யாம் இங்கு வரையக்கருதுவதெல்லாம் அவை பலவாகப் பல்கிய விதமும், அவைகளுக்குள்ள பொதுத்தன்மையும், அவை ஒவ்வொன்றிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளுமேயாம்.

காப்பியங்களைப் பயிலுகின்றவர், காப்பிய உடலான சொற்பொருள்களைப்பற்றி நின்று, தமது உள்ளத்தில் சமத்காரத்தை விளைக்கும் அணிகளைப் பொதுவாகச் சிறிதளவேனும் அறியவேண்டுவது அவசியம். அவைகளைப்பற்றிய பொது அறிவு சிறிதளவும் வாய்க்கப் பெறாத ஒருவன், காப்பியங்களைப் படிப்பது குருடன் கண்ட காட்சியாகவே முடியும் என்பது திண்ணம். அணியும் காப்பியத்தின் ஓர் உறுப்பன்றோ? காப்பிய உறுப்புக்களை நன்கு பயிலாமல் காப்பியத்தைப் பயிலுவது எங்ஙனம்?

நூற்றுக்கணக்கான பொருள் அணிகள் யாவும், கூர்ந்து நோக்குமிடத்து, உவமை, அதிசயம், தன்மை, சிலேடை என்னும் நான்கு அணிகளிலிருந்தே படிப்படியாகப் பல்கிப் பெருகின என்பது தோற்றுகின்றது. உலகில், பொன் ஒன்றே உருவ வேறுபாட்டால் வளை என்றும், கணையாழி என்றும், குண்டலம் என்

றும், கொடி என்றும் அழைக்கப்படுவது போலவும், மண் ஒன்றே சட்டி என்றும், பானை என்றும், குடம் என்றும் அழைக்கப்படுவது போலவும், உவமை அணி ஒன்றே பொதுநீங்கு உவமை, விபரீத உவமை, உருவகம், அவநுதி, தற்குறிப்பேற்றம், வேற்றுமை என்னும் பலபெயர்களால் சிற்சில காரணம் பற்றி அழைக்கப்படுகின்றது. அதிசயமும் அவ்வாறே, தன்மையும் அப்படியே, சிலேடையும் அவ்விதமேயாம். பொற்கொல்லர் பொன்கொண்டு கங்கணம் முதலாம் பற்பல நவநாகரிக அணிகளை அவற்றை அணியுநர் விருப்பத்திற்கு எற்றவாறு அமைப்பதுபோல், நல்லிசைப் புலவர்களும் உவமையிலிருந்தும், அதிசயத்திலிருந்தும், தன்மையிலிருந்தும், சிலேடையிலிருந்தும் பற்பல அணிகளை உணர்வுடையோர் மனமகிழ்ச்சிக்கேற்றவாறு காப்பியங்களில் பிரித்துக் காட்டிவிட்டார்கள். உலகம் பலவிதம் அன்றோ!

உவமை அணி ஒன்றே தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது என்றும், ஏனைய அணிகள் இடைக்காலத்திருந்த சில தமிழ்ப்புலவர்களால் வடமொழிக் காப்பியங்களிலிருந்து தமிழில் வலிந்து புகுத்தப்பட்டன என்றும், இவ்வணிகளை மேற்கொண்டதால் தமிழின் அழகு அருகிவிட்டது என்றும், தமிழுக்கு அவை ஒருபோதும் சிறப்புச் செய்யா என்றும் சிற்சிலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். இன்னோர் கூற்றைச் சிறிது ஆராய்வாம்.

அணி என்றால் ஆபரணம். நவநாகரிகம் படைத்த இவ்விருபதாம் நூற்றாண்டில் உள்ள மெல்லியல் மாதர்கள், முதலாம் நூற்றாண்டிலிருந்த மாதர்கள் அணிந்த ஆபரணங்களை அணிய ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்பது அநுபவப் பிரசித்தம். அக்காலத்திருந்த அணிவகைகள் யாவும், தம்மைத் தேடுவார் யாரும் இல்லாமையால், பண்டைய இலக்கியங்களில் குடிபுகுந்துவிட்டன. அவைகளின் பெயரைக் கேட்கவே இக்காலத்து மாதர் கூசுவர். இதுகாலை ஒவ்வொருநாளும் ஒவ்வொரு புதுமாதிரியான ஆபரணம் வெளிப்புறப்படுகின்றது. வளையில் ஓர் ஆயிரம்; சங்கிலியில் ஓர் ஆயிரம்; மோதிரத்தில் ஓர் ஆயிரம்; அணியுநர் விருப்புக்குத் தக்கபடி அணிகள் அமைக்கப்படுகின்றன. இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எம் மூதாதைகளால் அணியப்பட்டது என்று பழைமை

கொண்டாடிப் புதுமையான ஓர் அணியை வெறுப்பவர் ஒரு சிலரும் இல்லை. உலகில் நாகரிகம் வளர வளர பாஷையும் வளர்ந்து கொண்டே வரும். மக்கள் நாகரிகத்திற்கு ஏற்றபடி பாஷை வளர்ச்சியடையாமல், தான் முன் இருந்த இடம் விட்டுச் சிறிதும் பெயராது நின்றுவிடுமாயின், அதற்கு இறுதி அதிக தூரத்தில் இல்லை என்று இயம்புவர் மொழிநூற்புலவர். இஃது உண்மையே. உயிருள்ள பொருள் வளர்வதையும், உயிரற்றது உள்ளபடியே இருப்பதையும் யாம் அனைவரும் கண்டிருக்கிறோமன்றோ? பாஷை வளர வேண்டுமாயின் புதியனதாமே புகுதல் இயற்கை. உள்ளபடியே இருக்கவேண்டியதாயின் அழிந்தொழிவதும் திண்ணம். அறிவுடையோர் தம் உயிர் பிழைக்க மருந்தருந்துவரேயன்றி, தாம் சாக மருந்தருந்தார். பழந்தமிழ்ப்புலவர் தங்கள் காப்பியங்களை உவமை அணிகொண்டு அலங்கரித்தார்கள். அது அக்காலத்திற்குப் பொருத்த மானதே. பிற்காலத்துப் புலவர் அதையே சிறிது திருத்தியும் புதுக்கியும் காலத்திற்கு ஏற்றபடி வெவ்வேறு பெயரிட்டு, தங்கள் காப்பியங்களில் அணியத் தொடங்கினர். இதில் என்ன பிழை? காப்பியங்களைப் பயிலுவோர் அவ்வணிகளை வேண்டி நின்றனர். புலவர்களும் அவர் விருப்பை அறிந்து அதற்குத்தக்கபடி பாட்டுக்களைப் பாடினர். அவ்வணிகளை அவர் அக்காலத்தில் தாம் வரைந்த காப்பியங்களில் அணியாதிருந்திருப்பின், அக்காப்பியங்கள் படிப்பார் எவருமின்றி இன்று மறைந்துபோயிருக்கும். அங்ஙனமின்றி, அன்னவை இன்றளவும் உயிருடன் உலாவிக்கொண்டிருப்பதே, அவைகளை உலகம் பெரிதும் வேண்டி நிற்கிறது என்பதற்குப் போதிய சான்றாகும். இதைக் குறித்து வாதப்பிரதிவாதங்களைப் பேச்சிலும் எழுத்திலும் நடத்துவோர், ஒருவரை யொருவர் ஏசிப் பேசித் தத்தம் இழிதகைமையைப் பிறர் அறிய வெளிக்காட்டினரே யன்றி, விவாதத்திற்கு உரிய விஷயத்தை அறவே மறந்தனர். தத்தம் கட்சியில் அபிமானம் கொண்டனர். அபிமானங் கொண்டவர் உண்மை காணாது உழல்வது இயல்புதானே. விதை முளையாகி, முளை செடியாகி, செடி மரமாகி வளர்வதேபோல், ஓர் அணியே இரண்டாகி மூன்றாகிப் பலவாகிப் பல்கிய பான்மையை ஈண்டு எடுத்துக் காட்டுவாம். "மனம் உண்டானால் இடமும் உண்டு" என்னும் நெடுமொழியை உன்னி, இவ்வாராய்ச்சியின் நன்னோக்கத்தை அன்னவர் கண்டு சிந்தனைசெய்வாராக.

பொருளணிகளுக்கு எல்லாம் உயிர்நாடிபோன்றிருப்பது முற் கூறிய 'அதிசயம்' என்னும் அணியாம். உவமை, தன்மை, சிலேடை என்ற ஆணிவேர் போன்ற அணிகளிலும் இவ்வதிசயத்தின் ஓர் சிறு கலை கலந்துதான் இருக்கின்றது. பொன், வெள்ளி முதலாம் உலோ கங்களால் ஆய ஆபரணங்களை நல்ல வண்ணம் மினுக்கி நிறமாக்குவ தற்கு ஓர் விதமான தூள் அவசியப்படுத்துவது போல, காப்பிய அணிகளுக்கும் ஓர்வகை ஒளி வேண்டுமாயின், அதிசயத்தின் மெல் லிய கலையொன்றைக் கூட்டிச் சேர்க்கத்தான் வேண்டும். உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பதில் சமத்காரம் என்னை? தாம் விரும்பிய தொன்றை மிகைப்படுத்தியும், விரும்பாததைக் குறைத்தும் கூறு வதே மக்கள் இயல்பு. உவமை முதலாம் அணிகளில் அதிசயம் வெளிப்படையாகத் தோற்றாவிடினும், மறைவாகத் தோற்றிக் கொண்டுதான் இருக்கும். கூர்ந்து நோக்கின் இது நன்கு புலப்படும். இதிலிருந்து பொருளணிகளுக்கு ஆணிவேராயிருப்பது அதிசயம் என்று நினைக்கவேண்டா. இன்றியமையாத சில விசேடத் தன்மை களைக் கொண்டே அவை நான்குபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றன.

ஒரு பொருளோடு ஒருபொருளினை ஒப்புமை கூறிவரும் அணி கள் யாவும் உவமையின்பாற்படும். உவமையை ஆணிவேராகக் கொண்டு கிளைக்கும் அணிகளை உவமைக்கூட்டம் என்று அழைக் கலாம். உவமை, காப்பியத்தை அழகுபடுத்துவதோடமையாது, கவி தன்மனத்திற் கொண்ட கருத்துக்களையும் நன்கு புலப்படுத்து கின்றது. உவமை, உயர்ந்த பொருளாயும், உவமிக்கப்படும் பொருள், இழிந்த பொருளாயும் இருப்பதே முறைமை. உவமவுயர்ச்சி யான் உவமிக்கப்படும் பொருளுக்குச் சிறப்பு வந்து எய்தும். இவ்வுவமை பொன்றே காப்பியங்களில் பற்பல பெயர்கொண்டு தோற்றும் என முன்னர்க் கூறியதை இனி விளக்குவாம்.

புலவன் தன்னால் உவமிக்கப்படும் பொருளுக்கு அதனையே ஓர் உவமையாக எடுத்துக் காட்டுவானுயின், அது 'பொது நீங்கு உவமை' எனப் பெயர்பெறும். வேறு ஓர் உயர்ந்த பொருளைத் தான் கூறவந்த பொருளுக்கு உவமையாக எடுக்காமல், அதனையே அதற்கு உவமை யாக்கியதால் உவமிக்கப்படும் பொருள் ஒப்புயர் வற்றது என்னும் ஓர் தனிச்சிறப்பு அவண் தோன்றுகின்றது. படிப்பவர் மனத்தில் மகிழ்ச்சியும் உண்டாகின்றது. உவமிக்கப் படும் பொருளை ஒப்புயர்வற்றதாகக் கருதும்பொழுது, புலவன் தன்

காப்பியத்தில் இவ்வணியை அணிந்தால், அது, படிப்பவர் மனத்தில் ஓர் சமத்காரத்தை உண்டாக்கும்.

உலகத்தார் உயர்ந்ததாகக் கூறும் உவமானத்தை உவமேயமாக்கி, உவமேயத்தை உவமானமாகக் கூறின், அது 'விபரீத உவமை' எனப் பெயர்பெறும். இதனால் உவமிக்கப்படும் பொருளுக்கு உவமானத்தைவிடச் சிறப்பு உண்டு எனப் பெறப்படுகின்றது. உவமையாகில் எப்பொழுதும் உவமானம் உயர்ந்த பொருளாகல்வேண்டும். இவ்வணியில் உவமானம் இழிந்த பொருளாய் வருகின்றமையால், உவமையணியைவிட இதற்கு ஓர் தனிச்சிறப்பு உளதன்றோ! உவமை அணி ஒன்றே சில விசேடத்தன்மைகள் பற்றிப் பொதுநீங்கு உவமை என்றும், விபரீத உவமை என்றும் இரண்டாகி மூன்றாகிப் பல்கிப் படிப்பவர் இதயத்தில் சமத்காரம் விளைக்கின்றமை கரதலாமலக மன்றோ!

உவமானத்தையும் உவமேயத்தையும் இரண்டு வெவ்வேறு பொருள்களாகக் கொள்ளாமல், இரண்டும் ஒன்றே என்று உவமானதர்மங்களை உவமேயத்தில் அமைத்துக் காட்டுவதே உருவக வணி எனப்படும். ஒன்றின் உருவத்தை மற்றொன்றிற்கு மாற்றுவதே உருவகம் என்னும் சொல்லாற் போந்த பொருளாகும். உவமையணியில் உவமானம் என்றும் உவமேயம் என்றும் இரண்டாகக் காணப்படும் பொருள்களில் உள்ள வேற்றுமை உணர்ச்சியை அறவே மறந்துவிடின், அதுவே உருவகமாம். சுருங்கச் சொல்லின், உவமேயமாகிற சுவரில் உவமானத்தின் சித்திரம் ஒன்று வரைவதே உருவக வணி என்று கூறலாம். பிறவி என்னும் உவமேயப்பொருள், பலதர்மங்களின் ஒற்றுமை கொண்டால் பெருங்கடல் எனவே உருவகிக்கப்படும். உவமானோவமேயங்களை வெவ்வேறாகக் கருதினால் பெருங்கடல்போன்ற பிறவி என உவமையணி யாகிவிடும். காப்பியங்களில் உருவகவணி வருகின்ற விடங்களில் உவமானோவமேயங்களுக்குப் பல விதத்திலும் ஒற்றுமை காணவேண்டும். அவ்வொற்றுமையால் காப்பியத்திற் றோன்றும் சமத்காரத்தைக் கண்டு மகிழவேண்டும். உவமையிற் றோன்றும் சமத்காரம் வேறு, உருவகத்திற் றோன்றும் சமத்காரம் வேறு; அணியிலக்கணம் படிப்பது வேறு, சமத்காரத்தைக் கண்டு மகிழ்வது வேறு என அறிக.

(தொடரும்)

# ஒரு கவிநயம்

"பதஞ்சலி" எழுதியது

"தழல்வீ சவுலாய் வருவா டைதழீஇ
அழல்வீ ரெனதா வியறிந் திலிரோ
நிழல்வீ ரையனு ருடனீர் நெடுநாள்
உழல்வீர் கோடியீ ருரையா டிலிரோ."

(இராமாயணம், உருக்காட்டு படலம், ரு-ம் செய்யுள்.)

**பிராட்டி பிரிவாற்ருமையால் கொடியோடு வெறுத்துக் கூறியது.**

[பூங்கொடிகளே, வெம்மையைப் பரப்பிக்கொண்டு வருகின்ற வாடைக்காற்ருேடு கூடி எப்பொழுதும் அழன்றுகொண்டிருப்பீர்; எனது உயிரின் நிலைமையை அறியவில்லைப்போலும். (அறிந்திருந்தா லழல மாட்டீரென்றபடி.) நீவிர் கடல்போன்ற நிறத்தினராகிய ஒருவருடன் நெடுநாட் பயின்றிருப்பீர்; அவரை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமே. அவரோடு உரையாடவில்லையா? (உரையாடியிருக்க வேண்டுமே; அதனால், எனதுயிரின் நிலைமையை அறிந்திருக்கலாமே என்றவாறு.]

(இ—ள் **கொடியீர் - பூங்கொடிகளே! தழல்வீச - நெருப்புச்சுவாலை அயலிடமெல்லாம் வீச, உலாய் வரு - உலாவிவருகின்ற, வாடைதழீஇ - வடகாற்றைத் தழுவிக்கொண்டு, அழல்வீர் - அழன்றுகொண்டிருப்பீர்.**

வாடை செல்லா அயலிடங்களிலும் தழல் பரக்கின்றமையின் "**தழல்வீச**" எனப்பட்டது. வீசுதல் சுற்றிடமெல்லாம் பரத்தல். வீசுதல் எறிதலுமாம். வெம்மையை எறிதலென்க.

தன்மாட்டு நஞ்சுடைமையை யறிந்து கரந்துறைகின்ற நாகம் போல, தன்மாட்டுத் தழலுடைமையை யறிந்து ஓரிடத்து ஒதுங்கி உறைய வேண்டுவதொன்று, புறத்துப்பவனி வருகின்றதாகலின் அதன் தலையெடுப் பினிது விளங்க, "**வாடை**" என்றது, அதற்குச் சிறிது மேலாத "**உலாய்வரு**" என்னும் அடை கொடுக்கப்பட்டது.

வாடை தம்மைத் தழிஇக் கோடலன்றி, அவைதாமு மதனைத் தழீஇக் கோடலின் "**தழீஇ**" எனப்பட்டது. அன்றி "**வாடை**

**தழீஇ**" என்ற தொடர் எழுவாயாக இரண்டன்றொகையாகக் கோடற் கேற்புடைமையானும் அங்ஙனமாதல் பெறப்பட்டது. கொடிகளின் கொடுமை கூறியவாறு.

முன்னுந்தான் இப்பொழுதுந்தான் இனியுந்தான் அழன்று கொண்டிருப்பீர்; அங்ஙனமாதல் உமக்கியல்பாயிற்றென்பது போதர முக்காலப் பொருண்மையையும் ஒருங்கு முடிப்பதொரு வாய்பாட்டால் '**அழல்வீர்**' எனப்பட்டது. இங்ஙனமாய தூஉம் இயற்கை யானன்மையின் "**வாடை தழீஇ அழல்வீர்**" எனப்பட்டது.

**எனது ஆவி அறிந்திலிரோ—எனது உயிரின் நிலைமையை அறியவில்லையோ;** அறிந்திருப்பீராயின் இங்ஙனஞ் செய்யீர் என்றவாறு.

ஆவி ஆகுபெயராய் அதன் நிலைமைக்காயிற்று. உயிர் உடலினின்றும் வேறுபடுகின்றதாகலின் '**என்னிலைமை**' என்னாது '**எனதாவி**' எனப்பட்டது.

ஒகாரத்தால் 'என்னிலைமையை நீவிர் அறியவில்லைப்போலும்' என்பது முடிந்து கிடந்ததாயினும், பிறிதோராற்றால் அங்ஙனமாகாமை பின்வருமாறு:—

**நிழல்வீரை அனைருடன் நீர்நெடுநாள் உழல்வீர்—சாயலினுற் கடலையொத்த ஒருவருடன் நீவிர் நெடுங்காலமாக அலைந்து திரிவீர்.**—அவரை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமே என்றபடி.

'**நிழல் வீரை**' என்பது நிழலைச் செய்கின்ற ஒருவகைமரம் எனவும் பொருள் படுகின்றமையின், நமக்கு மரமும் நிழலுமெங்ஙனமின்றியமையாதனவோ அங்ஙனமே எனக்கும் அவர்பற்றுக் கோடாயும் நிழலைச் செய்பவராயும் இன்றியமையாதவரென்பதுணர்த்திய வாறுமாம்.

**வீரை-கடல்.** சாயல் ஸ்ரீராமனை எளிதில் ஞாபகப்படுத்துதலிற் பெரிதுஞ்சிறத்தலின் அஃது உவமையானுணர்த்தப்பட்டது.

'**உடன்**' என்றதனாற் பிரியாமையும், '**நெடுநாள்**' என்றதனாற் பலநாட் பயிற்சியும், '**உழல்வீர**' என்றதனால் அவன் ஒதுங்கும் வழி ஒதுங்கியும், விலகும் வழி விலகியும், செல்லும் வழிச் சென்றும் பலவாற்றானலைந்தமையும் பெறப்பட்டன. செல்லும் வழிச் செல்லலாவது அவன் காசரணதிகளைச் சுற்றிப் பின்றொடர்தல்.

ஒருவற்கு ஒருவனைப்பற்றிக் கூறலுற்றுழொருவன் "நாடோறும் ஒருவனுடன் நீர் விளையாடிக் கழிப்பீர்." என்றிங்ஙனந் தன்னாற் கூறப்படுவானை அவற்கு ஞாபகஞ் செய்யுமாறுபோல, பூங்கொடிகளுக்கு ஸ்ரீராமனைப்பற்றிக் கூறலுற்றுளாய பிராட்டி "**நிழல்வீரை யனாருடன் நீர்நெடுநாள் உழல்வீர்**" என்றிங்ஙனம் அவனை அவைகட்கு ஞாபகஞ் செய்தவாறு.

'**உழல்வீர்**' என்பது ஞாபகஞ் செய்வதனோடமையாது, "யாம் பண்டு விளையாடுவதிச்சோலை" என்புழி, 'விளையாடுவது' என்பது போலப் பண்டைய நிகழ்ச்சியின் நீட்சியுங் குறித்து நின்றது.

'**நிழல்வீரையனார்**' எனச் சிறந்ததோர் அடையாளங் குறிப்பிட்டமையானும், '**உடன் நீர் நெடுநாள் உழல்வீர்**' என்றமையானும் அவனை எவ்வாற்றானும் மறக்கலாகாதென்பதும் முடிந்தது.

**உரையாடிலிரோ - அவரோடு உரையாட வில்லையோ.** முன் ஞாபகஞ் செய்தமையின் 'அவரோடு' என்பது வருவிக்கப்பட்டது. '**உடன் நெடுநாள் பயில்வீர்**' ஆதலின் உரையாடியிருக்க வேண்டுமே என்றவாறு. ஓகாரம் அப்பொருள் பயக்குமாறுணர்க.

அவன் பிரிவாற்றாமையால் உரையாடும் வழியெல்லாம் அவள் நிலைபற்றியன்றிப் பிறிதொன்று பற்றி உரையாடான் ஆதலின், "அவர் உரையாடும்வழி உன்னிலை பற்றித்தான் உரையாடுவாரென்பது எங்ஙனம் பெறப்படும்" எனப் பிராட்டியைப் பூங்கொடிகள் கடாவற் கேலாமை யுணர்க.

இங்ஙனமாக உரையாடினமையும் அதனால் ஆவியின் நிலைமையறிந்தமையும் பெறப்பட்டமையின், அறிந்தும் அழலுதற்குக் காரணந்தான் யாதென ஆராய்வுழி, அதுதான் அவற்றின் பெயர் மாத்திரையானே பெறப்படுதலின் "**கொடியீர்**" என அவைதாம் விளிக்கப்பட்டன. "**கொடியீர்**" என்பது கொடுந்தன்மையுடையீர் எனத் தொனிப் பொருளுடைமை காண்க.

அழலுதற்குக் காரணந்தான் பல்லாற்றானு மாராய்ந்த ஆராய்ச்சியின் பயனாகப் பெறப்படுதலினன்றே "**கொடியீர்**" என்னும் விளி இறுதியடியில் வைக்கப்பட்டதூஉமென்க.

# பாவலர் சொற் போற்றிய காவலர்

வேலணையூர்
பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் எழுதியது

"இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்"

அமிழ்தினு மினிய தமிழ் மடவால் செய் அருந்தவத்துப் பெரும் பயனாய் அவதரித்துப் பைந்தமிழ் நாடாண்டு பல்புகழீட்டிய காவலர் பலராவார். எந்நாட்டகத்தும் எக்காலத்திலும் இல்லாதன வெனவும், தமிழ் நாட்டினர்க்கே யுரிய தனிப்பெருஞ் சிறப்புக்களெனவும் போற்றி யுரைக்கத்தக்க அரிய ஒழுக்கங்கள் பல அவர்களிடத்துப் பொலிந்துவிளங்கின. பல்லிசை கொள் பாவலர்தம் சொற்களின் விழுப்பமறிந்து, அவற்றை உயிரினு மோம்பி யொழுகினமையே, அவற்றுள் தலைசிறந்ததெனலாம்.

இதனுளும், தாம் வெகுளி வாய்ப்பட்ட வமயத்தும் தம்மைத் தீ நெறியினின்றும் நன்னெறியுட் புகுத்தலே குறிக் கோளாகக் கொண்டு, அஞ்சா நெஞ்சராய் நீதிமுறை அறிவுறுத்திய பாவலர் சொல்லைப் போற்றி யதர்ப்பட வொழுகினமையே மிகவுஞ் சிறந்தது. இங்ஙனம் பாவலர் சொற் போற்றிய காவலர் வெகுளி வாய்ப்பட்ட அமயங்களையும், பாவலர் கூறிய செஞ் சொற்களையும், அவர்கள் போற்றி யொழுகியவாற்றையும் பற்றி ஈண்டு சில கூறுவாம்.

## 1. கோப்பெருஞ்சோழன்

இவ்வரசர் பெருந்தகை தன் மக்களிருவரோடு பகைமை கொண்டு போர்செய்தற் கெழுந்தான். இதனைக்கண்ட புலவர் பெருமானாகிய புல்லாற்றூர் எயிற்றியனார் அருஞ் சீர்த்திப் பெருஞ் சோழனைப் போர் செய்ய விடாது தடுத்து, நன் னெறிச் செலுத்துவதெற் கெண்ணிச் சோழனைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர்.

'நெருங்கிய போரின்கட் பகைவரை அடுதல் செய்த வென்றியையும், வலிய முயற்சியையும், நிலமுழுதும் நிழல் செய்யும் வெண் கொற்றக்குடையினையுமுடைய வேந்தே! கடலையாடை

யாகக் கொண்ட இப் பரந்தவுலகத்தில் நின்னுடன் போர் செய்ய வந்த இருவரையும் பார்க்குமிடத்து, அவர்கள் நின் பகை யரசர்களல்லர். நினைக்குமிடத்து, நீயும் அவர்க்குப் பகைவனல்லை. தோன்றலே! நீ யிவ்வுலகத்துப் பரந்துபட்ட நல்ல புகழைப் பெற்றுத் தேவருலக மெய்தியபின், நின்னரசாட்சியுரிமை யவர்க் குரியது? அதனையும் நீ நன்கறிவை. புகழை விரும்புவோனே! நின்னுடன் போர் செய்தற் கெழுந்த சூழ்ச்சியில்லாத அறிவை யுடைய நின் புதல்வர் தோற்பின், நின் செல்வத்தை அவர்க்கன்றி யார்க்குக் கொடுப்பாய்? போரைவிரும்பிய செல்வ! நீ அவருக் குத்தோற்பின், நின் பகைவர் உவக்கும்படி பழியை இவ்வுலகத்தே நிறுத்துவாய்; ஆகையால் நினது மறன் ஒழிவதாக! விண்ணோர் கள் விருப்புடன் நின்னை விருந்தாக எதிர் கொள்ளுமாறு நல்வினை செய விரைந்தெழுவாயாக! நின் உள்ளம்வாழ்வதாக!

“[1]மண்டமர் [2]அட்ட மதனுடை[3]நோன்றாள்
வெண்குடை விளக்கும் [4]விறல்கெழு வேந்தே
பொங்குநீ ருடுத்த விம்மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த விருவரை நினைப்பின்
தொன்றுறை துப்பினின் பகைஞரு மல்லர்
சமர்வெங் [5]காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயு மற்றவர்க்கு
அனையை அல்லை [6]அடுமான் தோன்றல்
பரந்துபடு நல்லிசை எய்தி மற்றுநீ
[7]யுயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்கு உரித்தன்றே

அதனால்,

அன்னது ஆதலும் அறிவோய் நன்றும்
இன்னுங் கேண்மதி இசை[8]வெய் யோயே
நின்ற [9]துப்பொடு நிற்குறித்து எழுந்த
எண்ணில் [10]காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கு [11]எஞ்சுவையே
அமர்[12]வெஞ் செல்வ நீயவர்க்கு [13]உலையின்
இகழுநர் உவப்பப் பழி[14]எஞ் சுவையே

---

[1]நெருங்கியபோர். [2]கொன்ற. [3]வலிய முயற்சியையுடைய. [4]வெற்றி. [5]அறிவு. [6]போர்செய்யும் யானை. [7]தேவர். [8]விரும்பியவனே. [9]வலியோடு. [10]அறிவு. [11]கொடுப்பாய். [12]விரும்பி. [13]தோற்பின். [14]கோபம்.

அதனுல்,

ஒழிகதில் அத்தைகின் [15]மறனே வல்விரைந்து
எழுமதி வாழ்கநின் உள்ளம் அழிந்தோர்க்கு
[16]எமம் ஆகுநின் தாள்நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே வானேர்
அரும்பெறல் உலகத்து [17]ஆன்றவர்
[18]விதுப்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே."

எனும் அந்நல்லிசைப்புலவரின் செய்யுளில் அரசனைத் தம் கூற்றுக்களில் ஈடுபடச் செய்வதற்காக, இடையிடையே, 'விறல் கெழுவேந்தே', 'அடுமான் தோன்றல்', 'அமர் வெஞ் செல்வ' என அவன் வீரத்தைப் புகழ்ந்தமையும்; நீவிர் பகைவரல்லீர், பகைவர்க் கிடையிலன்றே போர் நிகழ்தற்குரியது? ஆகையால், நமக்கிடையில் போர் நிகழவேண்டுவதின்று என்பதை அரசன் நன்கு விளங்கிக் கொள்ள வைத்தமையும்; அங்ஙனம் போரை விலக்காது போர் புரிந்து நீ வென்ருல், பின், நின் செல்வத்தை யார்க்குக் கொடுப் பாய்? நீ உயர்ந்தோர் உலக மெய்தி, பின்னும் ஒழித்த தாய மவர்க் குரித்தன்றே? அதனுல், அன்ன தாதலு மறிவோய் ஆகை யால், நினக்குக் கூறல் வேண்டா என அவனை உய்த்துணர்ந்து கொள வைத்தமையும்; தோற்பின், அழிவிலாத பழி யெய்து வாய் ஆகவே, நீ போரை நடாத்தி வென்ருலும், தோற்ருலும் பழியையே எய்துபவனுவாய் எனப் போர் நடத்துவதால் பழியே எய்தும் என்பதை அரசன் உணர்ந்து, இசையை விரும்பியவனு கிய தனக்கு அப்பழி யெய்தல் தகாதென்பதை நன்கு விளங்கிக் கொள்ள வைத்தமையும்; இவ்வமயத்து 'ஒழிகதில் அத்தைநின் மறனே நின்தாள்நிழல் மயங்காது, நன்றே செய்தல் வேண்டும்' என அரசன் தான் பழியெய்தும் அமயத்தும், அப்பழியினின்றும் நீக்கி இன்னும் நல்லிசையைத் தருவதாகிய இதனையே யான் செய் தல்வேண்டுமெனக் கழிபேர் உவகையொடு உளங்கொளும்படி செய்தமையும் முதலாய பன்னயங்கள் பொதிந்து கிடக்கின்றன.

அங்ஙனம் நுண்மாண் நுழைபுலமுடை நல்லிசைப் புலவரால் தெருட்டப் பெற்றபின், சோழனுள்ளத்திற் பொங்கி யெழுந்த சினம் "இடுநீற்ருற் பையவிந்த நாகம்" போல் அடங்கிவிட்டது. எனினும்,

---

[15]காவல், [16]அரண், [17]அமைந்தவர், [18]விரைவொடு.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்றாங்குத் தம்மக்களால் தம் குலத்திற்கும் தமக்கும் பழியுண்டாதலை யுன்னி, உயிர் துறக்கத் துணிந்த அரசன் "செய்குவங் கொல்லோ நல்வினை எனவே, ஐய மறாஅர் கசடீண்டு காட்சி, நீங்கா நெஞ்சத் துத் துணிவில் லோரே" எனக் கூறி வடக்கிருந்தான்.

2. கிள்ளிவளவன்

மலயமான் திருமுடிக் காரியின் மக்களினுண்டாய அளப் பருஞ் சீற்றத்தால் அவர்களை இவ் வேந்தன் யானைக்கிடுவுழி, அங்கு வந்த கோவூர் கிழார் எனும் புலவர் பெருந்தகை பதை பதைத்து அவனை நோக்கி: 'நீ தான் ஓர் புறவின் அல்லல் அன்றியும் பிற வுயிர்களுக் குற்ற துன்பத்தையும் தீர்த்தற்காக உயிர்க்கொடை பூண்ட சிபிமன்னன் மரபினுள்ளாய்; இவர் தாம் அறிவாலுழு துண்ணும் கற்றோரது வறுமைத் துன்பத்திற் கஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் தண்ணிய அருளையுடையாரது மரபி னுள்ளார்; இவர் இப்பொழுது யானையைக்கண்ட வியப்பால் முன்பு வெருவியழுத அழுகையை மறந்திருக்கின்ற சிறு பிள்ளைகள்; இம் மன்றினை வெருண்டு நோக்கி முன்பு அறியாத புதியதோர் வருத் தத்தையு முடையார்; இது கேட்டனையாயின் நீ விரும்பியதைச் செய்க' எனும் பொருளமைந்த

"நீயே,
[1]புறவி னல்லல் அன்றியும் பிறவும்
[2]இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகன்
இவரே,
[3]புலனுழுது உண்மார் [4]புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
[5]களிறுகண்டு அழூஉம் [6]அழால் மறந்த
புன்தலைச் சிறார் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர்
கேட்டனை ஆயின்நீ [7]வேட்டது [8]செய்ம்மே"

எனும் பாட்டினைக் கூறினர். இதனைக்கேட்ட வரசன் தன் குற் றத்திற்கு நாணி அவர்களைக் கொல்லாது விடுத்தான்.

(தொடரும்)

---

[1]புறாவின் துன்பம். [2]துன்பம். [3]அறிவாலுழுது. [4]வறுமை. [5]யானை. [6]அழுகை. [7]விரும்பியது. [8]செய்வாயாக.

# "செம்மலி"யும் கம்பலமும்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியது

"செந்நெ ருப்புணுஞ் செவ்வெ லிம்மயிர்
அந்நெ ருப்பள வாய்பொற் கம்பலம்"

இச் சீவகசிந்தாமணி மேற்கோளை (2686) நுணுகி ஆராயின், "எலிமயிர்ப் போர்வை" எனுந்தொடரின் ("ஞாயிறு" 2-ம், 3-ம் கதிர்கள்) உண்மைக் கருத்து ஒருவாறு வெளிப்படும். மேற்கோளில் "செவ்வெலிம்மயிர்" கொண்டு நெய்ததே "கம்பலம்" என்றது நன்றாகத் தொனிக்கின்றது. செவ்வெலி செந்நெருப்பு உண்ணும் என்றலைக் கவிவாணரின் புனைந்துரையாகக் கொண்டு, அவ் எலிமயிர்க் கம்பலம் நெருப்பையொக்க வெம்மையை ஊட்டும் என்றலையே நோக்கத்தகும். "நெருப்பைத் தின்னும் எலிமயிர்க் கம்பலம்: அந்நெருப்பினளவு வெம்மைய என்று ஆராய்ந்த பொலிவினை உடைய கம்பலம்" என்றார் உரையாசிரியர் நச்சினார்க்கினியரும். உண்மையில், கம்பலம் எனுஞ் சொல்லின் வரலாறு செவ்வெலி அன்றேல் "செம்மலி" யோடு உறவு கூட்டுண்டதே என்பது சொல்லாராய்ச்சியாற் பெறப்படும்.

கல்பலச் சொல்லின் உற்பத்தி யாது? சொல்லாராய்ச்சி இல்லாதோர் இதனை ஓர் வடசொல் எனக் கூறிவிடுவர். ஆயின், வடமொழியில் இதற்குப் பொருத்தமுள்ள அடிச்சொல் கூறுமாறில்லை. வாசஸ்பத்தியம் ஆதிய அகராதி நூலோர் "ஆசித்தல்" எனும் பொருளுள்ள "கம்" எனும் தாதுவினின்று இச்சொல் பிறந்தது என்பர். அது பொருந்தாது. அன்றியும், கம்பலச் சொல் கிரேக்கம் லத்தினியம் பழமாங்கிலம் ஆதிய பிற ஆரிய மொழிகளினுட் காணப்படாமையும் நோக்கற் பாற்று. வடமொழியில், இச்சொல், ஓர்வகை மானின் பெயராயும் நிலவும். கம்பலி எனும் உருவமே முற்பட்டது என்பர் மோனியர் உவில்லியம்ஸ். (அவரது அகராதி காண்க). அவ்வாறே, தமிழிலும், இது யாட்டின் பெயராம். (பிங்கலந்தை 8; 172) கம்பளி ஆடு எனப் பிற்காலத்தார் கூட்டிச் சொல்லினும், முற்காலத்து கேவலம் "கம்பளம்" யாட்டைக் குறித்தது என்பதில் மயக்கம் இன்று. இவ்வாறாகையில், கம்பலச் சொல் யாட்டையே மானினத்தையே குறிக்க வந்தமை எவ்வாறு?

சிந்தாமணியார் தந்த "செவ்வெலி" எனும் உருவம் ஈண்டு நமக்கு ஏற்ற வழிகாட்டி ஆகின்றது. "கெம் எலி" என்பதே "செவ் எலி" என்றாயிற்றென்பது ஒருதலை. என்னை? "கெம்" எனும் உருவம் செ, செவ் எனும் உருவங்கட்கு முற்பட்டது ஆகலின். இனி, செம் எனும் தற்காலத் தமிழ் உருவம் ஆதி காலத்தில் கெம் என நின்றமை தமிழின் பாகதங்களாகிய தெலுங்கு, கன்னடம், துளுவம் ஆதியனவற்றால் ஐயந்திரிபின்றிப் பெறப்படும். நிரம்பிய மொழிநூல் ஆராய்ச்சியாளரது துணிபின்படி, எல்லா மொழிகளினும் ஆதிச் சொற்களில் முதநிலைச் சகரம் சிறுவரவிற்றாகி, ககரமே பெருவழக்காய் நின்றது; ககரம் சகரத்தின் முன் எடுத்தாளப்படலாயினமையின். சகரம் பிறப்புமுறையில் ககரத்தினின்று தோன்றுவது என்றலுமொன்று. என்னை? ககரம் முதனுவண்ணமுறவரும் பேச்சொலியும், சகரம் இடைநாவண்ணமுறவருவதும் என்பது பிரசித்தம் (தொல். எழுத். 89; 90). சொற்கள் பெரும்பாலன சகரவரி மெய்களைத் தலையிற் கொள்ளாதியங்கும் வழக்கு, தொல்காப்பியர் இலக்கணஞ் செய்த காலத்து மிக அருகி விட்டமைக்கு அவரது எழுத்ததிகார 62-ம் சூத்திரம் சான்று. இவ்வாறே, செம் எனும் பகுதி ஆதிநாட்களில் கெம் என நின்றமை, முன் கூறியவாறு, தெலுங்கு ஆதிய பாகதங்களில் இச்சொல் மாத்திரையன்று வேறு பல சகரவரி முதனிலைத் தமிழ்ச் சொற்கள் ககரவரிமுதலாய் நிற்கின்றமையாலும் உறுதிப்படுதலால், தமிழிலும் முன்னாள் கெம் என நின்ற பகுதியே பிற்றை ஞான்று செம் எனத் திரிந்தது எனக் கொள்ளல் அமைவுடைத்தாகும். கெம் எனும் பகுதியின் தலையடியை (தாதுவை) நோக்கினும், இவ்வுருவமே முந்தியது என்றல் அறுதியிடப்படும். எங்ஙனம்? எல் (பிரகாசம்) எனும் அடியாய்ப் பிறந்த கேழ் கெழு எனும் உருவங்களே கெம் எனும் பகுதியைத் தந்தன. [எல் எனுஞ் சொல்லின் வரலாறு மேல் வருவது.] "கெழு" உறைத்த நிறம் என்றமையால் சிவப்பிற்காயிற்று. (தொல். சொல். 303-உ-ம் காண்க) கெம் எனும் பகுதி இன்றைக்கும் தமிழில் சிறுபான்மை செம் என்றதன் இடமாய் நிற்கின்றமையையும் நோக்குக. உதாகரணம்: கெம்பு—சிவப்பு (க்கல்); கெந்தி—பொன் நிற (நிமிளை); கெந்தகம்—சிவந்த (தாதுப் பொருள்); கொவ்வை [கெவ்வை]—சிவந்த (பழவகை); கெவுளி—செவ் (விளநீர்). காவி, காமி, காயா, காமாலை, காஞ்சனம் ஆதிய பிற சொற்களையும் ஆராய்க. ஆகலின், செம் - எலி முன்னாளில் கெம்மெலி (—செவ்வெலி) என நின்றதாக நாம் வைத்துக் கோடல் சாலும். சிந்தாமணி கூறு

கின்ற செவ்வெலி நெருப்புப்போற் சிவந்த (நெருப்பை உண்கின்ற!) எலியாயின், அது ஆதிநாட் சொல் வழக்கில் "கெம்மெலி" என்றே நின்றிருத்தல் இன்றியமையாதது. இன்றைக்கும் நம் "செவ்வெலி" எனுங் கூட்டுச் சொல்லைத் தெலுங்கில் கன்னடத்தில் செப்பவேண் டின், கெம் எலிக, கெம் எலி என்றேயன்றி வேறோராற்றால் விளம்புதல் கூடாது.

அப்பால், கெம்மெலி கெம்மலி என்றாகி, கெம்மலி கம்மலி என்றாகி, கம்மலி கம்பலி என்றாகி, கம்பலி கம்பலம் ஆயினமை ஓர் அற்புதம் ஆகாதன்றே. தமிழிலும் பாகதங்களிலும் எகரம் அகரமாதல் பெருவழக்கு: கெளிறு - களிறு, பெருமை - பருமை, கெந்தகம் - கந்தகம், வெகு - பகு ஆதியன காண்க. இதழியைந்து பிறக்கும் மகரம் தன்னோடு பிறப்பொற்றுமை கொண்ட (தொல். எழுத். 97) பகரத்தையும் துணைக்கொண்டு பலகால் நிற்றலும் இயல்பு. உதாகரணம்: அம்மா - அம்பா, நம்மன் - நம்பன், திருமு - திரும்பு ஆதியன. இவ்வாறே கெம்மெலி படிமுறையிற் கம்பலியாகி, செவ்வெலியையே முதல் உணர்த்திப் பின், சார்புபற்றி, அச்செவ் வெலியின் மயிரால் நெய்தனவற்றைக் குறித்தது என்க.

கெம்மெலியின் மயிர்தான் கம்பலமாயிற்று. ஆதலால் "யாழ்ப் பாணத்தில் நாட்டுப்புறத்தார் செம்மறியைச் செம்மலி என வழங் குவது" (இது ஸ்ரீ இராசநாயக முதலியார் எடுத்துக் காட்டியது. "ஞாயிறு" பக். 215) அந் நாட்டுப்புறத்தவர்க்கு ஓர் குறையன்று, சிறப்பேயாம். இதுபோல, வேறு பல ஆதித் தமிழ்ச் சொற்களை யும் நாட்டுப் புறங்களில் கேட்டுள்ளோம். அவை செந்தமிழ் நூல் களில் ஏறிக்கொள்ளாவிடினும், தெலுங்கு ஆதிய பாகதங்களிற் சேமிக்கப்பட்டுள்ள பழஞ் சொற்களே போல, ஆராய்ச்சியாளர்க்கு அருமையானவை. ஆதித் தமிழ்ச் சொற்றொகுதியைச் சேர்ந்தன வான அப் பழைய உருவங்களால் சொற்பிறப்பாராய்ச்சி மிகு ஆதா வடைந்து சிறக்கும்.

செம்மலிச் சொல் கெம்மெலியினின்று வருவதாகலின், செம் மலியைச் செம்மறி என்பதுதான் தவறு போலும். இது செம் மறிக் கடா எனும் தொடரால் விளக்கமாகும். செம்மறி சிவந்த பெண் யாடாயின், செங்கடா என்றன்றோ ஆண் யாட்டை அழைத் தல் வேண்டும்! செம்மலி எனச் சொல்வதைப் பிழை எனக் கரு தினோர் "ஆடுங் குதிரையு மானமுங்கு மறியென்பர்' என்ற விலங் கின் பிள்ளை மரபுக்கொப்ப, மலியை மறியென்றாக்கிச் செம்மறி என்

ரூர் போலும். அது கிடக்க, யாட்டை எலி எனக் கூறுதல் ஒக்குமா? என இனி ஆராய்வாம்.

யாட்டை எலியெனலாமா?

இவ்வினாவிற்கு ஸ்ரீ இராசநாயக முதலியார் சொல்லிய நல்விடையை ஒரு சிறிது திரித்துக் கூறுதல் வேண்டப்படும். அன்னோர் சொல்லியது இது:

> "ஏழகம் என்னும் பதத்தில் 'ழ' என்னும் எழுத்து வருவதால் அது சுத்த தமிழ்மொழி என்பது யாவரும் நன்கறிந்ததே. அச்சொல்லிலிருந்தே யாட்டுக்குப் பாலிபாஷையில் 'ஏளக' வென்றும் சிங்களத்தில் 'எளுவ' வென்றும் சொற்கள் பிறந்தன. "எளுவ" வென்பது திராவிட பாஷைகளில் ஒன்றாகிய ஈழ பாஷைச் சொல்லே. இச்சொல் பன்மையில் 'எளு' 'எலு' எனப் பாவிக்கப்பட்டும் 'எலி' எனத் திரிந்தும் திசைச் சொல்லாய் வழக்கேறி வந்திருக்க வேண்டும்............'எலி' யென்னுந் திசைச் சொல் யாட்டைக் கருதுமென நிகண்டுகளி லில்லாதொழியினும் பெருங்கதை எழுதிய காலத்தில் அச்சொல் வழங்கியிருந்ததென ஐயமின்றி அறியலாம்" ('ஞாயிறு' 215-6 பக்.)

யாட்டைக் குறிக்கும் எலி எனுஞ் சொல் உண்மையில் திசைச் சொல் அன்று, நம் தமிழ்ப் பழஞ் சொல்லே. அது காலகதியில் மருவி வேறு உருவங்களை அடைதலும், இப்புத்துருவங்கள்தாம் இலக்கியங்களில் பெரும்பான்மை வழங்கலுற்றன. பழைய உருவம் தமிழகத்தின் சில தலைப்பட்ட கோணங்கள் மட்டில் பயின்றுவர, அதனை எடுத்தாண்ட நூலாசிரியர் திசைச் சொல்லை எடுத்தாண்டோர் ஆகிவிட்டார்! எலிச் சொல் யாட்டினுக்கு எவ்வாறு பெயராயிற்று? யாடு என்ற சொல்தான் எவ்வாறு எழுந்தது? இவ்வாராய்ச்சி எம் பாராயணர்கட்குப் புதுமையும் குதூகலமும் அளிப்பதாகும்.

எம் தாய்மொழியில் உள்ள இணையில்லா அழகுகளுள் ஒன்று, அதின் சொற்களில் ஒவ்வோர் ஆதிக் கருத்தோடு துலங்குகின்ற கலையடிகளை மட்டும் நாம் துருவித்துருவி ஆராய்ந்து கொண்டு சென்று மகிழக் கிடத்தலாம். தமிழிற் பெயரெலாம் காரணப் பெயர்களே என்றது நன்னூலுடையார் ஒப்பாவிடினும் (275) தொல்காப்பியருக்கு உடம்பாடேயாம். (தொல். சொல். 157, 394). அங்ஙனமாயின், எலி எனுஞ் சொற்கு ஆதிப் பொருள் யாது?

இதனை இனிக் கூறுதும்: பழந் தமிழில் எல் எனுஞ் சொல்லொன்று உண்டு அன்றோ? அதன் பொருள் எழுகின்றவனாகிய சூரியன் என்பது அன்றோ? எழு, எடு, எகு, எறு ஆதியன மேல் நோக்கி இயங்கும் பொருளுள்ள தலையடிச் சொற்கள். "எழு" எனும் அடி தான் எல் என்றாயிற்று. "எல்"லை எழுவான் எனவும் அழைக் கின்றனமே. அப்பால், எல் எனுஞ் சொல், சார்புபற்றி, அவ் எழுவானின் பிரகாசத்தைக் குறித்தது. இப் பிரகாசப்பொருள் உள்ள "எல்" ஆனது எல்-லே (=வெளியே) எல்-லார் (=வெளிச்சத் தில் உறைவோர், தேவர்), எல (=வெள்ளென, வெளிச்சத்தோடு) ஆதிய உருவங்களை அடையும். இவ் உருவங்கள் யாவற்றிலும் பிரகாசத்தன்மை ஓரோர் படித்தாய்க் குறிக்கப்படுதலை நோக்குக. வெளி-ச்சம், வெளி-யே, வெள், வெள்-ளை ஆகிய உருவங்களே யும் எல் எனும் அடியினின்று வகர முதனிலை மெய் பெற்று வந் தன என்றலும் ஒன்று. (வலியுறுத்தும் முதனிலை மெய்களைச் சுட்டிய வெளிப்படையை எமது "சொற்பிறப் பாராய்ச்சி" நூலி னுட் காண்க.) பழந் தமிழ்ப் பாகதங்களுள் ஒன்றாகிய சிங்களத் தில் எமது வெளி-ச்சம், வெளி-யே ஆதிய சொற்கள் வகரமாகிய முதனிலை மெய் இன்றி எலி-ய, எலி-யே ஆதியனவாக இன்றைக் கும் பயிலுகின்றன. பழஞ் சொல் முறையில் எல் என்பது வெளிச்சமாகவே, எலி என்றது "வெள்ளையானது" எனப் பொருள் தரும். வெள்ளையானது எனும் இக்குறிப்பால் வெள்ளை மிருகமான யாடு பெயரிடப்பட்டது எனக் காண்க. வெள்ளைச் சொல்லின் ஆதி உருவமாகிய எலி எனும் பெயர் சிங்களத்தில் இன்றைக்கும் எளு என நின்று யாட்டுப் பெயராம். இதனாலன்றோ யாட்டுக்கு வெள்ளை எனத் தமிழிலும் ஒரு பெயர் உளது? (பிங்கலந்தை, 8;174) வெள்ளை யாட்டுவர்க்கம் எலி என அழைக்கப்பட, சிவத்த யாட்டுவர்க்கம் கெம்-எலி என விதந்து கூறப்பட்டது. இதற்கிடையில் வேறொரு வெள்ளைச் செந்துவாகிய தற்கால எலியும் எலிப்பெயர் அடைந்ததனால், சொல் விகற்கம் நோக்கிப் போலும், யாட்டுக்கு வழங்கிய பழைய எலிச்சொல் ஏழ-க என மருவி வழங்கலுற்றது. சிங்களத்தில் தற்கால எலிக்கு வேறுபெயர் எழுந் துள்ளமையால் பழைய எலிப்பெயரே (எளு என) யாட்டுக்கு இன் றும் வழங்குகின்றது.

எலி ஏழ-கமாக மாறியதோடு எலிச்சொல்லின் சரிதம் சமாப்தி பெற்றதன்று, அதுதான், யாடு, ஆடு எனவும் மருவி வந்த விநோ தத்தை இனி விளக்குவோம்; ஏழ-கச் சொல் வடமொழி ரீதிப்படி

உருவாக்கப்பட்டதொன்றாகத் தோன்றுகின்றது. என்னை? ஏழ என்பதே அதன் ஆதியுருவமென்பது தமிழ்ப் பாகதங்களு ளொன்றாகிய குறாக் மொழியில் அது ஏறு என இருத்தலினாலும், வடமொழியிலேயும் எட எனும் உருவம் இருத்தலினாலும் இது துணியப்படும். எலியின் விகற்பமாகிய ஏழ உருவம் பல மொழிகளில் நிற்கின்ற பான்மை மேல்வருவது:

தமிழ்,—எலி, ஏழ, வெள்ளை, வற்காலி, ஏழ-கம், ஏட-கம், ஏர-கம், ஏணை, மேழ-கம், மேட-ம்,

சிங்களம்,—எளு-வா, எளு-தென.

தெலுங்கு,—மேக (=மே[ழ]க) மேஷ-மு.

வடமொழி,—எட, எண, எட-க, மேஷ (வேதங்களில் இது கம்பளி அர்த்தமுள்ளது), மேஷ-க (செம்மலி).

பாளி,—ஏள-க

குறாக்,—ஏறு

கிரேக்கம்,—Erra-ōs

பழஞ்சர்மனியம்,—Irah

துளுவம்,—யேடு

தொடுவ,—ஆட்று

தமிழ்,—யாடு, ஆடு

கன்னடம், மலையாளம்,—ஆடு

லத்தீனியம்,—Ari-es

இவ்வரலாற்றால் எலிச் சொல் படிமுறையாய் ஆடு எனப் பரிணமித்தமை புலனும். ஆட்டுச் சொல்லிற்கு நிலையின்றித் திரிதலாகிய "ஆடுத"லினின்று தோற்றரவு கூறுவோர் (Gundert: மலையாளம் அகராதி காண்க) தவறு உறுவர். எலியே, ஏழ, எட, யேடு, யாடு, ஆடென மருவிற்றெனக் கொள்க. வெள்ளை, வற்காலி எனும் பெயர்களும், யாது அடியினின்று "எலி" பிறந்ததோ அவ் "எல்" அடியாய்ப் பிறந்தனவாகத் துணிக. வடமொழியின் எட, எட-க, (பாளி ஏள-க) மாத்திரையல்ல, "மேஷ"மும் எமது "ஏழ" எனும் சொல்லின் மரூஉவாமெனக் காண்க. முதனிலை மகரம் பல சொற்களில் வருவிக்கப்பட்டவாறு ஈண்டும் வந்தது. எமது அகம் (=யான்) வடமொழி இரண்டாம் வேற்றுமையாதிய வற்றில் மாம் ஆதியன ஆனதுபோல என்க. மேஷச் சொல்லை வடமொழியாளர் மிஷ்=சிமிட்டுதல் எனும் அடியினின்று தோன்

றினதெனக் காட்டுவர். (மேஷோ மிஷதேஃ தத்தா பசு: பச்யதேஃ நிருக்தம்) இது பொருந்தாது என்றல் தென்றெனத் தோன்றும். ஏழமே மேஷமாயிற்றெனக் கடைப்பிடிக்க. துளுவத்தில் யேடு என வந்த எமது ஏழச் சொல் அப்பால் யாடாயிற்று: ஏகாரம் ஆகாரமாதல் வழக்கு. ஏவன்-யாவன் எனவும், ஏழு-யாழ் என வும் வந்தமை போல. குறாக் ஏறுவோடு கிரேக்க Erraos ஒத் திருத்தல் குறிக்கற்பாலது. எமது ஆட்டுடன் தொடுவ ஆட்டும், லத்தினிய Aries உம் ஒத்திருத்தலும் உற்று நோக்குதற்குரியது. Aries என்பது லத்தின் மொழியில் ஆட்டின் பழைய பெயராகி, இராசிச் சக்கரத்தின் மேடராசியைக் குறிக்கும். மேடராசியை எம் முன்னோர் ஆடு என்பர். "திண்ணிலே மருப்பினூடு தலையாக" (நெடுநல்வாடை). பின்னரே வடமொழியை அடியொற்றி மேடம் என்றனர்.

குறிப்பு.—மேற் கண்ட வியாசத்தை எழுதியனுப்பியபின், எமது எலிச் சொல் பழைய ஆசிய ஐரோப்பிய மொழிகளுள் எல் லாம் சென்றடைந்து ஒவ்வோர் வடிவந் தாங்கியிருக்கின்றமையை ஆராய்ந்து அறியலுற்றேன். மிகப் புராதன மொழிகளுள் ஒன்று கிய சுமேரியத்தில் யாட்டின் பெயர் எலிம் என்றிருக்கின்றது. இவ் எலிம் சொல் யாட்டிற்கே உரியது என்பதில் ஐயப்பாடு சிறிதும் இன்று. என்னே! இச்சொல்லின் சித்திரலிபி யாட்டுத் தலையின் வடிவமே ஆகின்றது. அப்பால் எகித்தியத்தில் எமது எலி Ail எனக் கலைமானையும்; கிரேக்கத்தில் Eriphos என ஆட் டுக்குட்டியையும், Ellos என மான்குட்டியையும், Alkē என மரையையும்; லித்துவேனியத்தில் Eras என ஆட்டுக்குட்டியையும்; பழஞ்சர்மனியத்தில் Elho, Elaho என, லத்தினியத்தில் Alces என, பழம் ஆங்கிலத்தில் Elke என மரையையும்; வடமொழியில் ற்ச்யஃ என ஓர் வகை ஆண் மானையும் குறிக்கும். கூயி எனும் தமிழ்ப் பாகதத்தில் ஒட்றி எனும் சொல் எலிக்கும், ஒட எனும் சொல் வெள்ளாட்டுக்கும் வழங்குகின்றது. "எலி"யை நம்மனோர் ஏழக என வேறுபடுத்தி யாட்டுக்கு வழங்கியவாறு போல், கூயி மொழியாளர் ஒட்றி (=எலி) யை ஒட (=ஆடு) என வழங்குவர். இவ் ஒட, துளுவ யேடு என்பவற்றோடு லத்தினிய Haedus (ஆடு) எனும் சொல்லை ஒப்புநோக்குக. எந் தமிழ் அன்னையின் தொன் மையும் சீர்மையும் இருந்தவாறு என்னே!

# தொல்காப்பியப் பாயிர ஆராய்ச்சி

வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதியது

**பா**யிரம்=வரலாறு. பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிர மென இருவகைப்படும். எல்லா நூல்கட்கும் பொதுவான வரலாற்றைக் கூறுவது பொதுப்பாயிர மென்றும், ஒருநூற்கே சிறப்பான வரலாற்றைக் கூறுவது சிறப்புப்பாயிரமென்றும் பெயர் பெறும். பொதுப்பாயிரத்துட் சொல்லும் வரலாறுகளாவன: நூல் செய்யும் முறைமையும், அந்நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் முறைமையும், அவன் பாடஞ்சொல்லும் முறைமையும், நூலைக் கற்கும் மாணாக்கன் முறைமையும், அவன் பாடங்கேட்கும் முறைமையும், என்னுமிவைகளேயாம். இவ்வரலாறுகள் எல்லா நூற்கும் பொதுவாகலின் இவற்றைக் கூறும் பாயிரம் பொதுப்பாயிர மெனப்பட்டது. இனி, சிறப்புப்பாயிரத்துட் சொல்லும் வரலாறுகளாவன: ஒரு நூலை ஆக்கியோன் பெயரும், அந்நூல் வந்த வழியும், அந்நூல் வழங்குதற்குரிய நிலத்தினெல்லையும், அந்நூலின் பெயரும், அந்நூல் எவ்வாறியாக்கப்பட்டதென்பதும், அந்நூல் கருதிய பொருளும், அந்நூல் யாராற் கேட்கப்பட்டதென்பதும், அந்நூலைக் கற்றலாலடையும் பயனும் என்னுமிவற்றோடு, நூலரங்கேற்றிய காலமும், அவையும், நூல் செய்யப்பட்ட காரணமும் என்னுமிவைகளுமேயாம். இவ்வரலாறுகள் பெரும்பாலும் ஒவ்வொரு நூற்கும் வேறுவேறாக (சிறப்பாக)க் கூறப்படுதலின் இவற்றைக் கூறும் பாயிரம் சிறப்புப்பாயிர மெனப்பட்டது.

இவற்றுள் யாப்பென்பதற்கு இயைபு என்றும், கேட்போர் என்பதற்கு நூலை இயற்றித் தரும்படி கேட்டார் என்றும், நூலைக் கேட்டற்குரிய மாணாக்கரென்றும் பொருள் கூறுவர். அவர் கூறுவன பொருத்தமுடையனவோ வென்பதே ஈண்டு நாமாராயத் தக்கது.

இவன் இந்நூல் கேட்டற்குரியனோ? அல்லனோ? வென்னுமியைபு அறிந்து கற்பித்தல் ஆசிரியனுக்குரிய முறைமையாதலின்,

அஃது பொதுப்பாயிரத்துள் 'கொள்வோன் கொள்வகை யறிந்லாய் ஆசிரியரின் கற்பிச்கு முறையிலடங்கு மாதலானும், அவ்விவை பறியவே நூல்கேட்டற் குரியாரு மறியப்படுதலானும், அவற்றை ஈண்டுக் கூறுதலியை பின்ருகலானும், யாப்பென்பதற்கு இயைபு என்பதூஉம், கேட்போரென்பதற்குக் கேட்டற்குரிய மாணுக்கரிவ ரென்பதூஉம் பொருந்தாவென மறுக்குக.

இனி, தருக எனச் சொல்லாமலே தாமே நாலியற்றும் வழக்கு, தொன்று தொட்ட பெருவழக்காயிருத்தலானும், தரு கெனவியற்றல் அருகிய வழக்காய்க் காணப்படுதலானும், சொல் லுதலைக் கேட்டலெனல் பொருத்தமில் வழக்காய்க் காணப்படுலா னும், தொல்காப்பியத்தும் "அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து" என்று அவையிலிருந்து கேட்டோனையே கூறுதலானும், கேட் போரென்பதற்கு, இயற்றித்தருகவெனக் கேட்டோரென்றுபொருள் கோடலும் பொருத்தமின்றும். ஆதலின், கேட்போரென்பதற்கு, அவையிலிருந்து கேட்டோரென உரைகண்ட பழைய உரையாசிரி யர் கருத்தே துணிபாதல் பெறப்படும்.

அற்றேல், எதிர்காலத்தாற் கூறியது பொருந்ாதெனின், நூலாக்கிய பின்பே கேட்டல் நிகழுமாகலின் அம்முறைமை தோன்றக் கேட்போரென எதிர்காலத்தாற் கூறினர். இங்ஙனமே என்றும் நூலாக்குவார்க் கெல்லாம் ஆக்கிய பின்பே கேட்டல் நிகழுமென அறிக.

இனி, களன் என்றது கேட்போரவையேயாமாதலின், அதி லிருந்து கேட்டாரை மீளவுங் கேட்போரெனல் கூறியது கூறலா மெனின், இன்னவைக்களத்து இன்னரிருந்து கேட்டாரென்பதே முறையாதலின் அது கூறியது கூறலாகாமை யுணர்க. அது முறைமையாதலைத் தொல்காப்பியப்பாயிரத்துள் 'பாண்டியனவையத்து .........அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து' என்பதே சான்ருத லறிக.

இனி, கேட்டோர் ஆக்கியோன் பெயர் முதலியன போல நூல் வழங்குங் காலத்து நிகழ்வதன்ருகலின், அவற்ருேடொருங்கு வைத்தெண்ணல் பொருந்தாதெனின், ஆக்கியோன் பெயர்போல,

கேட்டோன் பெயரும் மேற்குறித்த பாயிரத்துள் "அதங்கோட்டாசா"னென இன்றும் நின்று நிகழ்ந்து மாணுக்கர்க்கு நூலின் பெருமையை யறிவித்து நூல் கேட்டற்கண் ஊக்கத்தைக் கொடுத்துப் பயனுடைத்தாய் விளங்குதலானும் அவற்றோடொருங்கு வைத்தெண்ணல் பொருந்து மென்க.

இனி, தொகுத்தல் முதலிய யாப்பும் வழியுளடங்குமெனின், வழிகூறுவதனல் இது மூவகை நூலுள் எது என்பது பெறப்படுவதன்றி, இது எப்படிச் செய்யப்பட்டது என்பது பெறப்படாதாதலின், தொகுத்தல் முதலிய யாப்பும் ஒருதலையான் வேண்டப்படுமென்பது. "புலந்தொகுத்தோனே" எனத் தொல்காப்பியப் பாயிரங் கூறுதல் காண்க.

இனி, "வடவேங்கடம்......புலமையோனே" என்னும் தொல்காப்பியப் பாயிரத்துள் இப்பதினொன்று மமைந்தவாறு காட்டுதும்:—

| | |
|---|---|
| ஆக்கியோன் பெயர்— | "தொல்காப்பியனென" |
| வழி— | "முந்துநூல் கண்டு" |
| எல்லை— | "வடவேங்கடந் தென்குமரியாயிடை" |
| நூற்பெயர்— | "தொல்காப்பியன்...தன்பெயர்தோற்றி" |
| யாப்பு— | "நாடி...தொகுத்தோன்" |
| நுதலிய பொருள்— | "எழுத்து முறைகாட்டி", "எழுத்துச் சொற்பொருள்" |
| கேட்போர்— | "அதங்கோட்டாசாற்கு....தெரிந்து" |
| பயன்— | "எழுத்து முறைகாட்டி" (மொழித்திறத்தின் முட்டறுத்தலும், அறம் பொருளின்பம் வீடடைதலும்) |
| காலம்— | "பாண்டியனவையத்து" (பாண்டியன்காலம், |
| களம்— | பாண்டியன் களன்) |
| காரணம்— | "முறைப்பட வெண்ணி" (முறைப்படச் செய்தல்) |

இவற்றை யோர்ந்துணர்க.

இனி, இப்பாயிரத்துள், ஆயிருமுதலின் என்பதற்கு, 'ஆராய்ந்த பெரிய காரணத்தானே' எனத் தாம் கொண்ட பொருட்கேற்ப ஆய்

இருமுதல் எனப் பிரித்துப் பொருள் கூறியவர், 'ஆயிருதிணை', 'ஆயிருபாற் சொல்', 'அவ்விருமுதல்' எனத் தொல்காப்பியர் கூறிய பதப்பிரயோகங்களின் ஆட்சியை உற்று நோக்காது கூறினமையின் அது பொருந்துமோ? என்பது ஆராயத்தக்கது. தொல்காப்பியர் 'நீட வருதல் செய்யுளு ளுரித்தே' (அகரச்சுட்டு நீண்டு வருதல் செய்யுளு ளுரித்து என்று) கூறியுள்ளார். அதற்கு உரையாசிரியர்கள் 'ஆயிரு திணை' என்பதை உதாரணமாகக் காட்டி யுள்ளார்கள். இதுவும் நோக்கத்தக்கது. தாங்கருதிய பொருட்கேற்ப இவ்வாறு பதங் களைப் பிரித்தல் இவர்க்கு இயல்பென்பது, "அறுவகைச் சமயத் தோர்க்கும்" என்பதை 'அறுவகைச் சமயத்து + ஓர்க்கும்' எனப் பிரித்தலானு மறியப்படும். அமயம் வாய்த்துழி இன்னும் ஆராய்தும்.

பண்டிதமணி

**மு. கதிரேசச் செட்டியார் மகிபாலன் பட்டி**

"ஞாயிறு" அணிமிக வுடையதாய் வருதல் மகிழ்ச்சி யளிக்கின்றது.

# சாங்கியதத்துவ ஆராய்ச்சி

திருக்கோணமலை க. விசுவலிங்கம் அவர்கள் எழுதியது

(243-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்குணங்கள்

பிரபஞ்ச உற்பத்திக்கு யாது மூலகாரணமாக இருக்கின்றதென்பது ஈண்டு ஆராய்ச்சி செய்யப்படும். அதாவது—இப்பிரபஞ்சத்தை வெளிப்படுத்தக்கூடிய சக்தியின் அமைவும் பெற்றியும் எவ்வண்ணமென்பது. திரிகுணங்களெனவே சாத்துவம், ராஜஸம், தாமஸமும் பெறுதும்.[1] முக்குணங்கள் சமநிலையிற் கலங்காதிருந்துழி விடயங்களுக்குரிய (Objective)[2] மூலவஸ்துவாய்க் கவனிக்கப்படும். பிரதானம் அல்லது பிரகிருதி (Primordial Matter) செயலற்றும், விதிர்ப்பற்றும் கிடக்கும். முக்குணங்களுள் யாதேனும் ஒன்று அதிகரிக்கில் மற்றிரு குணங்களும் அதற்குள் அமிழ்ந்து, அதனுடைய குணத்தின் சாயலாகவே அவ் அதிகரிப்பின் தோற்றம் காணலாகும். இம் முக்குணங்கள், முறையே சுகம், துக்கம், மோகம் எனும் விசேடணம் உடையனவாய்க் கருதற்பாலன. அஃதற்றாக; ஈண்டு ஒரு ஆசங்கை எழுகின்றது; அது எவ்வண்ணமெனின், ஒன்றோடொன்று மாறுபடும் இயல்பு இக்கூற்றிற் காணப்பெறுகின்றமையான், இத்தகைய பிரமாண்டமான சக அமைப்பு, இவ்விதப் பிறழ்ச்சியால் யாங்ஙனம் நிறைவேறப்பெற இயலும்? இக்கடாவிற்கு உத்தரமாக, ஒரு காரியம், இரண்டு அல்லது அவற்றினும் மிக்க பதார்த்தங்களின் துணையான் முடிவுபெறப்படுதல் வெள்ளிடைமலை. பருத்திநாலும் எண்ணெயும் ஒருங்கெய்தப் பெறின், ஆங்குத் தீப்பொறி அணுகின் வெளிச்சம் உண்டாகும். ஒன்றன

---

[1] Every Phenomenon Consists of a Three-fold arche: Intelligible essence, energy and mass. In intimate union these enter into things as essential constitutive factors. (The positive Science of the Hindus).

[2] அகங்கார தத்துவத்திற்குப் பிற்பட்ட தத்துவங்களையே ஈண்டு விடயமென்றது.

தாற்றலான் மற்றொன்று பெறப்பெற்று ஒரு முடிவை எய்துமென்றல் சழக்குரையாகாது என்க.

பிரகிருதி

இஃது சாங்கிய வாதிகளின் ஆப்புக்கல்லாகும்[3]. இது கடவுட் கொள்கை உடையார்தம் உடன்பாடா? பௌத்தர்தம் மனோ விகாரமா? அல்லது வேதாந்திகளின் அவித்யையா? பிரகிருதி அசேதன வஸ்துவாகலான் அது கடவுளுமல்ல; மாயையின் திட்ப நுட்பங்களை இனிது நனிவிளக்கும் கூர்த்த அறிவுடைய சங்கர-வேதாந்திகளின் அவித்தை ஒருவாறு இதற்கு இணையாகும். அத்துவித சைவசித்தாந்திகளது சற்காரியவாதம், தடத்த சொரூப இயல் முதலியன இதை நன்கு விளக்கும்.

இதைப் பௌத்தரின் மனோவிகாரமெனல் இழுக்குடையதாகும். பிறசான்றோர் கொள்கைகளை இங்கு விடுத்தேம். இவையெல்லாம் விரிக்கிற் பெருகும். ஞான 'ஞாயிற்'றின் கார்க்கதிரில் யாம் விரித்து முற்படக் கிளந்த சாங்கிய-காரண-காரிய வாதம், அன்பர்தம் நினைவிற் கிடப்பின்-பிரகிருதியின் நிருமிப்பு அவண் தொடர்ந்து கிடத்தலான்-அவர் அதை அறியற்பாலர். ஒருவித தொடக்கமுமில்லாது தன்னந்தனிமையாய்த் திகழ்வது பிரதானம், பிரகிருதி அல்லது அவ்யக்தம். இன்னும் இன்னும் இதன் தன்மையைத் தொடர்ந்து எழுதுவோமாயின், முடிவில்லாது மீளல் எனுந் தோஷம் எம்பாற் படும். புருடனைப் பிரகிருதியிலிருந்து ஊகிக்கும் வலிமை சாங்கிய நூலார்பால் யாம் கண்டதில்லை. பிரகிருதியின் தொழில்கள் யாவும் காலம், தேசம் என்பனவற்றான் கட்டுப்படுகின்றன. இவை யாவும் வரையறைபாய் நிரல்படுத்தப் பெற்ற[4] அநுக்கிரகம் உடையன என்பர் சாங்கிய நூலார். பிரகிருதியின் வ்ருத்தி, அனுமான (ஈங்கு Deductive) நியாயத்தாற் கொள்ளல் முடியாது. பிரகிருதியினது மலர்ச்சியாவும் கண் முதலிய புலன்கள்பாற்படுமோ என்பது ஒரு விசாரணையாகின்றது. ஒலிக்கின்ற திரை சூழ்ந்த வையத்தின்கண் பலப்பல நுண்பொருள்கள் கடிதில் பிரத்தியக்ஷமாய்க் காணப்பெறுவாயினும், அவைகளை உண்மை என்று சாதிக்கின்றேம். மிகு தூரத்திலுள்ள ஒரு பொருளைப்

---

[3] இவண் Bergson's 'Elan Vital', Heget's 'Concrete Universals', Huxley's 'automatcn' ஒப்பு நோக்கற்பாலன.

[4] 'பரிணாம க்ரமம்'.

பிரத்தியக்ஷமாய்க் காணவியலாது. புகை, தூமம், பனி ஆதியவைகளின் அணுக்களை, அணுதர்சனியாலேனும் யாம் காண்பது அரிதேயாகும். 'வித்யுத் சக்தி' என அழைக்கப்படும் மின்சாரத்தைப்பற்றி அந்நூலாரின் கொள்கை யாதோ? சுருங்கச் சொல்லில், பிரகிருதி என்பது ஒரு பெற்றித்தான அனுபவஞானக்கொள்கை ஆகின்றது. அது பிரபஞ்ச உற்பத்திக்கு முற்பட்டதென்க (Prius of Creation).[5] பிரகிருதியினது அபிவியக்தி (வெளிகொள்ளும் வஸ்து) புத்திதத்துவமாகும்; இதற்கு மகத்தத்துவம் (Great Principle) என்னும் ஒரு பெயருண்டு; இதனினிருந்து அகங்காரமும் (அபிமானம்), பஞ்சதன் மாத்திரைகளும், பஞ்சபூத இந்திரியங்களும், பஞ்ச கர்மேந்திரியங்களும், மனமும் (Central Organ), மகா பூதங்களும்[6] தத்தம் மரபின் வினையோடியைந்து விரிவன ஆகும். இவைகளுக்கப்பாலே தனித்து நிற்கும் புருடனுஞ் சேரவே சாங்கிய தத்துவங்கள் 25- ஆகும் என்பர் ஞானியர். முக்குணங்களான் தன் நிலையினின்று கலங்கும் பிரகிருதியின் விருத்திகள் யாவும் ஐவகைப் பேதங்களை அடையும்; அவையாமாறு: அவிவிவேகம், விஷயம், சாமான்யம், அசேதனம், சந்ததிப் பெருக்கம் (Indiscriminative, Objective, Common, Irrational, Prolific) இவைகளின் நேரான எதிர்ப்பதங்களைப் புருடன்பால் ஏற்றுக. பந்தர்க்கர் என்பார் உள்ளது சிறத்தல் (Evolution) என்னுஞ் சாங்கியக் கொள்கையை வ்ச்யன் (Fitchean) விளக்கப்படி கொண்டுள்ளார்.[7]

## புத்திதத்துவம்

மேற்கூறிப்போந்த வரிசையில், முதலாவதான புத்தி என்பது என்னை? இது 'அத்யவசாயம்' எனப்படும். இதன் பொருள் நிச்சயித்தல் என்பதாம். அதாவது, இது ஆலோசித்து ஒரு காரியத்தைச் செய்வது என்னும் கருத்துடையதுபோன் றிருப்பினும், ஒரு காரியத்தின் தகுதியையும் முடிபையுந் தீர்க்கமாய் அறிந்து செய்தல்

---

[5] 'செய்து கோடல் பெருமை'.

[6] ஆகாசம் = (சப்த); வாயு = சப்த + பர்ஸ; தேயு = சப்த + பர்ஸ + ரூப; அப்பு சப்த + பர்ஸ ரூப ரச; பிருதிவி = சப்த + பர்ஸ + ரூப + ரச கந்த.

[7] When the "I" feels limited, the intellect affirms the "I" and opposes to itself the "Not I."

என்பதே இதன் உட்பொருளென யுய்த்துணர்க.[8] (Ascertainment of its Fitness). மேற்றிசை உளநூலுடையார் இதைச் சித்தம் (Will) என்பர். சித்தமும் மதியும் (ஈங்கு Understanding) ஒருமித்து எழுந்தமையையே புத்திதத்துவமெனச் சாங்கியர் கொள்வர். கான்ற் (Kant) என்பார் அறிவென்னும் பிழம்பின் சர்வாதிகாரியினது இணக்கத்தொடு சித்தமானது நிற்கு நிலையை (மனம்) அடக்கியாளும் என உரைப்பர். புத்தியானது எண்வித விருத்தி அடைகின்றது: தர்மம், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம் என்பனவற்றினொடு, இவைகளின் மாறுகோள்களாகிய மற்றைய நான்கனையும் அது அடைகின்றது. புத்திதத்துவ மொன்றினாலேயே புருட-பிரகிருதி விகற்பங்களை அறியலாகும். எனெனில், இது புருடனுக் கருகிருந்து, அப்புருடனது சைதன்யத்தை அடைகின்றமையான் என்க. இது, ஒருபரோபகாரிபோல் இருந்து, நெறிப்படும் பொருள்வயின் புருடனைச் செலுத்துகின்ற கைம்மாறு கருதாக் கருணைமாரி. நீவிர் (புருடன்) பிறவித்துன்பம் விளைக்கா தன்வகைளைப் பெறுகவென்று நும் புகழை யாமும் எம் சுற்றமும் ஏத்துவோமாக வெனப் பறை சாற்றிப் புத்தி மறைந்து விடும். பிரக்ஞை, பிரக்ஞானசந்ததி என்பன புத்தியின் பரியாய நாமங்களையாம். "முதலொடு குணமிரண்டடுக்கல் வழக்கியல்."

அகங்காரம்

இது, புத்திதத்துவத்திலிருந்து எழுவது ஆகும். ஈங்கு விசுவ சம்பந்த அகங்காரமும், மனோதத்துவ அகங்காரமும் வேறேயாம் என்பது உணர்க.[9] விசுவ அகங்காரத்தினின்று காண்பான், காட்சிப்பொருள் என்பவை குணங்களொடு கலந்து எழுவனவாகும். மனோதத்துவ அகங்கார மென்பது அபிமானம் அல்லது சுயநட்பாகும். இதற்கு ஒரு பிரதிநிதி தத்துவமுண்டு. பொதுவாக, அகங்காரமானது நால்வகைத் திரிபுகளை அடைகின்றது; அவையாமாறு காட்டுதும்: சத்துவ குணமுனைப்பில் அது நலமான விஷயங்களில் நாடும்; ராஜஸம் மிகில் தீச்செயல்களை விரும்பும்; தாமஸகுண மதிகரிக்கில் காங்தொழுகும். "சாநுமான" அகங்காரமானது, தன் மனத்தில் ஒரு வேளையிலேனும் எண்ணியிருக்கப்படாத நன்மைகளைத் தன்ஞானமற்றுச் செய்துவிடும்; "நிராநுமான" அகங்காரம்,

---

[8] 'ப்ரகாச க்ரியா ஸ்திதி சீலம்', (யோக சூத்ரம், ஸாதநபாதம், 18.)

[9] Cosmic and Psychological.

முன் சூழ்ச்சிக்கப்பெறாத ஆறுக்கேடுகளைச் செய்து மக்களைத் தீயுழி யுய்த்து விடும்.[10] இக்காலத்து உளநூலுடையாரின் பொருளடக்க முடிபுகள் இதை நனி விளக்கும். பிறாற் (Freud) என்பாரின் விளக்க உரைநூல் இக்கூற்றை மிகவும் நன்கு மதித்து விளக்கும்.

மனம்

இதனது முக்கிய தொழில் புலன்கள்பாற் படுவனவற்றைச் சம்யோகம் செய்து, அறிவிற்குரிய வழிகளைத் திறந்தும், மாறி மாறிப் பலதுறைகளைக்காட்டியும், புத்தியினது ஆஞ்ஞைப்படி, பஞ்சகர்மேந்திரியங்களின் துணையான் கிரியைகளை நடாத்துவது. இதற்கு வாயிலோன் என்ற ஒரு பெயர் உண்டு. காட்சியும் கிரியையும் மனத்தினது சககாரியத்தினாலேயே முடிவு பெறுகின்றன. இங்ஙனம் இன்னும் வரிசையாய் வரும் பஞ்சதன்மாத்திரை முதல் மகாபூதமீறாய் விரிவடைந்து கிடக்கும் தத்துவங்களை, இவ்விதழில் இடம் இராதெனக்கருதி, விரியாது விடுத்தோம். இனி, 25-வது தத்துவமாகிய புருடனைப் பற்றி எடுத்துரைப்பாம்.

புருடன்

உபநிடதங்களில் மிளர்ந்து கிடக்கும் "ஆன்மா"வைப் புருடனெனல் இதுபோது மிகையாகாது. இவை இரண்டும் ஒருபொருளனவாய் ஒன்று என்பாரும் உளர். பிரகிருதியானது இதற்கு நேர் எதிர் முகமான ஒரு பதார்த்தம். காலமுந் தேசமுங் கடந்து விளங்குவது புருடன் என்பர் சாங்கியரில் ஒருசாரார். இது ஐம்பூதங் கர்ணமாதியவை தான் அல்லாததாய், சாட்சிமாத்திரமாய், என்றும் நிலையுள்ளதாய், தனித்தும், தனக்குத்தானே முடிபுள்ளதாய் (End-in-itself), தானே இயங்கும் ஆற்றல் இல்லதாய் நின்றது. பொருட்தொகுதி யாவும் ஒருவரின் பிரயோசனத்திற்காகவே இருக்கின்றன. எவ்வண்ணம் ஒரு நாற்காலி ஒருவற்கு உபயோகப்படுகின்றதோ, அவ்வண்ணம் பிரகிருதி புருடனுக்கு உபயோகப்படும் என்பர் சாங்கிய நூலார். வேதாந்தமுடையார்பால் இங்கிதமுடைய சாங்கியர் உலக அநுபவங்கள் யாவற்றையுங் கிரமப்படுத்துதற்கு ஒரு சித்துப் பொருள் வேண்டுமென்பர்; அதுவே சாங்கிய நூலினது புருடன் என்று உரிமையுடன் இறும்பூதடைந்து கூறுவர்; சித்துப்பொருட்கு நாய

---

[10] இங்கு "Nicomachean Ethics of Aristotle" ஒப்பு நோக்கற்பாலது.

கத்துவமுளதென்பர். இது நிற்ச, பிரகிருதி அசேதனப் பொருளாதலான், அதனது விழுமிய பயனை அனுபவிக்க ஒரு சேதனப் பொருள் வேண்டுமென்பது 'பிறர் நலம் விரும்பும்' நூலுடையார் கொள்கை என்றவாறு. இதுவே கபிலரது சித்தாந்தம் என யாம் கொள்ளவேண்டி யிருக்கின்றது. ஆயினும், பொதுவாக, சாங்கியர் தம் புருடன் சித்துப் பொருள் மாத்திரமே யென்று கூறுவரேயன்றி, ராமனுஜ விசிட்டாத்துவித வேதாதிகளின் சகுணப்பிரம இலக்கணங்களில் ஒன்றனையேனும் ஏற்றுக்கொள்வதில்லை. இவர்கள் புருடன் ஆநந்தமெனக் கொள்வர்; ஏனெனில், ஒருவனெனக் கொள்ளின் உலகத்தில் நுகரப்படுவனவாகிய சுகதுக்கங்கள் எல்லோர்க்கும் ஒரேவேளையில் சம்பவித்தல் வேண்டும். சீவாத்மாவென்பதை நுண்ணூற் கடலை ஆய்ந்து கடந்த விஞ்ஞான பிக்ஷு என்பார் புருட அகங்கார சம்பந்தமென்பர்.

புருடனும் புத்தியும்

புத்தியானது புருடனின் தற்சுபாவத்தைப் புருடனுக்கு அருகிருந்து காட்டும். அது புருடனுற் பிரதிவிம்பிக்கப்பெற்றுப் புருடனின் தாதாத்மியத்தை அடைந்து, தான் அடைகின்ற விஷய அனுபவத்தைப் புருடன்பாற் படுத்தும். இஃது அருகி யல்லது வாராதென்க. அவ்வாறு படுத்தினும், எவ்வண்ணம் கண்ணாடியினுள்ள அழுக்கைமுகமானது தன்னிடமுள்ளதாக நினைந்து வருந்துமோ, அவ்வண்ணம் பிரகிருதியிலிருந்து விளைகின்ற சுக துக்க அனுபவங்களைப் புருடன் தன்வயத்தனவாகவே அஞ்ஞானத்தால் எண்ணி நொதுமல் அடைகின்றனென்பதைப் புத்திவலியுறுத்தும். புத்தி இவ்வண்ணம் நிற்கும்பெற்றி புருடனது பேற்றிற்காகவே என்று சாங்கியர் கொள்வர். பிரகிருதித்தொடர்பில் புருடன் அழுந்தாவிடினும், முன்னையதன்விரிவில் பின்னையது கிழமைபூண்டொழுகல், உரிமையைக் காட்டலல்லது விரோதத்தை உணர்த்தமாட்டாது. இந்த இயற்கைநாடகம், புத்தியினது துணையான் புருடன் தன்சுய சொரூபத்தைக் காணலுற்ற அமையத்திலேயே பின்னையதற்கு ஒழிந்துவிடும். "காக்கையொடு சார்த்திக் களம்பழத்தை விதந்த துணையல்லது காக்கைக்கு வெண்மை நோமை"[11] போலப் புத்தியொடு சார்த்திப் புருடனைவிதந்த துணையல்லது புருடனுக்கு வெண்மை

---

[11]தொல். சொல். கிளவியாக்க உதாரணம், சேனவரையம் இங்கு நோக்கற்பாலதன்று.

நோாது. "கலந்த பொழுதுங் காட்சியு மன்ன" என்ருர் தொல்காப்பியஞர். இது என்ன உறவு!. தலைவன் தலைவிபோல் வாழ்கின்றனர். "தோகைக்குந் தோன்றற்கும் ஒன்ருய்வரும் இன்பதுன்பங்கள்" என்னுந் திருச்சிற்றம்பலக்கோவையார் அடி ஒன்று எம் நினைவிற்கு வந்தது. சாங்கியர்கூறும் புருடபிரகிருதி ஐக்கியம் படிப்படியாய் வளர்தலை யாம் கவனத்திற் கொள்ளல்வேண்டும். புத்தி தத்துவம்சொரிந்த நீரின்கண் உலகநடவடிக்கைகளைப் புருடன் கண்ணுறுகின்ருன் என்னுந் தத்துவக் கொள்கையானது, இப்போது நன்குமதிக்கப் பெறுகின்ற கொள்கைகளுள் ஒன்றென்பது மறுக்கற்பாலதன்று. இக்காலத்து நவீன சாஸ்திரமுறைகளைக் கையாண்டு வருகின்ற வடதிசை, குணதிசைத் தத்துவசாஸ்திரவல்லுநர் இக்கொள்கையைத் தள்ளிவிடுவதற்கு ஓர் உபாயமுங்கண்டிலர்.

சாங்கியத்தின் உரிமைகொண்டாடுபவைகளாகிய கிரேக்கசாஸ்திரங்களை ஈங்கு ஒப்புநோக்குதல் விடுத்தேம். அப்படியே காண்ற் (Kant) என்பாரின் சிலகொள்கைகளையும் விரிவஞ்சி விடுத்தேம்.

## பந்தமும் மோட்சமும்

சாங்கியரின் புருடன் ஒருபொழுதிலேனும் பந்தப்படாத ஒரு வஃதுவாகலான், வீடு என்னும் பதம் ஈங்கு சொல்வழுவாமாறறிக. பந்தம், வீடு என்பனவெல்லாம் புருஷபிரகிருதியினது சம்யோகம், வியோகம் என்க. வீடென்பது, புருடனுனவன் தான் தனியனுய், பார்க்கின்றதற்குத் தனக்கு வேருருபொருளுமில்லாது, தன்னிற் பிரதிவிம்பிக்க வஸ்துக்களில்லாதவனுய்க் கண்ணுடிபோன்று, பிரகிருதி நசிவடைய, காலங்கடந்த வெளியில் "வரன் என்னும் வைப்புக்கோர் வித்து"ப்போல நிலவுவன். சாங்கியாது விடுதலை பௌத்தர்தம் சூன்யமுமல்ல, வேதாந்திகளின் அத்துவிதமுமல்ல, யோகநூலுடையார்தம் சித்திகளுமல்ல, நிரதிசய ஆநந்தமுமல்ல; ஆயினும், குணரகிதமாய், கெடாதவிழுப்புகழுடையதாய் நிற்கும் நிலையேயென்று யாம்கொள்ளல் வேண்டும். சாங்கியரில் ஒருசாரார், பிரகிருதி யொருபொழுதினேனும் உறங்கிக்கிடக்காதெனக்கொண்டு, புருடன் மோட்சமடையா னென்பர். கபிலர், முத்திநிலையைத் துக்கநிவாரணமெனக்கொண்டு, அந்நிலையைக் கைவல்யம் என்றனர். வேதாந்திகள் கூறுகின்ற ஆத்ம-அநாத்ம-விவேகமே சாங்கியர் கொள்வதாய பிரகிருதி-புருட-விவேகமெனல் இழுக்காகாதென்று மிகப்புலமை அடைந்த வாசஸ்பதி கூறியுள்ளார்.

சாங்கிய தர்சன மதிப்புரை

உள்ளது சிறத்தல் என்னுங் கொள்கை சாங்கியருக்கே தனி உரித்தெனல் யாவர்க்கும் உடன்பாடுடைத்தாதலை யாம் கண்டிலேம். இக்கொள்கையை சாங்கிய சாத்திரத்திற்கு முற்பட்டு வளர்ந்து கிடந்த உபநிடதங்களில் காணலாகும். கிரேக்க தத்துவ ஞானிகளிடத்தும் இக்கொள்கை மிகப்பரவியிருந்தது. இவரது கொள்கை, தத்துவசாத்திர சார்புளதல்லது, தற்கால பிரகிருத (Physics) சாத்திரமுறையான் இதனை விரித்து நிரூபித்துக் கூறும் ஆற்றல் ஒருவரிடத்தேனும் காண்டல் அரிது. பிரகிருதியின் விருத்திகளை விடய சம்பந்தமுடையன வென்றும், தூலம் (Body) என்றும் வாதிக்கும் சாங்கியர்பால் இவ்வகை ஆராய்ச்சி ஒரு பாரித்த செயலேயாம். இது ஒருபுறமாக; இனி, சுத்த-புருடன் (Pure Self) [வறிதாய் ஈரமற்றுக்கிடப்பது] என்பதையே சாங்கியர் கொண்டுள்ளார் என்பது ஒரு மித்தையான மனோகற்பிதமாகும். கால, தேச வர்த்தமானங்கட்கு அதீகமாக விளங்குகின்ற பரமார்த்த ஞானத்தை இவர் கைக்கொண்டிலர்; இவர் தம் புருடனை நிறுவும் நிலைக்களன்கள் யாவும் அனுபவவாதிகளின் ஆன்ம இலக்கணங்களைக் (Empirical Self) கொண்டுள்ளனவேயன்றி, ‘சுத்தம்’ (Purity) என்பது இவர் இடம் இல்லை என்பதே பலருடைய சித்தாந்தம். இவரினது அநந்த புருடக் கொள்கை (Pluralism) இதை நன்கு விளக்கும். புருடன் யாது, சீவன் யாது என்பவை இவர்க்கு மலைவை யுண்டுபண்ணுகின்றன. புருடசம்பந்தமில்லாது தனித்தியங்கும் விரிவுகளையெல்லாம் வரையறைப் படுத்தியதற்கு இவர் தக்க சான்று காட்டிலர். முக்குணங்கள் சமநிலை அடைந்தவிடமே பிரகிருதியென்றும், ஆங்கு அவற்றினிற்கு யாதேனும் விசிட்டம் அல்லது தாழ்வு இலதென்றும் சாங்கியர் கூறில், இவ்வியவகார உலகத்தில் ஒரு போதும் ஒன்று மற்றொன்றிற்குத் தொண்டு செய்ய அல்லது மடங்கித் தலைசாய்க்க உடன்படமாட்டாது. இனிக் குணங்களைத் தங்கள் நிலையினின்று கலக்கி, அவைகளைத் தடுமாறச் செய்வதற்கு இன்னும் ஒரு புறப்பொருள் வேண்டும். அசேதனமான பிரகிருதி துன்பத்தை நுகராது; செயலற்ற புருடன் எவற்றினையேனும் அனுபவிக்க முடியாது; எவ்வண்ணம் இரண்டும் சம்பந்தப்பட்டு ஒரு பயனை எய்தும்? இவையாவும் அகண்ட (Absolute) த்தில் ஐக்கியப்பட வேண்டும். காண்பான், காட்சிப் பொருள் என்பனவற்றின் நடுவண் சாங்கியராற் தோண்டப்பட்ட

அகழி மூடுதல் பெரும் வருத்தமேயாம். பிரகிருதியும் புருடனும் வேறெனில், இவைகளைத் தொடர்பு படுத்த ஒரு பொருள் (Tertium Quid) வேண்டும். மூன்ருவது பொருளைத் தேடுதல் தத்துவக் கல்வியுடையார்க்கு முறையன்ருகலின், இவை இரண்டும் ஒரு தனி ஞானப்பிழம்பின் இருநிலைகளெனவே கொள்ளல் வேண்டும்[12].

முற்றுப்பெற்றது.

[12] Subject and object are aspects of a higher unity.

# தமிழகத்துத் தருக்கநூல் வளர்ச்சி

திரு. பொ. கைலாசபதி, பி. எஸ்சி., எழுதியது

( இளவேனிற் கதிர் 64-வது பக்கத் தொடர்ச்சி )

இரண்டாவதாகக் கூறப்பட்ட வைசேடிக வாதத்தின்கட் பதார்த்தங்கள் (Categories) பொருள் (திரவியம்), குணம், கருமம், சமாமானியம், விசேடம், கூட்டம் (சமவாய மென்பர் வடநூலார்) என்பதும், பொருள் குணமுந் தொழிலும் உடையதென்பதும், அது ஞாலம், நீர், தீ, வளி, ஆகாயம், திசை, காலம், ஆன்மா, மனம் என ஒன்பது வகைத்தென்பதும், அவற்றுள் ஞாலம்—சத்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம் எனும் ஐந்து குணமுடைத்தென் பதும், நீர் சத்தம் முதலாய் இரசமிறுவாய் நான்கு குணமுடைத் தென்பதும், தீ சத்தம் முதல் மூன்று குணமுடைத்தென்பதும், வளி சத்தம் பரிசம் எனும் இருகுணமுடைத்தென்பதும், ஆகாயம் சத்தகுண மொன்றேயுடைய தென்பதும், குணங்கள் சத்தம் முத லாகப் பலவென்பதும் பிறவும் கூறப்படுகின்றன. இக்கொள்கையை யுடைய வடமொழி வைசேடிகநூல்கள் இக்காலத்து வழக்கிலுள் ளனவோ என்பது பெரியோர்களால் ஆராயப்படத்தக்கது. ஈண்டுக் கூறப்படும் வைசேடிகக் கொள்கைகள்பல பிற்காலத் தெழுந்த தருக்கபரிபாஷை, தருக்கசங்கிரகம், நியாயப்பிரகாசம் முதலிய வடமொழித் தருக்கநூற் கொள்கைகளோடு முரணுதல் சிந்திக்கற்பாலது. பதார்த்தங்கள் திரவியம், குணம், கருமம், சமா னியம், விசேடம், சமவாயம், அபாவம் என எழாமென்பது பிற் கால வைசேடிகர் கூற்று. ஈண்டு அபாவபதார்த்தம் கூறப்பட்டி லது. இது பிற்காலத்து வைசேடிகராற் சேர்க்கப்பட்டதென வட மொழியாராய்ச்சியாளர் கூறுவதும் இச்சந்தர்ப்பத்திற் சிந்திக்கத் தக்கது. இனி, ஆகாயம் காலந் திக்கு ஆன்மா என்னும் நான்கும் விபுத்திரவியங்களாதலிற் கிரியை யில்லனவென்னும் பிற்காலத் தருக்கநூற் கொள்கையினையும், பொருள் குணமுந் தொழிலு முடைத்தெனும் ஈண்டைக் கொள்கையினையும் ஒப்புநோக்குதலும் வேண்டும். சத்தகுணம் ஆகாயமொன்றற்கேயுரிய தென்பது பிற் காலத் தருக்கநூற் கொள்கையாக, அது பிருதிவி முதலாய ஐந்

தன் கண்ணும் விளங்குங்குணமென ஈண்டுக் கூறப்படுவதும் இவ் வைசேடிக மதத்தி லவதானிக்கக்கூடிய வேறொருவிஷயம்.[4] குணங்க ளிருபத்துநான் கெனப் பிற்காலத்தருக்கம் வரையறுத் தோத, ஈண்டு அவை அநேகம் எனப்பட்டதும் சிந்திக்கக்கூடிய விஷயமாகும். இனி, வைசேடிகமதங் கூறப்புகுந்த ஆசிரியர் திரவிய மொன்பதனுட் பிருதிவிமுதல் ஐந்தனிலக்கணங் கூறி ஏனைய நான்க னிலக்கணங்கூறா தொழிந்தமையினையும், குணங்கள் சில வற்றைக்கூறி அவற்றின் இலக்கணங்கூறா தொழிந்தமையினையும், ஏனைய பதார்த்தங்களைப்பற்றி வேண்டியஅளவு விரித்துக் கூறாமை யினையுஞ் சேர்த்து நோக்குமிடத்து, இப்பகுதியிற் சில அடிகள் இறந்தொழிந்தனவோ எனச் சந்தேகிக்க இடமுண்டு.

மூன்றாவதாகக் கூறப்பட்ட தருக்கநூற் கொள்கைக ளடங்கிய பாகத்தில் பௌத்தர்களாற் கொள்ளப்படும் பிரமாணங்கள் பிரத்தியட்ச மனுமானமென இரண்டென்பதும், இப்பிரமாணங்களின் வகைகளும், இலட்சணங்களும் இவை யென்பதும், அவைபற்றி வரும் போலிகளின் வகைகளு மிலக்கணங்களு மிவை யென்பதும் மிக விரிவாக எடுத்து விளக்கப்படுகின்றன. ஈண்டுக் கூறப்படும் விஷயங்கள் இன்ன வடமொழி நூலின்கருத்தைத் தழுவி வந்தன வென்று தமக்கு விளங்கவில்லையென்றும், தாம் வடமொழித் தருக்கநூல்வல்லார் பலரை விசாரித்த அளவில் இந்த முறையுள்ள வடமொழித் தருக்கநூல்கள் இக்காலத்து வழங்கவில்லையென்று சொல்லி விட்டனரென்றும் மகாமகோபாத்தியாயர் சாமிநாதையர் அவர்கள் மணிமேகலைப் பதிப்பிற் குறிப்பிட்டிருப்பது ஈண்டு எடுத் துக் காட்டற்பாலது. இக்காலத்து வழங்கும் தருக்க நூல்களி லுள்ள குறியீடுகளின் வேறாய குறியீடுகளைக் கொண்டிருத்தலும், உதாரணங்கள் யாவும் பலபல சமய விஷயங்கள் தழுவியிருத்தலும் இம்மூன்றாம் பாகத்தில் விசேஷமா யவதானிக்கத் தக்கன. இப் பகுதியை இனிது விளங்கிக்கொள்ளுவதற் குதவியாக, ஈண்டு கூறப் படும் தருக்கநூல் விஷயங்களை எடுத்து வகுத்தும், சாதாரண

---

[4] சத்தம் பூதங்களைந்தன் கண்ணும் உள்ள குணமென்பது சைவசித் தாந்தக் கொள்கை யென்பதும், மணிமேகலை ஆசிரியர் காலத்துக்கு அண் ணிய காலத்தவரெனக் கருதப்படும் மாணிக்கவாசகசுவாமிகள் "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி........வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி" என எடுத்தோதியதும் ஈண்டு சிந்திக்கற் பாலன.

உதாரணங்களைப் புகுத்தியும் "அநுமான விளக்கம்" எனப்பெயரிய தருக்கநூல் செய்தார்கள் மகாவித்துவான் திரு. நாராயண ஐயங்காரவர்கள். இந்நூலைப்பற்றிப் பின்னர்ச் சிறிது கூறுவாம்.

இவ்வாறு மணிமேகலையில் மூன்று வேறிடங்களிற் கூறப்படும் தருக்கநூல் விஷயங்கள் தமிழ்மொழிக்கு ஒரு தனிச் சிறப்பாகும். அக்காலத்துத் தமிழகத்து வழங்கிய தருக்கநூற் கொள்கைகளை ஒருவாறு விளங்கிக் கொள்வதற்குப் பெரியதுணையாகும் சிறப்பும், தமிழ்மொழிக்கண் உள்ள மிகப்பழைய தருக்கநூற் கொள்கைகளாகுஞ் சிறப்பும் இவ்விஷயங்களுக்கே யுள்ளனவாகும்.

3

மணிமேகலைக்கும் சிவஞானசித்தியாருக்கு மிடைப்பட்ட காலத்தெழுந்த தமிழ்நூல்களுள் தருக்க விஷயங்களைத் தொடர்பாய்க் கூறுவன இக்காலத்தில் வழக்கி லில்லைப்போலும். "தமிழிலே நந்திதேவனூர், சம்பந்தனூர், திருமறைஞானதேசிகர் முதலிய சான்றோர் நியாய விற்பத்திமான்களென்றும், அளவை விளக்கம் முதலிய நியாய நூல்கள் செய்தோர்களென்றும் விளங்குகின்றது" எனத் தந் நியாயவிலக்கண நான்முகத்து வில்லியம் நெவின்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வாசிரியர்கள் விளங்கிய காலமும் இந்நூல்களெழுந்த காலமும் மணிமேகலைக்கும் சிவஞானசித்தியாருக்கு மிடைப்பட்ட காலமாகலாம். நந்திதேவனூர் வாக்கியங்களாகச் சில வாக்கியங்களையும், அளவை விளக்க வாக்கியங்களாகச் சில வாக்கியங்களையும் வில்லியம் நெவின்ஸ் அவர்கள் தம் நூலுள் எடுத்துக்காட்டியது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. நந்திதேவனூர் சைவ சமயி யெனவும், அவர் செய்த நூல் சைவசமயச் சார்பானதெனவும் யூகிக்க இடமுண்டு. வில்லியம் நெவின்ஸ் அவர்கள் நந்திதேவனூர் வாக்கியங்களையும் அளவை விளக்க நூற்பாகங்களையும் எவ்விதம் பெற்றூர்களென்பது தெரியவில்லை.*

(தொடரும்)

---

* நந்திதேவனூர் நூலையேனும், அளவை விளக்கத்தையேனும், அன்றி இரண்டையுமேனும் பத்தொன்பதாம் நூற்றூண்டி லிருந்த நெவின்ஸ் அவர்கள் நேரே பார்த்திருக்கக்கூடுமாயின், இந் நூல்களாவது, இவற்று ளொன்றாவது இப்போதும் எங்கேனு மிருத்தல்கூடுமென எண்ண இடமுண்டென்பதை ஆராய்ச்சியாளர் சிந்திப்பார்களாக.

# இருளின் மிளிரும் ஒளி*

## அல்லது

# துன்பத்தில் துலங்கும் இன்பம்

( ஓர் இனிய தமிழ் நாடகம் )

நவாலி திரு. க. கி. நடராஜன் இயற்றியது

**அங்கம்—1.** **காட்சி—1.**

ஈழத்தின் பண்டைய தலைநகராகிய கண்டிநகருக் கணிமையி லுள்ள வத்தகாமம் என்னும் ஓர் அழகிய சிற்றூரில் ஒரு மாடிவீட்டின் முற்பக்கத்தில் மூன்று நாற்காலிகளில் மூவர் இருக்கின்றனர். அவர்கள் பெயர்கள் முறையே **மமதாம்பாள், சிங்காரவேல், குமுதாம்பாள்** என்பன. **மமதாம்பாள்** மமதையும் பிடிவாதமும் நிரம்பிய 45 வயதுள்ள ஒரு மாது. **சிங்காரவேல்** அவள் கணவன். **குமுதாம்பாள்** மமதாம்பாளின் தங்கை; அழகும் குணமும் வாய்ந்த 40 வயதுள்ள ஒரு நங்கை. **மமதாம்பாளும் குமுதாம்பாளும்** காப்பி சாப்பிடுகிறார்கள். **சிங்காரவேல்** சுருட்டுப் புகைத்துக் கொண்டிருக்கிறார்.

**மமதாம்பாள்:** (தங்கையை நோக்கி)

'ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூ துணம் புறவெனத்' துதைந்தநல் லெழிலுடைத்
தங்காய்! நீயென் தங்கையே யலாமல்
எங்கேனு முளவோர் ஏந்திழை யாயின்
நின்கா தலனும் நேற்றின்று பழகிய
எங்கேனு முளவோர் ஏதில னாயில்

---

* உருஷியப் பெரியாராகிய டால்ஸ்டாயின் கருத்துக்களைத் தழுவி எழுதப்பெற்றது.

பாதகமில்லை. நடப்பதைப் பார்த்து நகையாடிக் கொண்டிருக் கலாம். பிள்ளையையுங் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது போலத் தூண்டிவிட்டு அகமகிழ்ந்து பார்த்துக்கொண்டிருக்க லாம். நின் கொழுநனே நிகரற்ற பித்தனாகத் தெரிகிறது. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இனி, மைத்துனன் என் றும் மதியாது, யான் கருதுவதை எடுத்துரைக்க வேண்டி யது என் கடனாய் விட்டது.

**குமுதாம்பாள்:** அக்கா! நீங்கள் அறைவ தனைத்தும் உண்மையே. எனினும், இப்பொருள்பற்றி நீங்கள் கூறுவது எனக்கு இனி தெனத் தோற்ற வில்லை.

**மமதாம்பாள்:** நினக்கு இனிதெனத் தோற்றவில்லை! ஆனால், நிலைமை இவ்வாறாகவே இருக்குமாயின், நீ விரைவிற் பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கையைப் பெற்றுவிடுவது திண்ணம், பேதாய்!

**சிங்காரவேல்:** என்ன? கோடி தொகுத்தாருமா பிச்சையெடுப் பது?

**மமதாம்பாள்:** (கடுகடுத்து) என்ன நீங்கள் பேசுவது? பேதுற் றார் போலப் பிறரெவ்வம் அறியாது பேசுகின்றீர்கள். 'எப் பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்' என்று கொள்வது உங்கள் குணமாய் விட்டது; போதும்; வாயை மூடுங்கள்.

**சிங்காரவேல்:** தெரியாது சொல்லிவிட்டேன்; தெரிவையே, பொறுத்தருள்.

**மமதாம்பாள்:** தெரியாது பேசுவதுதான் உங்கள் இயற்கையாய் விட்டது.

ஆடவர் எதனையும் அகமகிழ்ந் தாற்றிச்
சேடனைப் போலத் திரியலாம் போலும்!
பெண்டிர்தா மூலகிற் பேதையர் போலும்!
இஃதென்ன கோலம்! இதென்ன மடமை?
புத்திரர் பலருளர்; புதல்வியர் சிலருளர்;
பத்தா வெனப்பணி பத்தினி யுள்ளாள்;

அத்தனை பேர்க்கும் ஆதா வாற்று(து)
உத்தியோ கம்விட் டுள்ளதை யும்பிறர்
சொத்தாக்க முயலும் பித்தனைக் காண
யார்தான் பொறுப்பர் யார்தான் நகையார்?

**சிங்காரவேல்:** எவ்வாறு குமுதம் இம்மனப்பான்மை ஏற்பட்டது? அவருக்கு இஃது எப்போது உற்பத்தியாயிற்று?

**குமுதம்:** சென்ற ஆண்டு அவர் தங்கை - என்மைத்துனி - மண்ணுலகை நீத்தாள். அதிலிருந்து ஆரம்பமானது. தங்கையென்றால் அவளுக்காகத் தன் உயிரையுங் கொடுப்பர். அத்தகைய உழுவல் அன்போடு அவளை ஓம்பி வந்தார். அவள் பொல்லாத காலன்கையிற் சொல்லாமல் மறைந்த நாள்முதல் அவர் அதே கவலையாகச் சிலநாட்கள் இருந்தனர். அல்லும் பகலும் அதைப்பற்றியே உரையாடி வந்தார். அதன்பின், நோய்வாய்ப்பட்டார். கடுஞ்சுரங்கண்டது. அது நீங்கிச் சுகமானதும் அவர்வாழ்க்கையிற் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டு விட்டது.

**சிங்காரவேல்:** ஏன்? சென்ற தைத்திங்களில் திருக்கோணமலைக்கு வந்திருந்தார். அங்கு, அவர் எம்மோடு உரையாடியதிலிருந்து எவ்வித வேற்றுமையுந் தோற்றவில்லையே, குமுதம்?

**குமுதம்:** ஆம். ஞாபகமிருக்கிறது. அப்போழ்தே அவர் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

**சிங்காரவேல்:** எப்படி?

**குமுதம்:** எப்படியா?

குடும்பக் கவலையே குறைமதி யாயிற்(று)
இடும்பைக ளனைத்தையு மின்பமாக் கோடல்
அல்லும் பகலும் நூல்களை யாய்தல்
வில்லே ருழவரை வெறுத்துக் காய்தல்
உழவோர்க் குதவலை யுவத்தல் பெரும்பொருள்
பெற்ற ஞான்றே பிறர்க்குத வாமலஃ(து)
அற்ற ஞான்றே யறத்தை நினைத்தி
என்றனு தினமு நெஞ்சொடு கிளத்தல்

பண்ணமை யாழ்குழ லின்னன கீதம்
நண்ணி நயப்ப திண்ணிய செவியல
உண்ணுதற் குணவிலா வுடுத்தற் குடையிலா
மண்ணுளோர் துன்பம் நுண்ணிதா வாய்ந்து
கூறுநர் கட்டுரை கொள்வதே நற்செவி
பொய்க்காட்சி நீக்கிப் புனிதமா மினிநும்
நற்காட்சி காண்பதே நற்கண் ணெனவுஞ்
சாந்தம் புகையொடு துருக்கங் குங்குமம்
மோந்தின் புறுவன மூக்கல பிறர்க்கென
மூபலூக ரடித்தலம் மோப்பதே மூக்கு
கைப்பன் துவர்ப்புக் கார்ப்புப் புளிப்பினிப் பு)
உப்புருசி பார்ப்ப நாவல்ல வேழையர்
செப்புஞ் சிறுமையைச் செவிக்கொண் டவர்க்கா
வுறுபோ ராடும் நாவே யுயரிய
பெருமித நாவெனப் பிறர்க்கெடுத் துரைத்தலும்
*நாட்குறிப் பதனி னனிபல குறித்தலும்
சமயக் கணக்கரொடு சமவா திடுதலும்
எளியரை ஓம்பி யிணையா மதித்தலும்
இன்ன மாட்சிய ரினைய ராகித்
தன்னல மறந்து தாமா றினரே.

**சிங்காரவேல்:** அப்படியா? இன்று எதற்காக அவர் நகர்ப்புறம் போய்விட்டார், குமுதம்?

**குமுதம்:** எதற்காக என்பதை என்னிடம் கூறிலர். எங்கள் தென்னந் தோட்டத்தில் யாரோசில வினைஞர்கள் மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டார்களாம். அதுபற்றியே போயிருத்தல் வேண்டும்.

**சிங்காரவேல்:** எந்தத் தோட்டத்தில்? கந்தளாய்த் தோட்டத்திலா?

**குமுதம்:** ஆம். கந்தளாய்த் தோட்டத்தில்தான். பெரும்பாலும் மரந்தறித்தோருக்குச் சிறைத்தண்டனை கிடைக்குமென நம்புகின்றேன். மரங்களுக்குரிய விலையை எங்களுக்களிக்குமாறும்

---

* நாட்குறிப்பு - Diary .

அவர்களுக்கு உத்தரவு பிறக்கக் கூடும். வழக்கு விசாரணையும் இன்றுதான். அங்குதான் இவரும் போய்விட்டார்.

**மமதாம்பாள்:** நின் கணவன் அத்திருடரை மன்னித்துவிடுவாரென்பது திண்ணம். அவர்கள் மீண்டும் வந்து திருடுவார்கள்.

**குமுதம்:** இவ்வாறே நடைபெற்று வருகிறது அக்கா! சென்ற வாரம் எம் சீதாவத்தைப் பூங்காவில் இவ்விதமே திருட்டுப் போனபோது, திருடரை மன்னித்து விட்டார். மூன்றுநாள் முந்திரிகைத் தோட்டத்திற் பெருங்களவு நடைபெற்றது. அக் கள்வரும் இவ்விதமே மன்னிக்கப் பட்டார்கள். இதுவும் அவ்வாறாகவே ஆகும்போல் தெரிகிறது. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயஞ் செய்து விடல்" என்பது இவர் மாட்டுத்தான் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணக் கிடக்கின்றது.

**மமதாம்பாள்:** இதனாற்றான் என் கருத்துக்களை நான் அவருக்கு எடுத்து இடித்துரைக்க விரும்புகின்றேன்.

தீசிறி தென்று வாளா விருப்பிற்
றீயினால் விளையுஞ் சேதமோ பெரிது;
அதனால், முளையிற் களைதலே மூதறி வாகும்
வளர்ந்தபின் களைதலோ வருத்த மாகுமே.

**குமுதம்:** நான் என்ன செய்வது அக்கா?

**மமதாம்பாள்:** நீ என்ன செய்வதா? உன் கணவனை அழைத்து இவ்வாறு நடத்தற்கு இடங்கொடுக்க முடியாதெனக் கூசாது கூறிவிடு **குமுதம்**. உனக்கோ,

'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்கள்'

டலராயினர். மைந்தருக்குத் தந்தை வழிகாட்டும் முறை இதுவா? என்றுகேள். எதற்காக நீ வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்?

**குமுதம்:** சரிதான் அக்கா? நாளடைவில் இம்மாற்றம் அவரை விட்டு நீங்கிவிடும் என்றே எண்ணிக்கொண் டிருக்கிறேன்.

**மமதாம்பாள்:** உன்னைக் குமுதம் என்று நன்றாக அழைத்தார்கள். இந்துபோன்ற என்னைக் கண்டதும் நீ மலர்ந்து விடுகின்றாய். ஞாயிறன்ன நின்கணவனைக் கண்டதும் கூம்பிவிடுகிறாய். (கோபச் சிரிப்போடு) நல்லாயிருக்கிறது குமுதம் உன் வாழ்க்கையின் நலன்?

**குமுதம்:** இல்லை அக்கா! இனி வாளா இருக்கமுடியாதுதான். 'கடந்த ஞானியுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்' என்றிருப்ப, இவர் பிள்ளைகளைப்பற்றி அற்றமுஞ் சிரமம் எடுத்துக் கொள்ளுகிறாரில்லை. பால்மணமாறாப் பாலனொன்றுண்டு. மற்றப் பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் யான் தனியாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. முன்னாளிற் குழந்தைகள்மீது கண்ணுங் கருத்துமாயிருந்தார். இந்நாளில் அவர்கள் மீது அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ளுகிறாரில்லை. மகன் **இன்பநயகம்** ஒழுங்காகக் கல்வி கற்பதாகத் தெரியவில்லை. இம்முறை அவன் தேர்விற் சித்திபெய்துவதும் ஐயமே. இவற்றையெல்லாம் அவரிடம் கூறப்புகுந்தால், "அவன்படித்தது சாலும். கற்றுத்தகுதிச்சீட்டுப் பெறுவதோடு அமைந்துவிடும் இவ் அற்பர் கல்வியை நிறுத்தி விடுவதே சிறந்தது" என்கிறார்.

**மமதாம்பாள்:** நிறுத்திவிட்டு எங்கு போவதாம்?

**குமுதம்:** எங்கும் இல்லை. (முகத்தைச் சுளித்துக்கொண்டு) உலகோர் செய்வதெல்லாம் அவருக்குப் பிழையாகத் தெரிகிறது. மூத்தமகன் **சுந்தரம்** பல்கலைக் கழகத்திற் கற்றுத்தேற வேண்டியவை அனைத்திலுந் தேறிவிட்டான். இனி, ஏதாவதொரு வேலை தேடவேண்டும். அதைப்பற்றி இவர் கவலைகொள்ளுகிறாரில்லை. தவிர, உயர்தர அரசாங்க ஊழியர் தேர்வுக்குப் (Civil Service Examination) போகலாம் என விழைகின்றான். அதனையும் அவர் விரும்புவதாகத் தெரியவில்லை. குதிரைச் சேனையிற் சேரலாம் என்று விரும்பினான். அதற்கும் மறுப்புக் கூறிவிட்டார். 'பின் செய்வதுதான் என்ன? இத்துணை

யுங் கற்றபின் ஏர்பிடித்து உழுகிறதா!' என்று கேட்டால், "அதற்கென்ன உழவு பழுதா! ஆற்றங் கரையின் மரம்போல அரசறிய வீற்றிருக்கும் நிலையற்ற வாழ்வைக்காட்டிலும் உழுதுண்டு வாழ்தல் ஏற்றமுடையதன்றோ! உழுவார் உலகத்துக்கு ஆணியாவர்; அது மாட்டாதார் ஏதாவதொரு அரசாங்க காரியாலயத்திற் புரப்பார் செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து, அவரைத் தொழுதுண்டு வாழ்வாரேயல்லரோ! 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால், உழந்தும் தலை உழவே' யன்றோ!

'வாழிநான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியால் உலகளிக்கும் அடல்வேந்தர் பெருந்திருவும்
ஊழிபே ரினும்பெயரா உரையுடைய பெருக்காளர்
மேழியால்'

விளைவனவன்றோ ! உழுவர் உழும் உழவாலேயன்றோ பலகலையின் தொகையும், பாவலர்தம் பாவும், மலர்குலாந்திருவும், மழையும், மனுவும், உலகும் ஒளிகான்று விளங்குகின்றன ! 'வேதநூல் முதலாகவிளங்குகின்ற கலையனைத்தும் ஓதுவார் எல்லாரும் உழுவார்தந் தலைக்கடைக்கே; கோதைவேல் மன்னவர்தங் குடிவளமுங் கொழுவளமே; ஆதலால் உழவு குறைந்ததா!'' என்று கூறுகின்றார். அவன் என்ன செய்வான்! என்னையே அணுகி, 'அம்மா! நான் என்னசெய்வது ! என்னசெய்வது !' என்று அடிக்கடி கேட்டுக்கொண்டே வருகிறான். நானே யாவும் ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. ஆனால், அதிகாரமெல்லாம் அவர்கையில் இருக்கிறது.

[வேலைக்காரி வருகின்றாள்]

**வேலைக்காரி:** குழந்தை அழுகிறதம்மா! வந்து பாலைக்குடுங்க.

**குமுதம்:** வருகிறேன். இதோ வருகிறேன். [போகின்றாள்]

**பமதாம்பாள்:** என்செய்வாள்? பாவம். ஏழு குழந்தைகளும் அவளுமாகப் படும் அல்லல் இவ்வளவு அவ்வளவல்ல. அவருக்கு (தன் நெற்றியைத் தொட்டுக்காட்டி) இங்குதான் ஏதோ பிழை ஏற்பட்டுவிட்டதுபோல் தெரிகிறது. நினைக்க வயிறெரிகிறது.

[அறிவாம்பிகையும் சுகிர்தாம்பிகையும் வருகிறார்கள். அறிவாம்பிகை குமுதத்தின் மகள், வயது 20. சுகிர்தாம்பிகை மமதாம்பிகையின் மகள், வயது 22. இருவரும் - கூடைகள் கொண்டு பூப்பறிக்கப் போகிறவர்கள் - மமதாம்பிகையையும் சிங்காரவேலையும் கண்டதும் நிற்கிறார்கள்.]

(தொடரும்)

## யாழ்ப்பாணத்தில் ஒரு நூற்றாண்டின் முன்னேற்றம்

தமிழர் மீண்டும் ஈடேறுதல்

இதன் சிறந்த பயன் 1930-ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணையில் அரசியல் திருத்தக் கருத்தும், ஒரு சமயச் சார்பும் இல்லாமல் கலைகளின் வளர்ச்சிக்காகவே கலா நிலையம் என்னுங் கழகம் நிறுவப் பெற்றதாகும். இது நல்ல நூற்களஞ்சியத்தை உடையதாகும்................இக்கழகத்தின் ஊக்கத்திற்கும், உயர்ந்த நூலாராயும் தன்மைக்கும் ஓர் ஆண்டில் ஆறு முறை வெளிவரும் ஞாயிறு என்னும் இதன் வெளியீட்டின் உயர்வும் பெருந்தன்மையும் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

—டாக்டர் டி. ஐஸக் தம்பையா,
"சிலோன் அப்ஸர்வர்." நூற்றாண்டு இதழ்,
பிப்ரவரி, 4, 1934.

# பராக்கிரமவாகுவின் உருவச்சிலையன்று, மற்று ஒரு முனிவரின் உருவச்சிலையாகும்

இலங்கையில், பொலன்னருவா என்னும் புராதன நகரிற் **பொற்கல் விகாரம்** என்றழைக்கப்படும் புத்தாலயத்திற் பெருமை வாய்ந்த புராதன உருவச்சிலை யொன்று இன்றும் நின்று நிலவுகின்றது. இது முதலாவது **பாக்கிரமவாகு** மன்னனது உருவச்சிலை என நெடுங்காலமாக நம்பப்பெற்று வந்தது. ஆனால், இந் நம்பிக்கையைப் புராதன பொருளாராய்ச்சி வல்லுநர் ஆசங்கித்து வந்தனர். அண்மையில், இவ்வுருவச்சிலை செந்தமிழ் முனிவர் (அகத்தியர்) சிலையாக இருத்தல் கூடுமென்ற கொள்கை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதிற் கண்ணுங் கருத்துமாயிருந்து வருவோராகிய டாக்டர் பியர்சன், இதனை நன்காராய்ந்து சித்தாந்தப் படுத்துமாறு சர்வ தேசங்களிலுமுள்ள பழைய ஆராய்ச்சி வல்லுநர்களை வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோளுக் கியைந்து, அன்னவர்கள் ஆய்ந்த தன் பலனாக, இக்கற்சிலை மன்னனெவனையுங் குறிப்பதல்லவென்றும், ஒரு முனிவனையே குறிப்பதென்றும் அவர்கள் முடிவுகட்டினார்கள். இதை "இலங்கை அறிவு நூல் பத்திரிகை" (Ceylon Journal of Science) யில் சிலாசாசனப் பகுதியைச் சார்ந்த ஸ்ரீ எஸ். பரணவிதண என்பார் விரிவாக எடுத்து விவாதிக்கின்றார். அக்கட்டுரையின் சாரம் ஈண்டு மொழிபெயர்த்துத் தரப்படுகின்றது.

பொலன்னருவாவில், **பொற்கல் விகாரம்** என்று அழைக்கப்படும் புத்தாலயத்தில் ஒரு கற்பாறையின் பக்கலில் நிற்கும் கரிய பெரிய கற்சிலை, இலங்கையிலுள்ள பண்டைப் பெருஞ் சிலைகளுள் ஒன்றாகும். இது, பொலன்னருவாவைத் தலைநகராகக் கொண்டு ஈழத்தை ஆண்டு வந்த மன்னர் பெருமக்களுள் தலைசிறந்தவனாகிய முதலாவது பராக்கிரமவாகுவின் உருவச்சிலை என்பது பொதுமக்கள் நம்பிக்கையாக இருந்துவருகின்றது. இதற்குப் புராதன பொருளாராய்ச்சி வல்லுநரிடமிருந்து ஓர் ஆதாரமுங்கிடைத்திலது. தவிர, ஆராய்ச்சி வல்லுநர் பன்முறை இக்கொள்கையை ஆசங்கித்தும்

வந்தனர். இதைப்பற்றி ஆராயப் புகுந்த மிஸ்ரர் பெல் (Mr. Bell), இது எந்த மன்னனது உருவமாகவேனும், அல்லது எந்தப் புத்த சமயப் பெரியாருடைய உருவமாகவேனும் இருக்க முடியாதென்று திர்க்கமாக நம்புகின்றார். அச்சிலையின் அத்தத்திலுள்ள பனை ஏடு, வேதம் வரையப்பட்ட ஏடு என்பதும் அவர் கருத்து. எனினும், இஃது இன்னதாதற்கு எவ்வித ஏதுக்களையும் அவர் காட்டிற்றிலர். கையில் ஏடிருக்கின்றமையானும், அதன் தோற்றமும் நிலையும் சிறந்து விளங்குகின்றமையானும் அஃது இந்தியாவிலிருந்து ஈழம் போந்த ஒரு சமயாசாரியரது உருவச் சிலையாக இருத்தல் வேண்டுமென அவர் விவாதிக்கின்றார். இதுவேயுமன்றி, இவ்வுருவம் கபிலருடைய உருவமாயிருத்தல் கூடுமென்றும், பராக்கிரமவாகு, கபிலருக்குச் சகல சித்திரச் சிறப்புகள் வாய்ந்ததும், அழகான சிகரங்கள் அமையப்பெற்றதும், கழுகின் உருவத்தை யுடையதுமான ஒரு கட்டிடத்தை அமைத்துள்ளானென்றும் அவர் கருதுகின்றார்.

## புராதன பொருளாராய்ச்சி நிபுணர் கருத்துக்கள்

டாக்டர். ஏ. கே. குமாரசாமி, இது பராக்கிரவாகுவின் சிலையல்ல என்று ஒருபோது கருதினர். ஆனல், பிற்காலத்தில் அவர் எழுதியுள்ள நூலில், அது பராக்கிரமவாகுவின் உருவமாயிருத்தல் கூடும் என்பதை அங்கிகரித்து, "பக்தி நிறைந்த பராக்கிரமவாகு தனதுருவம் இவ்வாறுக அமைக்கப்படுவதை விரும்பியிருக்கலாம்" என வரைந்திருக்கின்றார்.

அண்மையில், இச்சிலை அகத்தியரது சிலையாயிருத்தல் கூடுமென்ற கருத்துப் பரவியது. இக்கருத்து, அச்சிலையின் அவயவங்கள் சிலவற்றேடு ஒத்திருத்தலை ஆதாரமாகக் கொண்டெழுந்தது. இக்கருத்தை முதன் முதல் வெ ரிவித்தவர் திரு. சி. எப். வின்சர் (Mr. C. F. Winsar) என்பார். இதனை விரிவாக எடுத்துப் பரப்பியவர், டாக்டர் ஆண்ட்ரியஸ் நெல் (Dr. Andreas Nell). இதன் பலனுக, கொழும்பு பொருட்காட்சிச்சாலையிலுள்ள அச்சிலையின் சுண்ணச்சாந்து வார்ப்பிலிருந்த பெயர் அதிலிருந்து நீக்கப்பட்டது. பராக்கிரமவாகுவின் சிலை என்னும் கருத்துடையார் பலர், இச்செயலை ஆக்ஷேபித்தார்கள். இவர்களுள், டாக்டர் டப்ளியூ. ஏ. டி. சில்வா (Dr. W. A. De. Silva) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அதன்பின், இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள இந்திய சித்திர ஆராய்ச்சியிற் சிறந்த நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கவேண்டும் என்னும் வேட்கை, கொழும்பு பொருட்காட்சிச்

சாலை நிருவாகர், டாக்டர் ஜே. பியர்ஸனுக்கு ஏற்பட்டது. இதன் பயனுக, அவ் ஆராய்ச்சியாளருக்கும் டாக்டர் பியர்ஸனுக்கு மிடையே நடைபெற்ற கடிதப்போக்குவரவுகள் பின்வருவன.

மன்னனுருவம் அல்ல

இவ் ஆராய்ச்சியாளரில் ஏறத்தாழ எல்லோரும் இஃது எந்த மன்னனது உருவச்சிலையும் ஆகாதெனவும், ஒரு முனிவனது உருவச்சிலையே ஆகுமெனவும் அபிப்பிராயந் தெரிவித்தனர். ஆனுல், அகத்தியரது உருவச்சிலையாகுமோ என்னுங் கொள்கை சம்பந்தமாகக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. 1925-ம் ஆண்டில், இலங்கையின் பலபாகங்களையுஞ் சுற்றிப்பார்த்துப் பழைய பொருட்களை ஆய்ந்து வந்தவராகிய டாக்டர் ஜெ. பி. எச். வொகெல் (Dr. J. P. H. Vogel) என்பார் கூறுவதாவது:—

"பொலன்னருவாவில் உள்ள முதலாவது பராக்கிரமவாகுவினது உருவம் என்று கருதப்படும் கற்சிலை, மிகப்பழையதும், சிறந்தது மானதொன்று என்பது என் கருத்து. இவ்வுருவம், பொலன்னருவாவிலிருந்து அரசுபுரிந்துவந்த தலைசிறந்த அரசனுடைய உருவமாக இருத்தல் கூடும் என்ற கருத்துப் பரவியமை புதுமையல்ல. அவ்வுருவம் மிகப்பெரியது; அரசத்தோற்றம் அமையப் பெற்றது; மிக்க அழகு வாய்ந்தது. இவற்ருல், பொதுமக்கள் இதனை ஒரு மன்னன் உருவமாக மதித்து விடுகிருர்கள். இக்கருத்தை ஆராச்சியாளரும் அங்கீகரிப்பது ஆச்சரியத்தை விளைக்கின்றது.

கற்பாறையில் அமைக்கப்பெற்றிருக்கும் இப்பெரிய உருவம், ஒரு மன்னனது உருவச்சிலையாகுமா என்பதை ஆராய்வாம்: அதன் தலையில் முடி இல்லை; உடலின்மேல் விலையுயர்ந்த ஆபரணங்கள் இல்லை. இவையிரண்டும் கீழைத்தேச அரசர் இலக்கணங்களாம். தவிரவும், அவ்வுருவின் அரைக்கு மேற்பட்ட பாகம், வெறுமையாக இருக்கிறது. நீண்டு தொங்கும் தாடியும் மீசையும் ஒரு முனிவனைக் குறிக்கின்றன. இவை மன்னனைக் குறிப்பனவல்ல. தலையிலுள்ள கேசமும் ஒரு முனிவனது கேசத்தைப்போலவே இருக்கின்றது. காதின் கீழ்ப்பாகம் நீண்டு தொங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனுல், குண்டலங்கள் அணியப்படவில்லை. தவிர, சிலையின் அமைப்புமுறையைக் கொண்டும் இன்ன சிலையென்பதை நிச்சயிக்கக்கூடியதா யிருக்கிறது. பராக்கிரமவாகு இயற்றுவித்த உருவங்கள் பெரும்பாலும் சிறப்பில்லாதவை. இம் மன்னன் தனக்கு முன்

இருந்த அரசர்கள் அமைப்பித்த கட்டிடங்கள், உருவச்சிலைகள் ஆகியனவற்றைக் காட்டிலும் பன்மடங்கு உருவத்தாற் பெரிய கட்டிடங்களையும் சிலைகளையும் அமைக்கவேண்டும் என்னும் பெரு விருப்பினன். இவன் அமைத்த உருவங்கள் இயல்பாகவே அளவி னுற் பெரியவை. ஆனுல் அழகற்றவை.

மற்றுப் பொற்கல் விகாரத்திலுள்ள சிலையோ, சிறந்த சித்திர அமைப்பு வாய்க்கப் பெற்றது. அதிசயத்தை விளைக்கும் இவ்வுரு வச் சிலையை அமைத்த சித்திரச்சிற்பி சுத்தமான முறைகளைக் கையா டிக் கவின்பெறு சிறப்பமைய அதைப் புனைந்திருக்கின்ருன். இச் சிலையின் அமைப்புமுறை, அது பொலன்னருவா தலைநகராக இருந்த காலத்திற்கு முற்பட்ட காலத்தது என்பதைக் காட்டி யமைகின்றது. அதாவது, பராக்கிரமவாகுவின் காலத்திற்கு முன்னமேயே அஃது அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அஃது இந்துமுறை யைப் பின்பற்றிய சிலை என்பதும், புத்த முறையைப் பின்பற்றிய சிலையல்ல வென்பதும் ஐயந்திரிபற அறியக்கிடக்கின்றது. தெய்வ உருவமாகுமோ வெனின், தெய்வ உருவங்களுக்குரிய இலக்கணங் களும் அதிற் காணப்படவில்லை.

பொலன்னருவா உருவச்சிலை தெய்வ உருவமாகவேனும், அல் லது மன்னனுருவமாகவேனும் இலதேல், ஒரு முனிவரின் உருவ மாகவே இருத்தல் வேண்டும் என்பது திண்ணம். ஆகவே, இஃது அகத்தியர் உருவமாக இருத்தல் கூடுமா ? அகத்தியர் தெற்கே ஆரிய நாகரிகத்தைக் கொடுவந்து புகுத்தினுரென்பதும், தென்னிந் தியாவில் உள்ள அகத்திய மலையில் இன்றும் வசித்து வருகிரு ரென்பதும் நம்பப்படுகின்றன. அகத்தியர் எப்பொழுதும் தெற்குப் பக்கத்தோடு சம்பந்தமுடையவர். பொற்கல் விகாரச்சிலையும் தெற்கு நோக்கியே இருக்கின்றது."

## அகத்தியர் என்னுங் கொள்கை

இந்திய புராதனப் பொருளாராய்ச்சிப்பகுதித் தலைவராகிய ராவ் பகதூர் தயா ராம் ஷானி (Rai Bahadur Daya Ram Sahni, M. A.) அச்சிலை அகத்தியர் சிலையாக இருத்தல் கூடும் என்ற கொள் கையை ஆதரிக்கின்ருர்.

ஆனுல், அது அகத்தியர் உருவம் அல்ல என்று கருதுவோர் கூற்றும் ஆதாரமுடையதே. மேலே கூறப்பட்ட ஆராய்ச்சியாளர் எவரேனும் அச்சிலை அகத்தியர் சிலையென நிச்சயமாக ஆதாரங்

காட்டி நிறுவிற்றிலர். பெரும்பாலும் அகத்தியர் உருவமாகவே இருக்கவேண்டும் என்றுமாத்திரமே கூறுகின்றனர். ஆனால், அகத்தியர் உருவம் அல்ல என்று கருதுவோர் கூற்றே தீர்க்கமானது.

## முக்கியமான தடைகள்

இந்தியாவிலும் ஜாவாவிலும் உள்ள அகத்தியர் உருவங்களையெல்லாம் நன்காராய்ந்தவரும் "ரூபம்" என்னும் பத்திரிகையின் ஆசிரியருமாகிய திரு. ஓ. சி. கங்கூலி (Mr. O. C. Gangooly) என்பவரும் இச்சிலையை மிக நுணுகி ஆராய்ந்துள்ளார். இவர், அதைப்பற்றிக் கூறுமிடத்து, அது பாரக்கிரமவாகுவினது உருவமாக இருக்கமுடியாதென எடுத்துக்காட்டியபின், மேலுந் தொடர்ந்து கூறுவதாவது:—"இஃது ஒரு முனிவன் சிலையாக இருத்தல் வேண்டும். எனவே, அகத்தியர் சிலையாக இருக்க வேண்டும் என்று கூறிவிடுதற்கே, பெரும்பாலும் எவர்க்கும் விருப்பம் ஏற்படும். ஆனால், இதற்குப் பல தடைகள் இருக்கின்றன.

அகத்தியர் உருவங்கள் எவையாயினும் ஏடுகளைக் கையில் வைத்திருக்கும் வழக்கம் இல்லை. ஆதலால், ஒரு சிற்பி, புதிய முறையில், அகத்தியர் உருவைச் செய்யவேணும், அகத்தியர் கையிலுள்ள ஜெபமாலையையும் கமண்டலத்தையும் மாற்றி, அவற்றிற்குப் பதிலாக, ஏட்டை வைக்கவுந் துணியான். இவ்வுருவம், மிஸ்றர் பெல், கூறுவதுபோல, கபிலரது சிலையாக இருத்தல் கூடுமென்றும் திரு. கங்கூலி கருதுகின்றார். ஆனால், அதை நியாங்காட்டி நிறுவுதற்கு அவரால் முடியவில்லை.

## பொதுவான ஒற்றுமை

பல்வேறு கருத்துக்களையும் திரட்டித் தொகுத்துக் கூறுமிடத்து, மேற்குறித்த சிலை மன்னன் சிலையல்லவென்பதும், ஒரு முனிவன் சிலையென்பதும் பொதுவாகக் கருதப்படுகின்றது. இருவர் மாத்திரமே, பாரக்கிரமவாகு, தன் உருவம் ஒரு முனிவன் உருவம்போல அமைக்கப்படுவதை விரும்பியிருக்கலாம் என்று கருதுகின்றனர். சமீபத்தில், இது சம்பந்தமாகச் சில ஆதாரங்களை நான் கவனிக்கக் கூடியவனாய் இருந்தேன். சிலை நிறுவப்பட்டிருக்கும் இடம் கற்பாறையின் ஒரு பக்கமாகும். அதே கற்பாறையிற் சிலையின் தலைக்கு நேராகப் பிறபக்கத்தில் சில பழைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை தெளிவில்லாதவை. அவற்றுள் மூன்று அல்லது நான்கு எழுத்துக்கள் ஒருவாறு அறியக் கூடியன.

அவை எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்ருண்டைச் சேர்ந்தவையாகத் தெரியப்படுகின்றன. எஞ்சிய எழுத்துக்கள் மூன்றடி அகலமும் மூன்றடி நீளமுமுள்ள சதுரமான ஓரிடத்தில் அங்கும் இங்குமாக வரையப்பட்டுள்ளன.

சிலை எழுத்துக்களின் காலம்

மேற்படி சிலையே அவ்விடத்திலிருக்கும்போது, அதன் சிரசின் பிற்பக்கத்தே ஒருவர் எழுதத் துணியார். ஆகவே, அக்கல்வெட்டுக்கள் சிலை அமைக்கப்படுவதற்கு முன்னரேனும் அல்லது அச்சிலையின் காலத்திலேனும் ஆண்டிருத்தல் வேண்டும். பெரும்பாலும் கல்வெட்டுக்கள் பிறரான் எளிதில் காணத்தக்க இடங்களிலேயே அமைக்கப்படுதல் வழக்கமாகும். ஆனல், மேற்குறித்த எழுத்துக்களோ ஒருவன் அக்கற்பாறையின் உச்சியில் ஏறினலன்றிக் காணமுடியாதவை. எவராலும் படிக்கப் படுதற்கெனக் கருதப்பட்ட எழுத்துக்கள் இத்தகைய மறைவான இடத்தில் பொறிக்கப்பட்டன என்பதை எவரும் நம்பமுடியாது. ஆதலால், அவை மேற்படி சிலையை அமைத்த சிற்பிகளால் கீறப்பட்ட ஏதோ சில எழுத்துக்களாகும் என்று கோடலே பொருத்த முடையதாகும். அவை கவலையீனமாகவும் பொறிக்கப்பட்டிருக்கும் வகையும் இதனை வலியுறுத்துகின்றது. இஃது அங்கீகாரப்படுமாயின், அச்சிலை எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்ருண்டைச் சேர்ந்ததாயிருத்தல் வேண்டும். அதாவது, பராக்கிரமவாகு இருந்த காலத்திற்கு மூன்று அல்லது நான்கு நூற்ருண்டுகளுக்கு முன்னரே இருந்திருத்தல் வேண்டும். அங்ஙனமாயின்,அது பராக்கிரமவாகுவின் உருவச்சிலையாதல் எவ்வாறும்?

## யாழ்ப்பாணம் கலா நிலைய மண்டபத்தில்

நடைபெற்ற

# சேர்.பொன். இராமநாதன் அவர்களின்

## திருவுருவப்படத் திறப்பு விழாவின்போது

நவாலி. திரு. க. கி. நடராஜன் பாடியவை

வெண்பா.

ஈழத் தமிழர் திலகமே யேத்திசையாற்
கீழைத் திசைக்கோர் கிளர்குன்றே—சூழுலகில்
நீயிறந்தா யல்லையால் நீள்புகழா லுள்ளனையெம்
வாயிறந்து போய மதி.

ஆசிரியப்பா.

எத்துது மியாமே! எத்துது மியாமே!
மன்னு வுலகத்து மன்னுதற் குறித்தே
தம்புகழ் நிறீஇத் தாம்பிரிந் திட்ட
**பொன்இரா மனாத** மன்னுபே ராளனைப்
பன்னூட் பயின்ற பழம்பெரு மன்புடன்
எத்துது மியாமே! எத்துது மியாமே!
கல்லினுண் மணியுஞ் சொல்லினுள் வாய்மையு
மெல்லிய லார்களுள் விளங்குவட மீனும்
ஆனினங் களினுயர் தேனுவு மென்ன
மாணிதி படைத்துப் பேணுநர்ப் பேணிச்
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனே
அந்தமில் சீர்த்தி யருங்கடல் வண்ணனே
அந்தரத் திழிந்திவண் வந்தவ தரித்தனன்

எனவாங்கு,

மயங்குநர் மயங்க மாண்புலஞ் சிறந்து
வயங்கி மிளிர்ந்த மடங்கலே றனையனைச்

சொன்னயம் பொருணயம் பன்னயம் பொதுளிய
நற்றேன் பிலிற்றும் பொற்றா மரையை
இன்றமிழ்க் குயிலை யாங்கில முகிலைக்
கேட்குநர்ப் பிணிக்குங் கிளிமொழி யாளனைக்
கழகங்க ணிறீஇய பலர்புகழ் மாண்பனைக்
கலைகளை வளர்த்த தலைவனைச் சந்தனத்
திலகந் தைஇய திருநுத லழகொடு
மலர்மகள் வதியு மறுவிலா னனத்தனைச்
சிவமெலாம் புனைந்த சிவசம யத்தனை
நீல கண்டனா மாலமர் செல்வனுக்
காலயம் வரன்முறை யமைத்த பெரியனை
அரசியல் ஞானியை யுரைசால் புலவனை
வேதாந்த சித்தாந்த மேன்மைகொ ளறிவொடு
சமரசம் புகட்டிய தனிப்பெருந் தலைவனைப்
பிறர்க்கென முயன்ற பெருந்தகை யாளனை
ஞாயிற்றி லுள்ள வெம்மையும் விளக்கமும்
திங்களிற் காணுந் தண்மையுஞ் சாயலும்
மாரியிற் பெறூஉம் வண்மையுஞ் சுரப்பும்
நேரிதிற் பெற்ற நிறைதிரு வாளனை
அன்ன மாபி னனையனைப் புகழ்ச்சியா
லின்னனென் றுரைத்த லெமக்கெளி தன்மையின்

அவனை,

மனத்தான் வாக்கான் மகிழ்ந்து வியந்துநின்
றேத்துது மியாமே! ஏத்துது மியாமே!

# தமிழன்பர் மகாநாடு

சுவாமி உருத்திரகோடீசுவரர்

சென்ற 1933-ஆம் ஆண்டில், தமிழன்பர் மகாநாடு ஒன்று கூட்டப்படுமென்று சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கத்தார் வெளியீடு செய்த நாள் முதல் ஏறக்குறைய ஆறு திங்கள்களாக இடையிடையே அதைப்பற்றிப் பலவகைப் பத்திரிகைகளில் வெளிவந்த மற்றைய தமிழன்பர்தம் பல்வேறு ஐயங்கள், வினக்கள், மாறான கருத்துக்கள், தமிழ்வளர்ச்சிக்கென அன்னார் செய்த அறிக்கைகள் ஆகிய எல்லாவற்றையும் கூர்ந்து படிந்துவந்தேம். பின்பு, அச்சங்கத்தாரின் அரிய முயற்சியால் சென்ற ஆண்டு டிசம்பர்த்திங்கள் முடிவில் சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் மிகச் சிறப்புடன் கூடிய அம்மகாநாட்டில் நிகழ்த்தப்பட்ட பேர் உரைகளையும், மாறுபட்ட பிறர் செயல்களையும், அதில் கொண்டுவரப் பட்ட தீர்மானங்களையும், அவைகளின்மீது திரும்பவும் பத்திரிகைகளில் வெளிப்பட்ட தமிழன்பர் வேறுசிலர் கருத்து வேறுபாடுகளையும் அறியலானேம். இடையில், 'ஆனந்த விகடன்' என்பான் 'தமிழ்த் தாய்க்கு வந்துடுத்து யோகம்' என்றதையும் பெரு நகைப்புடன் எந்தங் கருத்திற் கொண்டனம்.

அம்மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களுள், 'தமிழின் உயர் தனிச் சிறப்பை யாவரும் உணருமாறு செய்யவேண்டும்', 'தமிழாசிரியர்களை மற்றைய ஆசிரியர்களின் உயர்நிலைமையில் வைக்கவேண்டும்', 'நகர சங்கம், ஜில்லாசங்கம், தாலுக்காசங்கம், கிராமசங்கம் என்பவைகளின் நடவடிக்கைகள் தமிழிலேயே இருத்தல்வேண்டும்' என்ற இத்தீர்மானங்கள் உண்மையாகவே செய்கைக்குக் கொண்டுவரப்படுமானுல், தமிழ் இன்னுஞ் சிறப்புற்று வளர்ந்தோங்கும் என்பதில் ஐயம் இல்லை.

பள்ளிக்கூட மாணவர்கள் பொருட்டும், கிராம மக்கள்பொருட்டும் இனி எழுதப்படும் நூல்களும், மற்றைய எல்லாப் பொதுமக்கள் பொருட்டும் நடத்தப்படும் பத்திரிகைகளும் எத்தகைய தமிழ்நடையில் அமைதல் வேண்டு மென்பதைப்பற்றி மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள், தம் விரிவுரையில் தமிழ் உரைநடை ஆராய்ச்சிமுகமாக மகாநாட்டிகூருள் பெரும்பாலோர் மகிழ்ந் தேற்றுக்கொள்ளும்வண்ணம் பலப் பல எடுத்துக் கூறியிருக்கின்றூர்கள். ஆனுலும், அவர்கள் முன்னே சென்னைப் பல்கலைக் கழகத்தில் செய்த சொற்பொழிவில் அறிவுறுத்தியவாறே நடுநிலையில் நின்று, 'கால இயல்பு மாற மாற ஒரு பாஷையின் நூலமைப்

புக்களும் மாறி வருவது இயல்பு; தமிழில் சம்ஸ்க்ருதம் முதலான வேறு மொழிச் சொற்களைக் கலக்கலாம்; அதனால் தமிழின் அழகு ஒருபோதும் குறையாது' என்று பழைய தமிழ் இலக்கியங்களின் மேற்கோள்களுடன் விளக்கமாக நவிலலுற்றார்களென்பது எல்லாராலும் நன்கு அறியப்பட்டிருக்கும். தமிழில் சம்ஸ்க்ருத சொற்களைச் சேர்த் தெழுதலாம், ஆங்கில முதலான சொற்களைச் சேர்த் தெழுத லாகாதென்று இதுகாறும் தமிழ்வாணர் சிலர் வற்புறுத்துக் கூறிவந்தனர். ஆனால், இனித் தோன்ற விருக்கும் அம்மகாநாட்டு நிரந்தர சங்கத்தார், ஐயர்அவர்கள்தம் அச்சொல்லைப் பொன்னேபோல் போற்றி, எல்லோர்க்கும் விளங்கும்பொருட்டெனத் தம்மால் எளிய தமிழ்நடையில் எழுதி வெளியிடப்பெறும் பற்பலவகையான நூல்களில் சம்ஸ்க்ருத சொற்களையும், ஆங்கில முதலான பிறமொழிச் சொற்களையும் அளவின்றிக் கலந்தேவிடுவர் என்பது திண்ணம். அச்சங்கத்தில் பெருநிலையும், செல்வமும், செல்வாக்கும் உடையார் பலர் இருப்பாதலின், அம்மகாநாட்டினர்தம் தனிநோக்கத்தை மிகுந்த ஆரவாரத்துடன் அவர் நிறைவேற்றவே தலைப்படுவாராவர். மேலும், ஹிந்திமொழி என்பது அரசியல் சீர்திருத்தக்காரருள் ஒருசாராரால் இதுபோது தென் இந்தியாவில் மிக்க ஊக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றமையால், இனி, தமிழில் அந்த ஹிந்தி மொழிச் சொற்களும் மிகவும் புகுத்தப்படுவனவாகும்.

இவ்வாறு தமிழ்மொழியை வளப்பம் நிறைந்ததாக வளரச்செய்யும் நோக்கத்தில் தமிழருள் எவ்வித அபிப்பிராயபேதமும் இல்லை என்றே சிலர் எழுதினும் பேசினும், தமிழன்பர் வேறு ஒருசிலர் இந்நோக்கத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாராய், தமிழில் பலமொழிச் சொற்கள் கலக்கப்படுவதால், அது மிக விரைந்து முற்றிலும் வேறுபட்டுத் தன் பேச்சு வழக்கிலும் நூல்வழக்கிலும் சீர்கேடுற்ற நிலையை எய்திப் புதுவதொரு தெருமொழியாய்ப்போகுமென்று கருதற்காகும். ஆயினும், பேச்சுவழக்குள்ள தமிழ்மொழி இந்நாள் நாகரிகத்திற்கேற்பப் பலவகையிலும் வேறுபட்டுச் சென்றுற்றான், அது விரிந்து முதிர்ந்து வளர்ந்துகொண்டே போகுமென்பது மொழிநூலார் (Philologists) கருத்தாகு மென்பதும் கருதற்பாலதே. ஐயர்அவர்கள் 'இக்காலத்தில் சிலர் தாம் மேற்கொள்ளும் புதிய முறைகளை யாவரும் கைக்கொள்ளவேண்டுமென்று தூண்டுகின்றனர். பலருக்கும் பொதுவான பாஷையில் தங்கள் மனம் போனவாறு தங் கொள்கைகளை அவசரப்பட்டுப் புகுத்திவிடுதல் சரியன்று' என்று கூறியபடி, தமிழ்மொழியானது எல்லார்க்கும் பொதுவானதால், தமிழ் மொழியின் தூய்மையையும் தனிநிலைப் பெருமையையுஞ் செவ்விதின் பாராட்டிப் போற்றி வளர்க்க முயலும் ஒருசார் தமிழன்பர் வேற்று மொழிச் சொற்களையுஞ் சொற்றொடர்களையும் ஒரு சிறிதும் வேண்டாராய், அழகிய தனிச்செந்தமிழிலேயே நூல்களும் உரைகளும் தாள்களும் எழுதல்வேண்டும்; அத்தனித்தமிழிலேயே சொல்லாடல்வேண்டு மென்னும்

தம் ஒரு தனிநோக்கத்தையே மற்றொருபுறத்தில் நிறைவேற்றிக்கொண்டே தான் இருப்பர்.

சிறிதுகாலத்திற்கு முன்பு, உருஷியர் தம் மொழியில் கலந்திருந்த ஜர்மன்மொழிச் சொற்களை அறவே களைந்து, தம்முடைய மொழியிலிருந்தே சொற்களைப் பொறுக்கியெடுத்துச் சேர்ந்து வழங்கிடத் தலைப்பட்டனர். துருக்கியரும் இப்போது தம் மொழியில் உள்ள அரபியச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் நீக்கி, அவைகளின் கருத்துக்களைக் குறிக்க வல்ல தூய துருக்கியச் சொற்களையே கண்டெடுத்து வழங்கப் பெரிது முயல்வதும் அறியப்படுகின்றது. இச்செயல் அவ்வந்நாட்டினர் தத்தம் மொழியில் வைத்துள்ள பற்றைப் புலப்படுத்துவதாகுமன்றே? இத்தகைய பற்றுடைய தமிழன்பரும் உளர்.

இனி, தமிழ்மொழியில் இடைக்காலத்திலிருந்தே பெரும்பாலுந் தூய் மையான உரைநடையும், மணிப்ரவாளம் என்னும் சம்ஸ்க்ருத சொற்கள் பெரிதுங் கலந்த மற்றோர் உரைநடையும் வழங்கிவருகின்றன வென்பது தமிழன்பர் எல்லாரும் அறிவர். இந்நாளில் தமிழ்மொழியைக் குறித்த இவ்விரு கருத்துக்களும் செயல்களும், மக்கட்கூட்டத்தில் ஒவ்வோர் இனத் தினரும் தத்தம் தூய்மைக்காகத் தத்தம் இனத்திலேயே மணம்புரிதல் வேண்டுமென்னும் ஒரு சாராரினதும், பல இனங்களின் கலப்புமணங்க ளால் நன்மைகள் சில உண்டாமாதலின், அக்கலப்பு மணங்களே வேண்டு மென்னு மற்றொரு சாராரினதுமாகிய கருத்துக்களையுஞ் செயல்களையும் ஒத்திருக்கின்றன. தனிமணங்கள் ஒருபுறமும், கலப்புமணங்கள் வேறு ஒரு புறமும் நிகழ்ந்துகொண் டிருக்கின்றமை போலவே, தனித் தியங்குஞ் செந்தமிழ் உரைநடை ஒருபக்கலும், பலமொழிக் கலப்புத்தமிழ் உரைநடை மற்றொருபக்கலும் வேறு வேறு வழங்கியே வரும். இவ்விரு நடைகளின் அழகுகளும் இரு சாராராலும் தனித்தனியே விரும்பிப் போற்றப்படும்.

எனினும், பழங்காலத்துத் தொல்காப்பியம் முதலான தமிழ் இலக் கணங்களில் உரைக்கப்பட்டுள்ள அகப்புறப் பொருள்களையும், இஞ்ஞான் றைப் பொருள்களில் சிலவற்றையும் மட்டுந் தூய்மையான தனித்தமிழில் விரித்து எழுதற் கியலும். ஆனல், இஞ்ஞான்றையப் புதுப் புதுப் பொ ருள்களை அத்தனித்த தமிழில் சுருங்க எழுதலாகுமே யொழிய விரித் தெழுதற்கு இயலாது. அவைதம்மை விரித்துரைத்து நன்கு விளக்கவேண் டின், செந்தமிழ்ச் சொற்களோடு வேற்றுமொழிச் சொற்களிலுஞ் சொற் றொடர்களிலும் அளவில்லாதவற்றை எடுத்துக் கலப்பது இன்றியமையாத தொன்றும். நடையோ பலமொழிக் கலம்பகம் உடையதாகும் என்பது வெளிப் படை. இந்த இடர்ப்பாடு இந்நாளில் நந்தமிழில் பல்வேறுவகைப்பட்ட புத்தப்புதிய பொருள்களைக் குறித்துக் கட்டுரைகளைத் தம் வன்மைகாட்டி வரையும் அறிவாளர்களால் தெற்றெனக் காணப்பட்டதே. தனிப்பட்ட

செந்தமிழ்த் தூய்மையானது தன்னளவில் சுருங்கி இருந்த, தனக்கேயுரிய இனிமையாம் நலத்தைத் தாராநிற்கும். மற்றுக் கலப்புத் தமிழோவெனின், இக்கால நாகரிக நிகழ்ச்சிக்குத்தக்காங்கு விரிந்து பரந்து இயங்சி, வேறும் ஒருவகையான இனிமையைப் பயக்காநிற்கும். இவ் இருவேறுய அழகு களும் இனிமைகளும் அதையதை விரும்புகின்ற தமிழ்மக்களால் நுகரப் படும். அதனுல் இவ் இருவேறு தமிழ்வகையும் இவ்வுலகின்கண் என்றும் நின்று நிலவும். இவ்விரு நுகர்ச்சிக்குரிய இரு நடைகள் இப்பொழுது வெளிவரும் நூல்களிலும் தாள்களிலும் வெள்ளெனக் காணப்படுகின்றன. எந்தம் 'ஞாயிறு'ம் இவ்விருதிற நடைகளிலும் இயன்ற கட்டுரைகளைக் கொண்டதேயாகும்.

இனி, தமிழ் எழுத்துக்களில் உள்ள மிகையும் குறையும் திருத்தஞ் செய்யப்படவேண்டு மென்னுந் தீர்மானம் ஒன்று அம்மகாநாட்டை மிக்க ஊக்கத்துடன் கூட்டின தமிழன்பரால் கொண்டுவரப்பட்டதென்று முத லில் யாம் அறிந்தேம். தமிழ்ப் பத்திரிகைகள் சிலவும் அத் தீர்மானம் 'தமிழுக்குப் பங்கஞ்செய்வதாகும்', 'தமிழைப் பாழ்படுத்துவதாகும்', 'தமிழ்க் கொலையாகும்' என்று வருந்திக் கூறலாயின. பின்னர், அத்தீர்மானம் அம்மகாநாட்டில் தம் மனவேறுபாட்டால் கலாம் விளைத்த வேறு ஒரு பாலாருள் ஒருவராலேயே கொண்டுவரப்படுவதாயிற்று என்று அறியலா னேம். அவர் தமிழன்புடையாரோ என்னவோ அறிகிலேம். ஆயினும், தமிழ் இழிதகவுடையதென்பது அவர்தங் கருத்துப்போலும்.

அதனைக் குறித்து எழுதுமிடத்து, 1914-ஆம் ஆண்டில் சம்ஸ்க்ருத மொழியாளர் சிலர் தமிழ் எழுத்துக்களுள் ழ, ள, ற, ன என்பவைகள் மிகையென்றும், க, ச, ட, த, ப என்னும் வரிவடிவங்களே பலவேறு ஒலிவடிவங்களைக் குறித்து நிற்பது குறை யென்றும், அதனுல் தமிழ்எழுத் துக்கள் சீர்க்குறை யுடையனவாகக் காணப்படுதலின், அவைகளில் சீர் திருத்தம் வேண்டுமென்றும் கூறத் துவங்கினர். அப்பொழுது அத்தகை யினருள் ஒருவரால் தமிழ் எழுத்துக்களுள் சில ஒழிக்கப்பட்டும், சம்ஸ்க் ருதமொழியி லிருந்து சில எழுத்துக்கள் சேர்க்கப்பட்டும் 'புதிதாய் உத் தேசித்த தமிழக்ஷரமாலை' என்ற ஒன்று வெளியிடப்பட்டது. அதன்பின் னர், 1910-ஆம் ஆண்டில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றத் தினரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தனிக்கூட்டத்தினர் தமிழ் எழுத்துக்க ளில் அச்சீர்திருத்தம் இன்றியமையாததென்று ஒரு முடிபு செய்தனர். அது, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரைத் தூண்டித் தமிழ் எழுத்துக்களில் எவருந் தலையிடக்கூடாதென்றும், புதியனவாக அமைக்கப்படும் எழுத்துக் களைத் தமிழ் எழுத்துக்களுள் நுழைக்க முயல்வது தமிழின் இயலையும் இனிமையையுங் கெடுப்பதாகுமென்றும், சம்ஸ்க்ருதமொழியி லிருந்து எடுத் தாளப்படுஞ் சொற்கள் தமிழ்மொழியின் மரபிற்கேற்றவண்ணம் அமைக்கப் படவேண்டுமென்றும் எதிர்மறுப்பு முடிவுசெய்து அத்தனிக்கூட்டத்தின

ருக்கு அனுப்பச்செய்தது. அப்போதே திரு. மாணிக்கநாயகர் அவர்கள் தமிழில் புது எழுத்துக்கள் எவையுஞ் சேர்க்கப்படவேண்டியதில்லை; தமிழ் எழுத்துக்களொடு சார்பெழுத்தெனப்படும் ஆய்தவெழுத்தைச் சேர்த்து, அதன் உதவியால் பிறமொழிகளில் உள்ள எல்லா எழுத்தொலிகளையுங் குறித்துவிடலாகுமென்று தம் நுண்ணிய அறிவால் சொற்பொழிவுகள் செய்து அக்கூட்டத்தினர் முடிபுக்குத் தாமுந் தடைசெய்து போதருவாராயினர்.

அதன்பின்பும், 1918-இல் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆதரவில் தமிழ்மொழியைப்பற்றிய ஒரு பெருங் கூட்டங் கூட்டப்பட்டபோதும், இனையன பல பொருள்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை வாய்ந்தவர்களால் தெள்ளிதின் எடுத்து விளக்கப்பட்டு, சென்னைப் பல்கலைக் கழகத்தினர்க்குஞ் சில முடிபுகள் தெரிவிக்கப்பட்டன.

இவ்வுலகில் வழங்கும் மொழிகள் எல்லாம் தம்முள் பலவகைகளிலும் ஒத்திருக்கவில்லை. ஒவ்வொன்றிலும் குறைவும் நிறைவும் உண்டு. ஆதலின், தமிழ்மொழிதான் குறைபாடுடையதென்று சொல்வது ஏற்புடைத்தாகாது. சிலர் நீக்க முயலும் ற, ன, ழ என்பன தமிழின் சிறப்பெழுத்துக்கள். இவை இயற்கைச் செவ்வொலிகளால் இயன்றன. இவ்வாறே ஸம்ஸ்க்ருதத்திற்கே யுரிய சிறப்பெழுத்துக்களும் உள. தமிழில் இல்லாத வேறு சிறப்புக்களும் சம்ஸ்க்ருதத்தில் இருக்கின்றன. சம்ஸ்க்ருதத்தில் இல்லாத சிறப்புக்களும் தமிழில் இருக்கின்றன. ஓசைநிலையும், அதன் குறியீடாகிய எழுத்தும், அதனது கூட்டமாகிய சொற்களும் என்றின்ன பிறவும் ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறுபடுகின்றன. ஐயர்அவர்கள் 'பிறபாஷைச் சொற்களை எடுத்தாளும்பொழுது தமிழுக்கு ஏற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள்ளலாம். ஒரு பாஷையிலுள்ள உச்சரிப்பு வேறொரு பாஷையில் வழங்கும்போது, அதற்கேற்ப மாறினால்தான் பொருத்தமாக இருக்கும். பழைய இலக்கியங்களில் வடசொற்களை எடுத்தாளுகையில் புலவர்கள் அவற்றைத் தமிழுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்' என்று தாம் ஆற்றிய விரிவுரையில் காட்டியிருப்பவும், அதை யறியாமல், தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் வேண்டுமென ஒரு தீர்மானங் கொண்டுவரப்பட்டது தமிழ்மொழியின் மரபிற்கு முற்றும் மாறானதாகும். சம்ஸ்க்ருதசொற்கள் தற்சம தற்பவ முறைகளில் மாறுதலின்றியும் மாறுதலோடும் தமிழில் வழங்கப்படுதலாகும். அவ்வாறின்றி, சம்ஸ்க்ருத ஓசைகளைக் குறிக்கும் சம்ஸ்க்ருத எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களோடு சேர்த்து, சம்ஸ்க்ருத சொற்களை அப்படி யப்படியே தமிழ் உரைநடையில் எடுத்தாளின், அச்சம்ஸ்க்ருதசொற்களின் ஒலிகள் தமிழ்மக்களால் செவ்வையாக அறியப்படுமேனும், அது பழைய மணிப்ரவாள நடையின் வளர்ச்

சிப்பாடாகவே போகும். இதனானுந் தனித்தமிழ் தன் பழைய அழகே இனிமையேயென்றிவை கெட்டு வேறு நிலை அடைந்துவிடும் என்பது ஒருதலை. இது நிற்க.

இனி, அம்மகாநாட்டினரின் 'தமிழ் அன்பு' என்பதற்குத் 'தமிழறிவுக்குக் கருவியான நூல்களிடத்துள்ள அன்பு' என்று அவரால் பொருள் கொள்ளப்பட்டதனால், அவர்க்குத் தமிழ்மொழியினிடத்து அன்பில்லையென்பதும், சம்ஸ்க்ருதமும், ஆங்கிலமும், பிறமொழிகளுங் கலந்து எழுதப்படும் நூல்களினிடத்த மட்டும் அவருக்கு அன்பிருக்கு மென்பதும், அத்தகைய நூல்களின் வாயிலாய்த் தமிழ்மொழியும் அவரால் ஒருபுடை அறிந்துகொள்ளப்படு மென்பதும் பெறப்படுகின்றன.

அவர் தமிழன்பர் மாநாட்டைக் கூட்டினமைபோலவே, மற்றைப் பாஷைகளின் அன்பர்கள் மகாநாடுகளையுங் கூட்டி வைத்து, அப்பாஷைகளில் தமக்குத் தோன்றிய திருத்தங்களைச் செய்ய இருக்கின்றமையாலும், அவர் தமிழ்மொழியினிடத்துமட்டுஞ் சிறப்பாக அன்புடையா ரல்ல ரென்பதும், எல்லா மொழிகளிடத்தும் பொதுவாக அன்புகொண்டு தம் சீர்திருத்த வேலைகளைச் செய்து புத்தகாலயப் பிரசாரஞ் செய்ய முன்வந்தவராவ ரென்பதும் புலப்படுகின்றன.

அவர் மலையாளம், கன்னடம், தெலுங்கு என்னுந் தமிழ்மொழியின் வழிமொழிகளின்பால் இரக்கங்கொண்டு அவைகளைச் சீர்ப்படுத்தங்கால், அவர்க்கு இத்துணை இடைஞ்சல்கள் இரா. அவைகள் சம்ஸ்க்ருதத்தொடு எல்லாவகைகளிலும் பெரிதும் ஒத்து இயங்குகின்றனவாதலின், அவர்தஞ் சீர்திருத்தவேலை மிகவும் எளிதில் நடைபெறலாகும்.

சென்ற ஆண்டின் முடிவிலேயே சென்னபட்டினத்தைச் சார்ந்த அடையாறு என்னும் இடத்திலும் புத்தகாலயப் பிரசாரசங்கக் கூட்டம் வேறு ஒன்று நடைபெற்றதாகவும் அறிகின்றோம்.

இவையேயல்லாமல், இவ்வாண்டு ஜனவரித் திங்களில் சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்திலேயே தமிழ்த் திருநாள் என ஒன்று தமிழர்களால் மிக்க ஊக்கத்துடன் கொண்டாடப்பெற்றதெனவும் அறிந்து மகிழ்கின்றோம். அக்கொண்டாட்டத்தில் தலைமைபூண்ட பெருந்தகையார் திரு. குமாரசாமிரெட்டியார் அவர்கள் 'ஆந்திரபாஷையின் தொனி நயமாக விருக்கிறது; ஆனால், தமிழில் ஹிருதய உணர்ச்சியும் உருக்கரசமும் நிறைந்திருக்கின்றன; தமிழ் மொழியைக் காலத்திற் கேற்றவாறு சீர்திருத்திப் பெருமையடையச் செய்தல்வேண்டும்' என்று கூறினரெனவும், திருவாளர் திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள் 'தமிழின் சிறப்பு' என்னும் பொருள்பற்றிப் பேசியவிடத்து, 'தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள்; தமிழ் தனித்து நிற்கும் பேராற்றல் உடையது; பிற

மொழிகளை அவசியமான இடங்களில் உபயோகிப்பது தனித்தமிழுக்கு மற்றோர் அணிகலனாக இருக்கின்றது' என்று காட்டினரென்றும் அறிகின்றோம்.

தமிழின் இனிமை அறிகிலாத ஆரிய அரசன் பிரகத்தனைப்போல தமிழின் சிறப்பறியாத ஆந்திரராகிய ரெட்டியார் அவர்கள் கருத்து ஆந்திர (தெலுங்கு) பாஷையின் தொனி நயமுடையது என்பதாகும். தமிழின் சிறப்பறிந்த தமிழராகிய முதலியார் அவர்கள் கருத்து தமிழ் இனிமையுடையது என்பதாகும். இவ்விரு கருத்துக்களும் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் பிற இடங்களிலும் உள்ள தமிழ்மக்களால் அறியற்பாலன. அவரவர் மொழி அவரவர்க்குக் குறைவிலதாகவும் இனியதாகவும் இருக்கும். இது, "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்னும் பழமொழியை எமக்கு நினைவூட்டுகின்றது. மற்று ரெட்டியார் அவர்களுடைய தமிழ் நேசத்தின் மிகுதிமட்டும் எம்மால் மிகவும் பாராட்டப்படுகின்றது.

இனி, பொதுவாகக் கற்றுள்ள தமிழ்மக்களுள் மைந்தரும் மாதரும் கொடுந்தமிழே கொச்சைத்தமிழே குறைத்தமிழே பலமொழித்தமிழே என்றிவை கலந்த தாழ்ந்த நடையைக் கொண்டனவும், தாழ்ந்த பொருள்களடங்கினவுமான நூல்களையே இந்நாளில் வாங்கிப் படித்துக் களிகூர்ந்து வருகின்றாராதலின், அன்னார்க்கு இந்நாளில் இன்றியமையாத மேலைத்திசை நற்கருத்துக்களை யமைத்து எழுதும் நூல்களைக் கலப்புத்தமிழில் எழுதுவதே உறுதிபயப்பதென்று ஒருசாரார் எண்ணி அம்முறையைக் கைக்கொள்ளினும், மற்றுச் சிறப்பாகக் கற்றவர்பொருட்டுப் பழைய நற்கருத்துக்களையும் புதிய நற் கருத்துக்களையும் அமைத்து இயற்றப்படும் நூல்கள், எக்கலப்பு மில்லாத உயரிய செந்தமிழ்நடையில் இனிது இயன்றனவாகவே இருத்தல்வேண்டும். பொதுமக்கள்தம் தமிழ்மொழி யறிவும் வளர்ந்து உயர்நிலை யடையவேண்டுமென்று நினைக்கப்படின், அவர்க்குரிய நூல்களும் பொருள் விளங்கத்தக்கதாகிய தூய தமிழ்நடையையே ஒல்லும்வரையில் கொண்டனவாயே இருத்தல் நல்லது.

பொதுவாகக் கற்றோர் பொருட்டாதல், அல்லது சிறப்பாகக் கற்றோர் பொருட்டாதல் எழுதப்படும் நூல்களில் இக்காலத்துப் புதுக்கருத்துக்கள் விளக்கப்படவேண்டுமானால், பண்டைய செந்தமிழ் நூல்களையும், இடைக்காலத்துத் தமிழ் நூல்களையும் மேலும் மேலும் ஆழ்ந்து படித்து, புதிய கருத்துக்களைச் செவ்விதின் விளக்கவல்ல சொற்களையும் சொற்றொடர்களையும் ஆராய்ந்தெடுத்து அக்கருத்துக்களை விளக்கல்வேண்டும். சிறிது காலமாகப் பேர் அறிஞர் சிலரால் இவ்வாறே செய்யப்பட்டு வருகின்றது. ஆனாலும், புது நூல்கள் எழுதுவார் எல்லார்க்கும் பயன்படும் பொருட்டு அத்தகைய சொற்களும் சொற்றொடர்களும் அடங்கப்பெற்ற 'அகராதி' ஒன்று இன்றியமையாததாகும். புது நூல்களில் வரும் புதுக்கருத்துக்கள், பிற

மொழிச்சொற்கள் இல்லாமல் விளங்காவாயின், அவ்விடங்களில் மட்டும் அப் பிறமொழிச் சொற்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சம்ஸ்க்ருதம், ஆங்கிலம் முதலான பிறமொழிகளில் உள்ள சொற்களின் ஒலிகளைக் குறிக்கத்தக்க எழுத்துக்கள் தமிழில் இல்லையென்று புதிய எழுத்துக்களைச் சேர்த்தால், அவைகள் சிறிதும் பொருத்தமுறாமல் தமிழின் இனிய ஓசையைக் கெடுத்துவிடும். தமிழைச் சீராக்கவேண்டுமென்று தமிழ் மொழிக்கு ஏலாதனவற்றை மேற்கொள்ளுதல் நன்றாகமாட்டாது.

நாம் இதை எழுதி முடித்த பின்னர், தென் இந்தியாவில் தமிழ்மொழியின் மீது உண்மை அன்பும் பற்றும் உடையார் சென்னைமாநகரத்திற் கூடிய தமிழ் அன்பர் மகாநாட்டினர்தம் பேர் உரைகளையும், தமிழின் முறைமைக்கு மாறான தீர்மானங்கள் சிலவற்றையும் அறிந்து, இம்மொழியின்பால் புதியதொரு பரிவுகொண்டு இவ்வாண்டு மார்ச் திங்கள் கடைசியில் திருநெல்வேலியில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு ஒன்று கூட்டி, சென்னை மாகாணத் தமிழர் சங்கம் என ஒன்று நிறுவி, அதன் வாயிலாகத் தனித் தமிழில் பலவேறு நூல்களையும் வெளிவருமாறு செய்திட முயல்கின்றன ரெனவும் அறிந்து மகிழ்வெய்துகின்றோம்.

தமிழரும் தமிழன்பருமாகிய நம்முள், நம் தமிழ்மொழி வளர்ச்சிபற்றி இத்தகைய கருத்து வேறுபாடுகளிருப்பினும், ஒருவர் செயல் மற்றவர்க்குத் தவறாகக் காணப்படினும் ஒருவரொருவரை வெறுக்காமல் நட்புணர்ச்சியோடு எல்லாவற்றையுஞ் சீர்தூக்கிப் பார்த்துத் தழுவுவனவற்றைத் தழுவித் தவிர்வனவற்றைத் தவிர்த்து நம் தமிழை வளர்த்தலே சிறந்ததொரு முறையாகும்.

# ஆசிரியர் குறிப்புகள்

**ந. கி. பாரதியாரும் 'செழுங்கதிர்ச்செல்வ'மும்**

திருவாளர் நவநீத கிருஷ்ண பாரதியார், பதினேர் ஆண்டுகளுக்கு முன்னர், பண்டைத் தமிழ்ச்சங்கப் புலவரேபோன்று, அறமே பொருளே இன்பமே என்றிவற்றின் வழியதாகிய வீடே யென்ற இந்நாற்பொருள்களைப் பற்றித் தூய தமிழ்ச்சொற்கள் செறிந்து இறுகிய மிக உயர்ந்த நடையில் ஆசிரியப்பாக்கள் இயற்றி, அவ்வாறியன்ற பாக்களை ஒருங்கு சேர்த்து, 'உலகியல் விளக்கம்' என வெளியிட்டு, யாழ்ப்பாணத்தின்கண்ணும் தென் இந்தியத் தமிழ்நாட்டின்கண்ணும் உள்ள பெருந் தமிழ்ப்புலவர்களால் பெரிதும் புகழப்பெறுவாராயினர் அந்நூல் இங்குள்ள 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்க'த்தில் நடத்தப் பெறூஉம் பண்டித தேர்வுக்குரிய பாடவகைகளுள் ஒன்ருக வைத்திடப் பெற்றுளது. அங்ஙனமெல்லா மாயினும், அந்நூல் தமிழ்ப்புலமை வாய்க்கப்பெருத் தமிழ்ப் பொதுமக்களால் எளிதினிலே படித்தறிந்து பயன் படுத்திக் கோடற்குத் தகுந்ததல்லதாகின்றது.

'செழுங்கதிர்ச் செல்வம்' என்னும் இந்நூலோ, எல்லாராலுங் காணப்படும் இயற்கைப்பொருளாகிய சூரியனைக் குறித்ததாகும். சூரியனது குணஞ் செயல்களும், அவைகளால் மக்களும் ஏனைய தாழ்ந்த உயிர்களும் பெறூஉம் பயன்களும் இக்காலத்துப் பௌதிக உண்மைநூல்களில் நன்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. அல்லதூஉம், சூர்ய ஸ்நாநம் (Sun Bath) சால நலமுடைத்தெனவும் நவிலப்படுகின்றது. இத்துணைப் பெற்றிகள் கொண்டு திகழாநிற்கும் ஆதித்தனைக் குறித்த நூல்களும் மந்த்ரங்களும் ஸம்ஸ்க்ருதபாஷையில் உளவாகின்றன. நந்தம் தமிழ்மொழியில் அத்தகைய நூல்கள் இல்லாமையினலேயே இந்நூல் பாவாணராகிய பாரதியார் செந்நாவினின்று எழுந்ததுபோலும்!

இவ்வருமைநூலின் விருத்தப்பாக்களெல்லாம் செந்தமிழ்ச் சொல்வளத்தால் சிறந்துள்ளமையேயன்றி, ஞாயிற்றினுடைய இயற்கை வனப்புக்களும், அதனைப்பற்றிய மனேகற்பனைகளும், கவிமரபுகளும், உவமை உருவகவணிகளும், உருக்கச்சுவைக்குரிய பற்பல உயர் கருத்துக்களும் மெல்லென்ற ஓசைத்தொடர்பொடு தம்பால் அமையப்பெற்றிருக்கின்றன.

இந்நூலை, உருக்கம் ஓசை என்பனவற்றின் அளவில், இற்றைக்கு ஐந்நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்த அதிவீரராமபாண்டியர் பாடிய 'குட்டித் திருவாசகம்' என்னுந் 'திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி'யொடு ஒப்புடையதாக வைத்துப் பாராட்டலாம். இஞ்ஞான்றைத் தமிழ் இலக்கியநூற்பரப்பில் இஃதும் ஒன்ருக எண்ணற்பாலதேயாகும். இது, நிரம்

பக் கற்றோர்மாட்டேயன்றி, அங்ஙனங் கல்லாத மாந்தர் மங்கையர் இளைஞர்மாட்டும் அவரவர் உள்ளத்தின்கண் உணர்வுநிலையை எழுவித்து இன்பந்தந்து, ஞாயிற்று வழிபாட்டின்கண் தலைநிற்கச் செலுத்தி, அதனைப் பாடித் துதிக்கச்செய்யுந் திப்பிய நூலாகும். இப்பெற்றித்தாகிய இந்நூலிற்குப் பண்டிதமணி திரு. மு. கதிரேசன்செட்டியார் அவர்களும் சிறப்புப் பாயிரம் அளிப்பாராயினர்கள். இது, இலங்கையிலும் தென் இந்தியாவிலும் உள்ள இந்து கல்லூரிகளிலும் கிறிஸ்துவக் கல்லூரிகளிலும் பொதுவான ஒரு தமிழ்ப்பாடநூலாக வைக்கப்படுவதற் கிசைந்த தன்மையதாகும்.

நிறைந்த இயற்றமிழ்க் கல்வியும், நுண்ணறிவும், இயற்கை யழகினை வியக்கும் ஆற்றலும், கவித்திறனும், உள்ளத்தின் உணர்ச்சிவலியும் பொருந்தப்பெற்ற பாரதிப்பாவலர், இந்நூலினையும், இதற்கு முன்னரே பாடிய 'சேயுந் தாயும்' எனும் வீரச்சுவை துளும்பு நூல்தன்னையும் விரைவினில் அச்சிடுவித்துத் தமிழகத்திற்குப் பயன்படுத்துவாராகவென இறைவனை வழுத்துகின்றேம்.

---

**நூல் நிலையம்**

கலா நிலையத்தின்கண் தாபிக்கப் பெற்றுள்ள நூல் நிலையத்தில் அரிய பெரிய தமிழ் நூல்களும், ஆங்கில நூல்களும், ஓலைச்சுவடிகளும் பல தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன வென்பது யாழ்ப்பாணத்திலுள்ளார்க்கும், இக் கலா நிலையத்தின் ஆண்டு அறிக்கைகளையும், 'ஞாயிற்'றுக் கதிர்களையும் வேறு ஊர்களிலிருந்து படித்துப் பார்ப்பார்க்கும் நன்றாகத் தெரியுமன்றோ? இந்நூற் களஞ்சியத்தில் தமிழ் ஆங்கில நூல்கள் இன்னும் பலவே யல்லாமல், சம்ஸ்க்ருத நூல்களுந் திரட்டி வைக்க இட்பொழுது முயலப்படுகின்றது. இந்நூல்களெல்லாம் பலராலும் எளிதிற் படித்தறியப்படுமாதலால், இலங்கையிலும் தென் இந்தியாவிலும் உள்ள தமிழ்ப்புலவரும், சம்ஸ்க்ருத பண்டிதரும், ஆங்கில விற்பன்னரும் தாந்தா மியற்றிய நூல்களில் ஒவ்வொன்று இதற்குக் கொடுத்தல் நன்றாம். பழைய தமிழ் ஏடுகள் தருதலும் நன்மையே. நூல்களை அச்சிட்டு விலைசெய்வாரும் இவ்வாறு தருதல் பேருதவியாகும். இவ்வாறெல்லாம் இந்நூல் நிலையத்தை ஆதரிப்பார்க்குப் பெரும் புகழும் உண்டாம். யாழ்ப்பாணத்திலுள்ள கல்வியாளர் சிலர் தாந்தாம் ஆக்கிய தமிழ் ஆங்கில நூல்களை இதற்கு அளித்தமையே யன்றி, பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தாம் சம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் பெயர்த் தியற்றிய 'சுக்ரநீதி' என்னுஞ் சிறந்த பொருள்நூலையும், வேறு சில தமிழ் நூல்களையும் ஈங்குப் போந்துழி இதற்கு அளித்திட்டார்களென்பதை ஈண்டு அறிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம். அவ்வாறே கோயமுத்தூர் திருவாளர் சி. கே. சிப்பிரமணிய முதலியார் அவர்களும் இந்நூல் நிலையத்தினைக் கண்ணுற்று மகிழ்கூர்ந்து, 'சேக்கிழார்', 'திருப்பேரூர்ப் புராணம்' என்றின்ன நூல்களை அளித்திடுவாராயினர்கள்.

இவ்விதழைப் பலர் தனித்தனியே ஆங்காங்குப் பெற்றுப் படித்துப் பயனெய்துவதேயன்றி, ஆங்காங்கே, தாபிக்கப்பட்டுள்ள புத்தக-
வாசகசாலைகளிலும் இது போதரப்பெற்று, அவைகளின் அங்
ஞாயிறு கத்தினர் பலரால் படித்துப் போற்றற்பாலதாகும் என்பது சொல்
லாமே அமையும். திருக்கோணமலை அரசாங்கப் புத்தகசாலையின் காரியதரிசியார் இவ்விதழைப் பெற்றுப் பலருக்கும் பயன்படுத்துவது பாராட்டற்பாலதாகும்.

---

'ஞாயிறு' இதழை யாம் வெளியிடத் தொடங்கி இப்பொழுது பதினொரு திங்கள்கள் கழியலாயின. அன்பர் சிலர் தம் ஆண்டுக் கட்ட
ணப் பொருளை முன்னரே எமக்குத் தந்துத
'ஞாயிற்'றின் அன்பர்கள் வினமைபற்றிப் பெரிதுங் களிப்புறுகின்றேம்.
ஆயினும், உள்ளூரிலும் வெளி ஊர்களிலும் உள்ள
அன்பர் பலர் தம் கட்டணத்தை இன்னும் அனுப்பாமையால், இவ்விதழை அவ்வக் காலத்தில் வெளிப்படுத்தக்கூடாமல் இருக்கின்றேம். ஆதலின், அவ் அன்பர்கள் தம் கட்டணப்பொருளை விரைவில் அனுப்பி, இதனைக் காலமுறை தவறாமல் மிகவுஞ் சிறப்புற நடத்துவதில் எமக்கு ஊக்கம் ஊட்டுவார்களாக. மேலும், இதனை ஆதரிப்பார் தொகை பெருக்கமுற்றால், இது உரப்புறுமாதலால், பிறரையும் இது தன்னை ஆதரிக்குமாறு அன்பர்கள் முயல்வார்களாக. யாமும், இது பின்னுங் காலங்கடந்து வெளிவரா வண்ணம் தக்க அலுவல் ஒழுங்குகளை அமைத்து வருகின்றேம்.

---

## தொல்காப்பியப் பாயிர ஆராய்ச்சி

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 325 | 8 | ஆசிரியரின் | ஆசிரியனின் |
| 325 | 25 | பொருள் கூறுவர் | சிலர் பொருள் கூறுவர் |
| 326 | 1 | அஃது | அது |
| 327 | 5 | விளங்குதலானும் | விளங்குதலான் |

# நிகழ்ச்சிகளும் ஆராய்ச்சிகளும்

கலாநிலையத்தின்கண், சென்ற ஆண்டில், அக்டோபர்த் திங்கள் 5-ஆம் நாள் மாலை மிஸ்றர் எ. வி. ரிச்சர்ட்ஸ், பி. எஸ்சி., "மேற்றிசையில் பயிர்த் தொழிலின் விருத்தியும், இலங்கைக்கு ஒரு அநுபவ போதனையும்" என்பது பற்றியும், 15-ஆம் நாள் மாலை, மிஸ்றர் கே பி. எஸ். மேனோன், எம். ஏ., ஐ. சி. எஸ்., "டாஜ் மஹாலும் அதன் முன் சம்பவங்களும்', என்பது பற்றியும் ஆங்கிலத்தில் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

---

பின்னர், நவம்பர்த் திங்கள் 23-ஆம் நாள் மாலையில், யாழ்ப்பாணக் கல்லூரித் தலைமை ஆசிரியராக உள்ள ரெவரெண்ட் ஜான் பிக்னெல், பி. ஏ. என்பார் "அஸிஸிஞானியார் ப்ரான்ஸிஸ்" (St. Francis of Assissi) எனப்பட்டாரைக் குறித்து ஆங்கில மொழியில் ஓர் அரிய சொற்பொழிவு செய்தனர். அந்த ஞானியாரைப்பற்றி மேலைநாட்டினர் பலரால் பலபடியாகப் பல புத்தகங்கள் ஆங்கிலத்தில் வரையப்பட்டிருப்பினும், சொற்பொழிவாளர் எடுத்து மொழிந்தவைகளுள் சிறந்தவையாவன: ப்ரான்ஸிஸ் எனப்பட்டவர் இட்டலி (Italy) தேசத்தில் அஸிஸி என்னும் ஊரில் கி. பி. 1182-ஆம் ஆண்டில் பெருஞ் செல்வமுடையாராய் இருந்த ஒரு வியாபாரிக்குப் பிறந்தனர். அவர் சிறிது கல்வி கற்றுத் தாம் மேற்கொண்ட போர்த்தொழிலால் சிறைக்கூடத்தில் இருந்தபோதே, அவருக்குக் கடவுள் அறிவு தோன்றுவதாயிற்று. பின்பு, துறவுவாழ்க்கையில் கருத்துடையாராய், பிறரை நோக்கி, "நான் மிக்க வனப்பும், தூய்மையும், வியப்பும் வாய்ந்த ஒரு வனிதையை மணந்துகொள்வேன்" என்றனர். அவ்வனிதை வறுமைதான். அவ்வாறான வறுமைநிலையில், அவர் தாழ்ந்த உடைகளை அணிந்துகொண்டும், தம் உணவிற்காகப் பிறர்பால் பிச்சை எடுத்துக்கொண்டும் இருந்து, கடவுட்காட்சியும் பணிவும் உடையாராயினர். கடவுள் ஆலயம் ஒன்றைப் பிறரிடத்துக் கற்களைப் பிச்சையாக வெடுத்துப் புதுக்கினர். செல்வராயினர், தம்மிலும் மிக்க செல்வரிடத்துப் பொருளை கொள்வதுபோல், அவர், தம்மிலும் வறியராயினரிடத்துக் கழிபெரும் இரக்கங்கொண்டு, அவருக்குக் கிறிஸ்துவசமய உண்மைப்பொருள்களை உபதேசித்து அவருடைய பெருநலத்தை நாடினர். தம் நெறியில் சேர்ந்தாரைக்கொண்டு 'சகோதர சங்கம்' ஒன்று ஸ்தாபித்தனர். அவர், ஒருவனுடைய குட்டநோயை நீக்கினரென்பதும், பறவைகளுக்கு உபதேசித்தாரென்பதும், காட்டிலிருந்து நகரத்திற்கு வந்த ஒரு கொடிய கோநாயைத் தங்கீழ்ப்படியச்செய்தாரென்பதும் அவரைப்பற்றிய கட்டுக்கதைகளாகும். அவர் அற்புதங்கள் விளைத்தவரல்லர். அவைகளை நம்ப என்

மனம் இடந்தரவில்லை. ஆனால், அவர் ஏழைகளிடத்தும், தாழ்ந்த பிராணிகளிடத்தும் அளவற்ற கருணையுடையராய் இருந்தனர். அவர் தம்முடைய தாழ்ந்த வறிய நிலையிலும் உல்லாசக்காரராக விளங்கினர். தம்முடைய சங்கத்தைச் சார்ந்து, உண்பதில் பிரியமுடையரா யிருந்த ஒருவரை 'சகோதர ஈ' (Brother Fly) என்று அழைத்து சல்லாபஞ் செய்வர். அவர் 1226-ஆம் ஆண்டில் தம் உடலை நீத்தனர். இவ்வாறு ரெவரெண்ட் பிக்நெல் சொற்றிறம்பட மிகத் தெளிவாகத் தாம் செய்த சொற்பொழிவின் இடையிடையே, நகைச்சுவையையுங் காட்டி, அவையினர் கேட்டுக் கேட்டு மகிழும்படி செய்தனர்.

ஞானியார் ப்ரான்ஸிஸ் என்பவர் தம் வாழ்க்கைச் சரித்திரத்தை நாம் உற்றுநோக்குமிடத்து, அவர் 700 ஆண்டுகளுக்குமுன், ரெவரெண்ட் பிக்நெல் எடுத்துக் காட்டினமைபோல், கடவுள்பால் ஒரு கண்ணும்; ஏழைகள், தாழ்ந்த உயிர்கள்பால் ஒரு கண்ணும் உடைய திருத்தொண்டராய் விளங்குவாராயினர் என்பது இனிது புலப்படும். அந்த சிறந்த ஞானியார் மேற்கொண்ட கடவுட் பணியும் மக்கட் பணியுமே இந்நாளில் எங்கும் வேண்டற்பாலன. மக்கட் பணியை விடுத்து, கடவுட் பணியினால் மட்டும் அவர் திருவருள் கைகூடாதென்பது உண்மை ஞானங் கைவந்த பெரியார்தம் முடிபாகும். மக்கட்பணியே கடவுட் பணியாகுமென்பாரும் உள்ளனர். இதற்கேற்பவே, சிற்சில சங்கத்தினராலும், சிற்சில நல்லோராலும் மக்கட்பணியே தம் அணியாகக் கொள்ளப் படுகின்றது.

ப்ரான்ஸிஸ் ஞானியார் உயர் வாழ்க்கையானது, கிறிஸ்தவ சமயத்தினராலேயல்லாமல், சைவ சமயத்தினராலும், பிற சமயத்தினராலும் சாலவும் பராட்டப் பெற்றுப் பின்பற்றற்பாலதாகும்.

———

நவம்பர் 26-ஆம் நாள் மாலை கலாநிலைய மண்டபத்தின்கண் காலஞ்சென்ற சேர் பொன். இராமநாதன் அவர்களது திருவுருவப்படம், அட்வகேற் திரு. வை. துரைசுவாமி அவர்களால் சிறப்புடன் திறந்து வைக்கப் படுவதாயிற்று. அதுபோது, ஆடவரும் மகளிரும் பலர் போந்திருந்தனர். அப்படத்தினை அன்போடு ஈந்திட்ட திரு. சு. நடேசபிள்ளை அவர்களாலும், அதனை அன்புடன் திறந்தவரான திரு. வை. துரைசாமி அவர்களாலும் திரு. இராமநாதன் அவர்களுடைய மேலான குணங்களும், அவர்கள் இலங்கையில் பொதுவாக எல்லா மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ் மக்களுக்குஞ் செய்த நன்மைகளும் எடுத்துப் பேசப்பட்டன. அவர்கள் இருவர்களையும் சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் போற்றி, இனியன சில கூறினர்கள்.

பின்பு, இத்திருவுருவப்படத் திறப்புவிழா சார்பாக வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் திரு. வை. துரைசுவாமி அவர்களது

தலைமையின் கீழேயே உயர் திரு. சுவாமி விபுலானந்தர் அவர்களும், திரு. நெவின்ஸ் செல்வத்துரை, பி. ஏ. அவர்களும் சேர். பொன். இராமநாதன் அவர்கள் வாழ்க்கையைக் கொண்டாடி விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். அவ்விரு கல்வியாளர்களுக்கும் ப்ராக்டர் கே. ஐயாத்துரை அவர்களால் வந்தனங்கள் சொல்லப்பட்டன. இத்திருவுருவத் திறப்புவிழாக் கொண்டாட்டில், இராமநாதர்மீது புகழ்ச்சி பொலிந்த பாட்டுகள் நவாலி திரு. க கி. நடராஜன் அவர்களால் இயற்றப்பட்டுக் கேட்டார் மகிழுமாறு இன்னிசையுடன் படிக்கப் பெற்றன. அப்பாட்டுக்கள் இக்கதிரினில் முன் ஓர் இடத்தில் வந்துள்ளன.

அன்னார்தம் சிறப்பெல்லாம் நன்றாகப் புலப்படுமாறு 'இராமநாத மான்மியம்' என்னும் நூலில் கூறப்பட்டிருக்கின்றன.

— —

அதன்பின்பு, டிசம்பர்த் திங்கள் 8-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை, கலாநிலைய மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ. நல்லூர் க. ஆறுமுகநாவலர் அவர்கள் திருநாள் கொண்டாடப்படலாயிற்று. அதுபோது, சைவாசிரியர் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள், நாவலர் அவர்களுடைய வாழ்க்கையைத் தேசீயவாழ்க்கை, தமிழ்ப்பாஷா வாழ்க்கை, சைவசமய வாழ்க்கை என மூன்றாகப் பாகுபாடு செய்துகொண்டு, தம்முடைய தேசீயவாழ்க்கையில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பஞ்சமும் பேதிநோயும் வந்த காலங்களில், பொதுமக்கள் அடைந்த துன்பங்கள் போயகலத் தம் உடலால் பணி செய்ததோடு, தம் மொழியாலும் துன்புற்று நலிந்த மக்களுக்கு அரசாங்கத்தார் வாயிலாய் உதவி புரிந்தமையைப்பற்றிப் பேசினார்கள். அவ்வாழ்க்கையில் அவர்கள் சாதிவேற்றுமை சமயவேற்றுமை என்னும் பொல்லாங்குகளை எள்ளளவும் பாராது, எல்லாரையும் ஒருபடித்தா நோக்கும் அருள் ஒழுக்க முடையராய் நடந்தமை பண்டிதர் அவர்களால் அவையினர் உள்ளத்திற் பதியச்செய்யப்பட்டது. அதன்மேல், நாவலர் அவர்கள் தமிழ்க்கல்வி வளர்ச்சியைக் கருதி, இலக்கியத்துறையில் சிறுவர் முதல் கற்ற புலவர்வரையில் பயன்பெறுமாறு படிமுறையில் முதலாம் பாலபாடந் தொடங்கிப் பெரியபுராணசூசனம் ஈறாகச் சிறந்த உரைநடையில் எழுதினமையும், இலக்கணத்துறையில் இலக்கணவினாவிடை முதல் நன்னூற்காண்டிகைஉரை யளவும் இயற்றினமையும், பழைய இலக்கிய இலக்கண நூல்கள் பல பிழை சிறிதுமின்றி அச்சிட்டமையும், சைவசமய வளர்ச்சி கருதி, சைவவினாவிடை முதலான பல அரிய நூல்களை அருளிச்செய்தமையும், சைவசமயம் தழைத்தோங்குமாறு சீர்திருத்தங்கள் பல செய்தமையும், சைவக் கல்விக் கூடங்கள் அமைத்துவைத்தமையும் பற்றி ஒன்றன்பின் ஒன்றாகத் தெளித்து உரைக்கப்பட்டன. நாவலர் அவர்கள் தம்முடைய வாழ்க்கையில் அவ்வப்போது காட்டிய வீரத்தன்மையும் பண்டிதர் அவர்களால் இடையிடையே எடுத்து விளக்கப்பட்டது.

நாவலர் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவைகளை யெல்லாந் தெளிவாகக் குறிப்பிட்டுப் பண்டிதர் அவர்கள் செய்த இச்சொற்பொழிவில் சொல்நயம் பொருள்நயம் நிறைந்திருந்தமையே யல்லாமல், நாவலர் அவர்கள்பால் அவர்கள் கொண்டுள்ள மிகுந்த உருக்கமும் நன்கு புலப்படுவதாயிற்று. இத்தகைய சொற்பொழிவானது கேட்டார்தம் உள்ளத்தையுங் கவர்ந்து நாவலர் அவர்கள்பால் உருகிடச்செய்தது.

இத்துணைப் பெற்றிகள் வாய்ந்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் 1822-ஆம் ஆண்டில் பிறந்தார்; 1879-ஆம் ஆண்டில் சிவப் பெரும்பேற்றைப் பெற்றார். அவர்களை இக்காலத்தினரும், இனி வருங் காலத்தினரும் நினைந்து போற்றி நலம் பெறவேண்டுமென்னுங் கருத்தோடு அவர்கள் திருவுருவப்படம் ஒன்றனைச் செவ்விதின் எழுதுவித்து, அதுதன்னைக் கலாநிலையத்தின்கண் வைத்திடற்கான முயற்சி இப்பொழுது தொடங்கியிருக்கின்றது.

---

டிசம்பர் 19-ஆம் நாள் மாலை கூட்டுறவுப்புச் சங்கங்களைப் பதிவு செய்யும் உத்தியோகஸ்தரின் உதவியாளராகிய மிஸ்றர் ஜே. எ. மேபின் என்பார் "கடன் கொடுத்தலும் வாங்கலும்" என்பதைத் தம்முடைய ஆங்கிலச் சொற்பொழிவுக்குப் பொருளாக எடுத்துக்கொண்டு, அரசாங்கத்தார் உதவியால் கூட்டுறவுப்புச் சங்கங்கள் செவ்விதின் நடத்தப்பட்டால், வாணிபஞ் செய்தல், வீடுகட்டுதலாதி பல நற்கருமங்கள் எளிதில் செய்து முடிக்கப்படுமென்று விளக்குவாராயினர்.

---

அதற்குப்பின், புனுவில் உள்ள பர்கூஸன் கலாசாலையில் தத்துவநூல் பேராசிரியராகவிருந்த ஸ்ரீமான் ஜி. வி. பட்டே, எம், எ., என்பவர், இலங்கைத்தீவில் கண்டி, திருக்கோணமலை, அநுராதபுரம் முதலான இடங்களில் உள்ள இயற்கை வனப்புக்களையுஞ் செயற்கை வனப்புக்களையுங் கண்டு வியந்து, யாழ்ப்பாணத்திற்குப் போந்து, 'கலாநிலையத்தில் நான்கு நாட்கள் தங்கி, கீரிமலை முதலான சிறந்த இடங்களைப் பார்த்தார். இந் நிலையத்தில் 'லலித கலைகளின் விசாரணை' (The Philosophy of Fine Arts) என்பதைப் பற்றிச் சொற்பொழிவு செய்யுமாறு கேட்கப் பெற்றனர். அவ்வாறே அவர், கலைகள் பலவற்றுள், கைவினைக்கலைகள் இயந்திர கலைகள் என்பன பொதுவாக மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படுவன வென்றும், சிற்பம், சித்திரம், நாட்டியம், நாடகம், காவியம் முதலான வனப்புக் கலைகள் மக்கள் பசித்துன்பத்தை ஆற்றாவிடினும், அவர்தம் மனவிரிவிற்கும், ஒழுக்க மேம்பாட்டிற்கும், ஆன்மவுயர்ச்சிக்கும் பயன்தருந் தன்மையன வென்றும், இவையே லலித கலைகளினாற் பெறப்படும் நன்மைகளென்றும் யாவருங்கேட்டு மகிழும் வண்ணம் ஆங்கிலமொழியில் மிகத்தெளிவாகப் பேசினார். மறுநாள், அவர் இந்தியாவிற்குப் பயணப்படலானார்.

இச்சிறந்த பொருள்கொண்ட நூல் ஒன்று அவர்தம் மராத்திபாஷையில் எழுதியிருக்கின்றார். அவர் அப்பாஷை வளர்ச்சிக்காக எழுதிய பல நூல்களில் ஹீகில் (Hegel) என்ற ஜேர்மன் தேசத்துத் தத்துவ ஞானியார் நூலின் மொழிபெயர்ப்பும் ஒன்றாகும். அவர் தம்முடைய இலங்கை யாத்திரையைப் பற்றியும் நூல் ஒன்று மராத்தியில் எழுதி வெளியிடக் குறிப்புகள் எடுத்துக் கொண்டு போயினர். இதுவன்றோ பாஷாபிமானம்!

---

இவ்வாண்டு ஜனவரித் திங்கள் 9-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்களது மருகரும் மாணவருமாகிய திரு. ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்களுடைய சரிதத்தைக் குறித்துப் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஓர் அரிய இனிய சொற்பொழிவு செய்தார்கள். அதில் திரு. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் தம்முடைய இளமைப்பருவத்தில் பெருங் கல்வியிலுங் கேள்வியிலும் முறையாக முயலாவிடினும், பிற்பருவத்தில் இயற்கையின் இரகசியங்களை நன்குணர்ந்து தெளிவடைந்து, பெரும் புலவராய் விளங்கிப் பலர்க்கும் பெரும் இலக்கிய இலக்கண நூல்களின் நுண்ணிய பொருள்களை அவர்தம் மனம் இன்புறக் கொள்ளும்படி கற்பித்தமையும், இராமாயணம் முதலான நூல்களுக்கு நுண்ணுரைகள் சொல்லியும் எழுதியும் யாழ்ப்பாணத்தின்கண்ணும் தென் இந்தியத் தமிழ் நாட்டின்கண்ணும் பெரும்புலவர்களாலும் பெருஞ் செல்வர்களாலும் நிரம்பின பெருமைதரப்பெற்றமையும் இன்ன பிறவும் பண்டிதர் அவர்களால் விரிவுற வெடுத்துக் காட்டப்பட்டன. அதன் மீது சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் பண்டிதர் அவர்களுடைய பல பொருள்கள் நிரம்பிய இனிய சொற்பொழிவைப் பெரிதும் பாராட்டிக் கூறினார்கள்.

பிள்ளை அவர்கள் 1836-ஆம் யாண்டில் பிறந்தார்கள்; 1897-ஆம் யாண்டில் சிவபதம் எய்தினார்கள். ஜனவரித் திங்கள் 9-ஆம் நாள் அவர்கள் சிவபதமெய்திய முப்பத்தேழாவது ஆட்டை விழாவிற்குரிய நாளானதால், அவர்களுடைய நிழலுருப்படம் ஒன்று அவர்களுடைய மைத்துனரும் மாணவரும் ஆன ஸ்ரீமான். த. கைலாசபிள்ளை அவர்களால் இக்கலாநிலையத்திற்கு அன்போடு தரப்பட்டது. இக்கலாநிலையத்தினர்தம் நன்றி அவர்களுக்கு உரிமையதாகும். திரு. பொன்னம்பலப்பிள்ளை அவர்களுடைய திருநாள் இவ்வாண்டுதான் முதன்முறையாக யாழ்ப்பாணக் 'கலாநிலையத்' தின்கண் மகளிரும் ஆடவருஞ் சேர்ந்த குழுவில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாயிற்று.

# பன்மணிக்கோவை

## சுவாமி விபுலாநந்தரும் சங்கீத விசாரணையும்

உயர்திரு சுவாமி விபுலாநந்தர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள 'வடஇலங்கைச் சங்கீதசபை' யில் சில நாட்களுக்கு முன் 'பூர்வீக தமிழ்ச் சங்கீதம்' என்பதைப்பற்றி நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில், தாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தகாலை சங்கீதத் துறையில் படிந்து, சுரங்களைக் கணிதசாத்திர முகத்தானும், பிரகிருதிசாத்திர முகத்தானும் ஆராய்ந்து வரையறுத்துக் கண்ட முடிபுகளை ஆதாரமாகக் கொண்டு, அவையினர் உள்ளங் கவர்ச்சியடையுமாறு பல நுண்ணிய உண்மைகளை எடுத்துக் காட்டலானார்கள். அவைகளுள் சில பின்வருவன: பண்டை நாளில் தமிழ்நாட்டில் வழங்கிய எழு சுரங்களி லிருந்தே பன்னிரண்டு சுரஸ்தானங்கள் தோன்றின; அவைகளின் சலனத்தால் இருபத்திரண்டு சுருதிகள் பிறக்கலாயின; சங்கீத ஆராய்ச்சிக்காரருள் ஒருசாரார் சுருதிகள் இருபத்தினன்கு என்று கொண்டது வழுவாகும்; கி. பி. 1660-ஆம் ஆண்டில் இருந்த வேங்கடமகி என்றவரால் செய்யப்பெற்ற 'சதுர்த் தண்டிப் பிரகாசிகை' என்னு நூலிலும், கி. பி. 1220-ஆம் ஆண்டிலிருந்த சாரங்கதேவரால் செய்யப்பெற்ற 'சங்கீத ரத்நாகரம்' என்னு நூலிலும் திராவிட சங்கீதமானது குறிப்பிடப்பெற்றிருக்கின்றது. ஆதலின், தமிழ்ச் சங்கீதத்திற்கும் ஆரிய சங்கீதத்திற்கும் தொடர்புளது. மேனாட்டுச் சங்கீதமுறை அண்மையில் மிக்க வளர்ச்சியுற்றிருக்கிறது; ஆனால், நம் இந்திய சங்கீதம் அத்துணை வளர்ச்சியடைந்துவரவில்லை. ஆதலால், நம் இந்திய சங்கீதம் வளர்ச்சியடைய நாம் மிகவும் முயலல்வேண்டும்.

இச்சொற்பொழிவில் 'பரிபாடல்', 'சிலப்பதிகாரம்' என்னும் பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள இசைப்பாட்டுக்கள் சில சுவாமிகளால் மேற்கோள்களாக எடுத்துப் படிக்கப்பெற்றன. காலஞ்சென்ற திருவனந்தைச் சுந்தரம்பிள்ளை அவர்கள் பழைய தமிழர்தம் இசைக்கருவியாகிய யாழின் உருவம் எத்தகையதாய் இருந்ததென்பதை அறியவேண்டி மிக முயன்றார்களென்று சொல்லப்படுகின்றது. ஆனால், சுவாமிகள் யாழுக்கும் வீணைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டியவிடத்து, யாழின் உருவினைக் கல்விச்சாலையின் கறுப்புப் பலகை ஒன்றில் ஒருவாறு வரைந்து காட்டினார்கள். அது, தமிழ்மக்களுக்கு இன்பம் பயப்பதாயிற்று.

சுவாமிகள், 'பூர்வீக தமிழ்ச் சங்கீதம்' என்னும் இதே பொருளை, 'மதுரைத் தமிழ்ச் சங்க'த்திலும், 'கரந்தைத் தமிழ்ச் சங்க'த்திலும் எடுத்

துப் பேசியதாகவும் அறிகின்றோம். அவர்களுடைய இவ் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவானது தமிழகத்தினர்க்குப் பல நுணுக்கப் பொருள்களைப் புலப்படுத்தி யிருக்கின்றது. அவர்களுடைய இந்த சங்கீத ஆராய்ச்சியானது நூல்வடிவம் பெற்று விரைவில் வெளிவருமென்றும் அறிந்து இன்புறுகின்றோம். அத்தகைய நூல் யாவர்க்கும் சேமநிதியாய்ப் பயன் மிக விளைப்பதாகும். ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி கற்று, சங்கீதத்திலும் பயின்று, சுவாமிகள் அணுக்கத் தொண்டர்களாக உள்ள யாழ்ப்பாணத்து இளைஞர்கள், அவர்களுடைய ஆராய்ச்சிநெறியைப் பின்பற்றி, மேலும் மேலும் சங்கீத ஆராய்ச்சி செய்வரேல் அதன் நுட்பங்கள் இன்னும் பல அறியப்படலாகுமன்றோ?

* * *

## டக்றர் ஹிரநாந்த சாஸ்திரியார்

இந்திய அரசாங்கத்தினது சிலாசாசந ஆராய்ச்சிப்பகுதியின் தலைவராகவுள்ள டக்றர் ஹிரநாந்தசாஸ்திரியார், சென்ற டிசம்பர் 5-ந் தேதியில் கொழும்பில் "நளந்தா பௌத்தர் பல்கலைக் கழகம்" (The Buddhist University of Nalanda) என்பதைப்பற்றி ஒரு மிகச் சிறந்த சொற்பொழிவு செய்தனர். அவர், அதன்பின், இலங்கைத்தீவில் அநுராதபுரம் முதலான இடங்களில் வியக்கத்தக்கனவாயுள்ள பழைய கட்டிடங்கள் பலவற்றைப் பார்த்துவிட்டு, புராதன இலங்கையைச் சார்ந்த கட்டிடங்களின் அடையாளங்கள், சாஸநங்களின் சேடங்கள் முதலாயின இன்னும் மண்ணிற் புதையுண்டு கிடக்கின்றனவென்றும், அவைகள் தோண்டியெடுக்கப்படல்வேண்டுமென்றும், அதனால் இலங்கையையும் பௌத்த சமயத்தையும்பற்றிய அதிசயிக்கத்தக்க பல உண்மைச் சரித்திரங்கள் அறியப்படலாகுமென்றும், மேலும், சிங்களநாகரிகமானது பழையகாலத்தில் இந்தியர் நாகரிகத்தொடு தொடர்புற்றிருந்தமை விளங்குமென்றும், அவைகளெல்லாம் இளைஞர்க்கும் பிறர்க்குங் கற்பிக்கப்படல்வேண்டுமென்றும் கொழும்பில் வலியுறுத்துவாராயினர்.

இத்தகைய கலாவல்லுநர் இலங்கைக்குப் போந்தமையால் பல்பல இரகசியங்கள் வெளியாயின வெனலாம். அவர் யாழ்ப்பாணத்திற்கும் போந்தமையையும் பிறவற்றையும் பற்றி அடுத்த கதிரில் விரித்து எழுதுவோம்.

* * *

## அகில இலங்கை இந்து மகாநாடு

இந்திய தேசத்தில் பலவேறு சமயிகளுடைய மாநாடுகள் ஆங்காங்கே கூடுவதுண்டு. சென்ற டிசம்பர்த் திங்கள் முடிவினில், தென் இந்தியத் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரவைக் களத்தில் சைவசித்தாந்த மகா சமாசத்தின் இருபத் தெட்டாம்

ஆண்டு நிறை விழாவும், சைவர் மகாநாடு, சைவமங்கையர் மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு என்பவைகளும், தூத்துக்குடியிலும் சைவசித்தாந்த சபையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுப் பொன்விழாவும், சைவ மங்கையர் மகாநாடும், சைவ இளைஞர் மகாநாடும் நடைபெற்றன வென்பது எம்மால் அறியப்பட்டது. இவ்வாறு தென்தமிழ் நாட்டின்கண் நாளும் சைவ சித்தாந்த சமயம் தழைத்துவருவது எமக்குக் கழிபெரு மகிழ்ச்சியை இழைப்பதாகின்றது.

சைவ சீலர்கள் பலர், வாழ்ந்திருந்த யாழ்ப்பாணத்தின்கண்ணும் சென்ற டிசெம்பர் முடிவிலேயே சைவபரிபாலன சபையின் ஆதரவில் அகில இலங்கை இந்து மகாநாடு என்பது ஒன்று இந்துக்கல்லூரித் தமிழ்க் கல்விக்கூடத்தில், கோயமுத்தூர் வழக்கறிஞரும், 'சேக்கிழார்' நூலாசிரியருமாகிய சைவத்திருவாளர் சி. கெ. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் சாலச் சிறப்பாக நடைபெறலாயிற்று. இம்மகாநாடானது, சைவர் மகாநாடு என்னுந் தமக்குரித்தாய பெயரினைக் கொள்ளாமல், இந்து மகாநாடு என்னும் பெயரால் ஏன் நடைபெற்றதென்று அங்கங்குள்ள சித்தாந்தச் சைவருள் ஒரு சாரார் ஐயுறலாம். இதற்குக் காரணம் யாதெனில், இலங்கைத் தேசத்தில் இம்மாநாடே முதன் முதலாக நடைபெற்றதாகும்; சித்தாந்த சைவம் சமரசத்தன்மை யுள்ளதென்று பேரறிஞரால் பாராட்டப் பெறுவதாகையால், வேதாகமங்களைத் தமக்குப் பிரமாணங்களாகக் கொண்டொழுகும் ஏனைய சமயத்தாரும் இனி வரும் ஆண்டுகளில் இங்குச் சித்தாந்த சைவரொடு ஒருங்கு கலந்து ஒரே மேடையில் தத்தஞ் சமயத் திறங்களைச் செவ்விதின் எடுத்துக் கூறுமாறு அழைக்கப் பெறல்வேண்டு மென்னும் விரிந்த நோக்கங் கொண்டே வேதாகமங்களை மூலங்களாகக் கொண்டு தோன்றி விளங்கும் இந்தியச் சமயக்குழாங்கள் பலவற்றிற்கும் பொதுப் பெயராக இக்காலத்தில் வழங்கப்படும் 'இந்து' எனும் பெயரொடு இம்மாநாடு நடைபெறுவதாயிற் றென்பது. இஃது ஒரு புறம் இருப்ப.

ஈண்டு சைவமங்கையர் மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு என்பன தனிப்பட்டனவாய்க் கூட்டப்பட்டில வேனும், இம்மாநாட்டிற்கு முதுமையடைந்த ஆண்பாலாரேயன்றி, பெண்பாலாரும், அவ்விருபாலாருள்ளும் இளமையோரும் பேர் ஆர்வங்கொண்டு வந்திருந்தனரென்பது குறிப்பிடற்பாலது. இலங்கையின் பல பாகங்களிலிருந்து இங்ஙன் வந்து கூடியிருந்த சைவநன்மக்கள் தொகை ஆயிரம்பேர் வரையில் ஆகும். சைவசித்தாந்த சமய நூல்கள் கற்று வல்லோரால் இம்மாநாட்டின் இரண்டு நாட்களிலும் அரிய சொற்பொழிவுகள் செய்யப்பட்டன. சிவபரம்பொருளினிடத்தும் சிவனடியாரிடத்தும் இடையறு அன்புபூண்டொழுகும் தலைவர் அவர்களும் சைவ சித்தாந்த நுண்பொருள்கள் பலவற்றை, அன்புநூல் அறிவுநூல் மேற்கோள்களுடன் சுருக்கமே, விளக்கமே, இன்சுவையே, நெஞ்சுருகலே, கண்

ணீர் ததுமலே, நாத்தடுமாறலே, உடலங் கம்பித்தலே என்றிவை உற்றிட எடுத்துரைத்துச் சைவருள் எச்சாராரும் சிவானந்த வெள்ளத்தில் ஆழ்ந்திடுமாறு செய்தார்கள்.

இத்தகைய சிறந்த மாநாடு, இனிமேல் ஒவ்வோராண்டிலும் இனிது கூடி, பொதுவாக எல்லாச் சமயங்களின் கொள்கைகளும், சிறப்பாகச் சித்தாந்த சைவசமயத்தின் கொள்கைகளும் யாவரும் அறிந்துநின்று, மேனிலைப் பேறுபெற்று வாழ வழிகாட்டல் வேண்டுமென்று முதியவராலும் அறிவாற்றல் வாய்ந்த இளைஞராலும் இதுபோழ்து முயற்சிசெய்யப்படுகின்றது. இது சிவபரம்பொருளின் திருவருளினால் நீடூழி நின்று நிலவுவதாக.

இது, இலங்கை நாட்டிற்குப் பொதுவாகக் கொள்ளப்பட்டு, சைவ மக்கள் மிகுந்த தொகையினராக வாழும் திருக்கோணமலை, மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு என்னும் இடங்களிலும் ஒரொருகால் கூட்டப்பட்டால், அனைவருக்கும் பெருநன்மை செய்வதாகுமென்பது எந்தங் கருத்தாகும்.

* * *

## பாரிப்பாட்டு

பாரி என்பான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பாண்டிமண்டலத்தில் உள்ள பறம்புமலைக்கும் அதனைச் சூழ்ந்த நாட்டிற்கும் அரசனாகவும், சிறந்த வீரத்தன்மை வாய்ந்தவனாகவும், அஞ்ஞான்றை நல்லிசைப் புலவர்தம் பாட்டுக்களில் வினழவுடையவனாகவும், அவர்க்குப் பரிசில்கள் பல வரையாது வழங்கு மியல்பினனாகவும் இருந்தவன். அதனால் அவன் அப்பண்டைக்காலத்துக் கபிலர் முதலான பெரும் புலவராலும், இடைக்காலத்துச் சுந்தரமூர்த்திசுவாமிகளாலும் அரும்பெரும்வள்ளல் எனப்புகழ்ந்து கூறப்பெறுவானாயினன்.

சென்ற பிப்ரவரித் திங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெருந் தமிழ்ப்புலவர் குழுவில் ஸ்ரீ சேது சமஸ்தான வித்துவான் பாஷா சேகரர் ஸ்ரீமான். ரா. இராகவையங்கார் அவர்கள், தாம் பதினைந்து ஆண்டுகளாக அப்பாரியென்ற வள்ளலைக் குறித்து வெண்பாயாப்பில் பாடிக் கொண்டுவந்த 'பாரிப்பாட்டு' என்னும் நூலைப் படித்து, ராஜா சேர் அண்ணாமலைச்செட்டியார் அவர்களுக்கு உரிமையாக்கினமையையும், அதுபற்றிச் செட்டியாரவர்கள் மகனார், ஐயங்கார் அவர்களுக்கு ஆயிரம் வெள்ளிக் காணம் பரிசிலாக அளித்தமையையும் அறிந்து சாலவும் மகிழ்ந்தோம். இதனால், தமிழர் தம்முடைய செந்தமிழை மறவாதிருக்குமளவும் பாரியின் புகழும் நிலவுமென்பது பெறப்படுகின்றது.

# மதிப்புரைகள்

***நாவலர் வசனநடை.***—கொழும்பு விவேகாநந்த வித்தியாலயத்து ஆசிரியர் பிரமஸ்ரீ சோ. ராமஸ்வாமிசர்மா அவர்கள் எழுதியது. [கொழும்பு ராபர்ட் அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது; முதலாம் பதிப்பு; விலை சதம் 25.]

*இது கொழும்பு விவேகாநந்த சபையாரின் கட்டளைக்கிணங்கிப் பல அறிஞர்களால் எழுதப்பட்ட "நாவலர் வசன நடை" என்னுங் கட்டுரைகளுள் முதன்மை பெற்றதாகும். அன்றியும், இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் திருநாளில் அவர்கள் திருவடிகளுக்குக் காணிக்கையாக்கப்பட்டது மாகும். இதை எழுதிய ஆசிரியர் யாழ்ப்பாணத்தில் தமிழ் சம்ஸ்க்ருத பண்டிதர்கள் வழித் தோன்றியவராவர்.*

*நம் தமிழ்மொழியில் பலவகையான பாட்டுக்கள் இயற்றுதற்கு இலக்கண நூல்கள் பல உள. மற்று உரை இயற்றுதற்கும், அதில் நடைகள் பல அமைத்தற்கும் வழிகாட்டும் நூல்கள் இல்லை. ஆங்கிலத்தில் நல்ல உரை நடைகளில் பழகுதற்கென விதிகளை அமைத்துக் காட்டும் நூல்கள் பல இருக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னர், சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தலைமைத் தமிழ் ஆசிரியராகவிருந்த திரு. செல்வக்கேசவராய முதலியார், எம் ஏ. என்பவராலும், வேறு சில தமிழ் அறிஞராலும் தமிழ் உரை நடைகளைப்பற்றிய சிறு நூல்கள் எழுதப்பட்டன. அவைகள் இந்நாளில் தமிழ் மாணவர் பெரும்பாலாரால் அறியப்படாமல் இருக்கலாம்.*

*நம் தமிழில் பேசப்படுவதும் எழுதப்படுவதும் உரை எனப்படும். உரை - சொல். இவ் உரை யென்னுஞ் சொல்லையே 'வசனம்' என்று இந்நாளில் பெரிதும் வழங்கப்படும் சம்ஸ்க்ருத சொல் குறிக்காநிற்கின்றது. இனி, 'நடை' என்பது, 'நடப்பது' என்று பொருள்படும். எனவே உரையில் (சொற்றொடர்களில்) ஒருவரால் அமைக்கப்பட்ட உறுதிப்பொருள்கள் படிப்போர் உள்ளத்தில் நடப்பது உரைநடையாகும். இவ்வாறன்றி, ஒருவரால் உரையில் அமைக்கப்பெற்ற பொருள்கள் அவரால் விளக்கப்படும் முறை யென்றுஞ் சொல்லலாம். இனி, உரை நடை என்பதற்கு உரை வழக்கு என்றும் பொருள் செய்யப்படும். ஆங்கில மொழியில் உரை நடை (Prose Style) என்பதற்கு எழுதும் முறை யென்று பொருள் செய்யப் படுகின்றது. தமிழில் உரை நடை பலவகைப்படும். இது தெளிவு, ஆற்றல், இசை, இன்பம் முதலான செவ்விகள் உரிய இடங்களில் பெரிதும் பொருந்தப்பெற் றிருக்குமாயின், சிறந்த உரைநடை என்று சொல்லப்படும்,*

நாவலர் பெருமான் அவர்கள் வசன நடையின் பெற்றியை இஞ்ஞான்றைத் தமிழ்மக்கள் எல்லோரும் நன்கு அறிதல் வேண்டும் என்னும் நன்னோக்கங் கொண்ட சர்மா அவர்கள், நம் தமிழ்மொழியில் உரை நடையின் வரலாறு, வளர்ச்சி முதலானவைகளைச் சுருக்கமாய் எடுத்துக்காட்டிவிட்டு, நாவலர் அவர்கள் தமிழ்ச்சைவர் எல்லோர்க்கும் எளிதிலே பொருள் விளங்கும் வண்ணம் இயற்றியருளிய பாலபாடங்கள், சைவ வினாவிடைகள், சிவாலய தரிசனவிதி, பெரிய புராண வசனம், பெரிய புராண சூசனம், திருவிளையாடற் புராண வசனம் என்பவைகளின் வசன நடையைச் செவ்விதின் ஆராய்ந்து, அதில் இயற்சொற்களின் அமைப்பு, ஓர் அளவுபட்ட சம்ஸ்க்ருத சொற்களின் சேர்ப்பு, தருக்க முறை, தூய்மை, வன்மை, தெளிவு, சுவை, அழகு, குறியீட்டமைப்பு (*Punctuation*) முதலானவை பொருந்தியுள்ளமையையும்; திரிசொற்கள் சிலவே ஆங்காங்கு வந்துள்ளமையையும்; திசைமொழிச் சொற்களும், மரூஉச் சொற்களும் கடின சந்தி விகாரங்களும், அளபெடைகளும் விரவாமையையும் இனிதெடுத்து விளக்குவாராயினர்கள். இவையேயல்லாமல், நாவலர் அவர்கள், வசன நூல்களில் திருக்குறள், கம்ப ராமாயணம் முதலான தமிழ் நூல்களின் கருத்துக்களையும்; வேத ஆகம உபநிடத சைவசித்தாந்த நூல்களின் கருத்துக்களையுங் கொண்டுள்ள பகுதிகளையும் தெளிவுற எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

இவ்வாறு நாவலர் அவர்களால் கையாடப்பட்ட வசன நடையின் உண்மைச் சிறப்பியல்களை பெல்லாந் தெள்ளிய உரை நடையில் புலப்படுத்திய சர்மா அவர்கள் விவேகாநந்த சபையாரால் ஒரு பரிசிலும் அளிக்கப்பெற்றார்கள். சர்மா அவர்கள்தம் இந்நன்முயற்சி எந்தம்மால் சாலவும் பாராட்டப்படுகின்றது. தமிழ் உலகமும் அவர்களுக்குக் கடப்பாடுடையதாகும்.

26 - பக்கங்கள் கொண்ட இச்சிறு நூல் தமிழ்க்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சுவை செறிந்த கட்டுரைகள் எழுதும் பயிற்சியில் வழிகாட்டி. மிக்க பயன் அளிக்க வல்லதாகும்.

---

**தந்தையார் பதிற்றுப்பத்து.**—யாழ்ப்பாணத்து நவாலியூர் திரு. க. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது. [சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அழகுற அழுத்திடப்பெற்றது.]

இதை இயற்றிய தமிழ்ப் புலவர் இலங்கையிலும் தென்இந்தியத் தமிழ் மாகாணத்திலும் உள்ள தமிழ்ப்புலவர்களாலும், தமிழ்மக்களாலும் நன்கு அறியப்பட்டவராவர். இவர் இந்நூலின்கண் தம் தந்தையார் தமக்கும் தம் துணைவருக்கும் ஆற்றிய கடமைகளை யெல்லாம் எடுத்துப் பத்து வகைப்படுத்து, ஒவ்வொரு வகையையும் பப்பத்து ஆசிரியப்பாக்களில் அமைத்துப் பாடியிருக்கின்றனர். பதிற்றுப்பத்து என்பது, பத்து + இற்று +

பத்து எனப் பிரிக்கப்படும். இற்று சாரியை. இது பத்தாகிய பத்து என விரிந்து, பத்தினுற் பெருக்கிய பத்து எனப் பொருள்படும். எனவே, இந்நூல் நூறு பாக்களால் ஆனதாகும். இப்பாக்கள் எழுமுதல் நாற்பது வரையிலுமான அடிகளை யுடையன. பாக்களெல்லாஞ் செந்தமிழ்ச் சொல் வளமும் இன்னோசையு முடையனவாய்ப் பொலிகின்றன.

தமிழ்மக்களுள் ஒவ்வொருவரும் தம்மைப் பெற்று வளர்த்துக் கல்வியில் பயில்வித்து உலகவாழ்வில் முன்னுக்குக் கொணர்ந்த தம் தந்தையர்க்கு ஆண்டுதோறும் சிரத்தையால் சிராத்த கிரியை செய்து முடித்தபின்னர், இந்நூலில் இதன் ஆசிரியர் தம் தந்தையாயினர் தமக்குச் செய்த நன்றியை மறவாது பாராட்டியுள்ள முறைபில், அவரை நினைந்து தொழுது வாயினுல் நன்றிகூறி அவர்பொருட்டுக் கடவுளைப் பரவுதல் நல்லதொரு கடனாகும். இச்சிறு நூல் பழைய ஒழுக்கநூற் கருத்துக்களை யுடைமையால், சிறுவர்முதல் முதியோர்வரையில் யாவர்க்குஞ் சிறப்புவாய்ந்த ஒழுக்கங்கள் பல கற்பிக்க வல்லதென்பது எமது கருத்தாகும்.

---

**தனவணிகன் பொங்கல் மலர்.**—ஆசிரியர்: ஏ. ஆர்எம். ஏ. கருப்பன்செட்டியார் அவர்கள். [ கிடைக்குமிடம்: *182*, பார்தெரு, இரங்கூன். விலை: அணு *4* ]

இம்மலர் செட்டிநாட்டு ஆகாயவிமான நிலயம், காரைக்குடிப் பெண்கள் சங்கம், ஐராவதிநதிக்கரை என்றிவற்றின் படங்களும், சிறந்த கட்டுரைகளும், சிறு கதைகளுங் கொள்ளப்பெற்று மழமழப்புள்ள தாளில் அழகாய் அச்சிடப்பட்டுள்ளது. சுவாமி விபுலாநந்தர் அவர்களுடைய 'பயனுள்ள கல்வி' என்னுங் கட்டுரை உயரிய கருத்துக்கள் பலவற்றைத் தெளிவுறுக் காட்டுவதாய் உயர்ந்த தமிழ்நடையில் இயன்றுளது. 'பாரதி' ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்களால் வரையப்பட்டுள்ள கட்டுரையில் மலையாளத்தில் நம் பூதிரிமாதர்களின் எழுச்சியும், அதற்கு நம்பூதிரிவாலிபர்கள் ஆதரவுசெய்வதும் இந்திய தேசீய உணர்ச்சியோடு காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரையாளர் இம்மலரில் பிறிதோரிடத்தில், 'எனது செந்தமிழ்த் தாய்மொழியின் அபிவிருத்திபின்பொருட்டு அயல் மொழிகளில் மோகத்தைக் குறைத்துத் தாய்மொழியில் மட்டற்ற பற்றைத் தந்தருள்க' வென்று கடவுளை வேண்டியிருப்பது, தனித்தமிழ் வழக்கும் கலப்புத்தமிழ் வழக்கும் மலிந்துள்ள இந்நாளில் தமிழர் அனைவராலுங் கருதற்பாலதாகும். பெண்மணிகள் சிலருடைய கட்டுரைகளும் இம்மல

ரைச் சிறப்பிக்கின்றன. அவைகளில் பெண்பாலார் முன்னேற்றத்தின் இன்றியமையாமை மிக்க ஊக்கத்துடன் எடுத்துக் காட்டப்படுகின்றது. இப்பத்திரிகையால் மக்கட்கூட்டத்தின் சீர்ப்பாடு உளதாகும்.

---

**செங்குந்த மித்திரன்.**—இஃது ஓர் உயரிய திங்கள் வெளியீடு. இதன் துணையாசிரியர்: திரு. பி. சே. மாணிக்கவாசக முதலியார்; பதிப்பாளர்: திரு. தி. நா. சபாபதி முதலியார். [கிடைக்குமிடம்: பவளக்காரத் தெரு, சென்னை. சந்தா: உள்நாடு ரூ. 1–8–0; வெளிநாடு ரூ. 2–0–0.]

தென் இந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வெளியீடாகிய இதன் தொகுதி 8-ல், தை மாசித் திங்கள்களின் பகுதிகள் 1, 2 வரப் பெற்றோம். இது ஒரு பெருமுயற்சியால் ஏழு ஆண்டுகளை இனிது முடித்து, எட்டாவது ஆண்டை எய்திச் சிறப்புறுகின்றதென அறிகின்றோம். இந்தியாவில் ஒவ்வொரு குலத்தினரும் தாம் பல்லாற்றானும் வளப்படுதற்காகவும் முற்படுதற்காகவும் தமக்கென ஒரு வெளியீட்டை மேற்கொண்டு நடாத்துகின்றமை போலவே, செங்குந்த மரபினரும் முயன்றிடுவது இந்திய தேசத்தின் மேம்பாட்டிற்குத் துணை புரிவதாகும். இந்த வெளியீட்டில் செங்குந்தர்க்குப் பெரிதும் பயன்படற்பாலனவான குறிப்புக்கள் விளக்கங்களே யல்லாமல், பொதுவாக எல்லார்க்கும் இன்றியமையாத அரிய தமிழ் நூல் ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் செய்திகள், உலகப் புதுமைகள், விளையாட்டுகள் முதலானவைகளும் நிறைந்து திகழ்கின்றன. இது ஆங்காங்குள்ள செங்குந்த மக்களுள் பொருள் படைத்தவர்களால் பரிவுடன் போற்றற்பாலதாகும்.

---

**தாருல் இஸ்லாம்.**—இது வாரம் இருமுறைப் பத்திரிகை. (புதன், சனி வெளியீடு). ஆசிரியர்: ஆலீஜனாப் பா. தாவூத்ஷா ஸாஹிப் பஹதூர், பீ. ஏ. [கிடைக்குமிடம்: *158-B*, பிராட்வே, சென்னை; உள்நாட்டு வெளிநாட்டு சந்தா விவரங்கள் பலவற்றைப் பத்திரிகையிற் காண்க.]

முதன்முதல் துண்டுத்தாளாகத் தோன்றி, பின்னர், திங்கட்டாளாய்த் திகழ்ந்து, சென்ற பதினைந்து ஆண்டுவரையில், வாரத்தில் ஒருமுறை வெளியீடாக இருந்துவந்த இது, இவ்வாண்டினில் வாரம் இருமுறையாகத் தோன்றி விளங்காநிற்கின்றது. அன்றியும், இப்பொழுது இது ஒரு லிமிட்டெட் கம்பனியால் நடத்தப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இது, சிறப்பாக முஸ்லிம்களின் மேன்மைக்காகவும், பொதுவாக முஸ்லிம்களல்லாத மற்றைய எல்லாருடைய மேன்மைககாகவும் இந்நாளில் இன்றியமையாத பலப்பல பொருள்களையும் செய்திகளையும் கொள்கைகளையும் அதிரா ஊக்கத்துடன் அறிவுறுத்தும் இந்திய தேசீயப் பத்திரிகையாகும்.

இதன்கண், முஹம்மத் பெருமானினதும், அவருடைய சீடர்களினதும், இஸ்லாத்தினதுமான உண்மை வரலாறுகளும் மைந்தரும் மங்கையரும் அக மகிழ்ந்து வாசிக்கத்தக்கவண்ணமாய் இந்நாள் முறையில் தெளிவாக எழுதப்படுகின்றன. மேலும், மக்கள் பணியே கடவுள் விரும்பும் திருப்பணியென்பதும், இஸ்லாம்மக்கள்தம் கடமைகள் இன்னின்ன வென்பதும், பல சாதியினர் பல சமயத்தினருள் ஒற்றுமை யுணர்ச்சியே மிகவும் வளரவேண்டுமென்பதும், இன்னோரன்ன பிறவும் இதனிடைக் காணப்படுகின்றன. இவ்வாறு எழுதப்படுங் கட்டுரைகள் நல்ல தமிழ் நடையில் அமைந்துள்ளமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்திய முஸ்லிம்கள்தம் செய்திகளேயல்லாமல், இலங்கை முஸ்லிம்கள் செய்திகளும் இதில் வெளிப்படுத்தப்படுகின்றன வென்பது ஈண்டுக் குறிப்பிடற்குரியதாகும்.

இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த சக்கரைப்புலவர், சவ்வாது புலவர் முதல் குலாம் காதிர் நாவலர் ஈறாகப் பலர் தமிழில் நூல்கள் பல இயற்றி முன்னொளில் தமிழை வளர்த்து வரலாயினர். இதுபோது ஆசிரியர் ஆலி ஜனுப் பா. தாவூத்ஷா சாகிப் பஹதூர் அவர்கள் இத் 'தாருல் இஸ்லாம்' வாயிலாய்த் தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றி வருவது தமிழ்மக்கள் எல்லாராலும் பாராட்டற்பாலதாகும்.

பல்லாற்றானுஞ் சிறந்த இப்பத்திரிகை தமிழகத்திலுள்ள இஸ்லாம் அன்பர்களாலும் ஏனைய அன்பர்களாலும், பெரிதும் ஆதரிக்கப்படத்தக்கதாகும். இது கடவுள் அருளால் நாளும் ஓங்குகவென வாழ்த்துகின்றேம்.

உ.

---

**மகாத்மாவின் மாதவம் அல்லது மனிதவாழ்க்கையின்மாட்சி:** திரு. எம். மாணிக்கம் எழுதியது. [கோழும்பு 'வீரகேசரி' அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்றது. விலை சதம் 10.]

இது, இன்றைய அரசியல் உலகில் எவராலும் மகாத்மா வென்று எத்திப் புகழப்பட்டு இணையற்ற பெரியாராக விளங்கும் காந்தியடிகளின் பொன்னுரைகளையும், வாழ்க்கைச் சரித்திரக் குறிப்புகளையும் எடுத்துக் கூறும் ஓர் இனிய சிறுநூல். இதில் காந்தியடிகள் காலத்துக்குக்காலம் கையாண்டுவந்த உண்ணாவிரதத்தின் உயரிய பெற்றியும், அதனால் ஏற்பட்ட உன்னதபலனும் பிறவும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. தவிர, அரசாங்கத் தொழில் - வர்த்தக மந்திரி கனம் பெரி. சுந்தரம் அவர்களின் முகவுரையையுங் கொண்டுள்ளது. திரு. மாணிக்கத்தின் நன்முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

க. கி. ந.

---

**குறிப்பு.**—ஈண்டு வரப்பெற்ற வேறு அரிய நூல்களுக்கும் தாள்களுக்கும் மதிப்புரைகள் எழுதப்பட்டிருப்பினும், இக்கதிரின்கண் இடமின்மையான், அவைகள் அடுத்த கதிரினுக்கென நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

—இதழ் ஆசிரியர்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள்
இயற்றிய அரிய தமிழ்நூல்கள்

செந்தமிழ் இலக்கணம்

கலிக்கோ 3–00
மட்டை 2–50

ஸ்ரீமத் பகவத்கீதை

(விளக்கவுரையுடன்) 2–00

விற்குமிடம்:–
இராமநாதக் கல்லூரிப்புத்தகசாலை,
சுன்னுகம்

முதலியார்
செ. இராசநாயகம் அவர்கள்
எழுதிய
யாழ்ப்பாணச் சரித்திரம்

தற்கால ஆராய்ச்சிமுறையில் எழுதப்பட்ட
சிறந்த சரித்திர நூல்.

மாணவர்க்குப் பெரிதும் உபயோகமுடையது.

விலை ரூபா 1–8–0.

''ஞாயிறு'' பிரசுராலயம்,
கலா நிலையம்,
யாழ்ப்பாணம்

தனலக்குமி புத்தகசாலை

சுன்னுகம்.

இலங்கையில்,

இலக்கண இலக்கிய
இதிகாச நூல்களும்
வேதாந்த சித்தாந்த
சாத்திர சம்பந்தமான
சிறந்த நூல்களும்

ஆராய்ச்சிமுறையி லெழுதப் பெற்ற அரிய நூல்களும், டக்டர் வே. சாமிநாதையர் அவர்கள், திருவல்லிக்கேணி ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாய புத்தகசாலையார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் முதலியோரால் வெளியிடப்பெற்ற நூல்களும், ஏனைய பிற நூல்களும் ஒருங்கே கிடைக்கப் பெறுமிடம்:—

தனலக்குமி புத்தகசாலை,

சுன்னுகம்.

# யாழ்ப்பாணத்து
# வைத்தியநூல் வெளியீடு.

(விலைகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன)

1. **வைத்தியவிளக்கம் பதார்த்தசூடாமணியுடன்:**
   *இருபாலைச் செட்டியார் இயற்றியது.* விலை ரூபா 1-50

2. **பரராசசேகரம் 1-ம் பாகம்:**
   *சிரரோகநிதானம்* விலை ரூபா 3-00

   இதிலடங்கியுள்ளன:

   1 உச்சி (கபால) ரோகம் 46
   2 அமுத (மூளை) ரோகம் 16
   3 செவி ரோகம் 100
   4 நாசி ரோகம்
   5 நயன ரோகம் 96
   6 வாய் ரோகம்: 1 உதடு 2 பல்லு 3 நாக்கு
   7 கழுத்து ரோகம்

3. **பரராசசேகரம் 2-ம் பாகம்:**
   *கெர்ப்பரோக பாலரோக நிதானங்கள்* விலை ரூபா 2-00

4. **பரராசசேகரம் 3-ம் பாகம்:**
   *சுர, சன்னி, வலி, விக்கல், சத்தி ரோக நிதானங்கள்* ,, 1-50

5. **வைத்தியத்தெளிவு:**
   *செட்டியா ரியற்றியது* விலை சதம் 50

6. **வைத்திய சிந்தாமணி:**
   *அரியதொரு வசன நூல்; ஏட்டுப்பிரதியி லுள்ளது* ,, 1-00

7. **அங்காதிபாதம்:**
   *பரராசசேகரத்தைச் சார்ந்தது* விலை ரூபா 1-00

8. **சோக்கநாதர் தன்வந்திரியம்:**
   இது, தன்வந்திரிபகவான் செய்த வடமொழி வைத்திய நூலைத் தழுவி, சொக்கநாதக்குருக்கள் என்பவரால் தமிழிலே செய்யுள்ரூபமாக இயற்றப்பெற்றது. விலைரூபா 1-50

**அச்சி லிருப்பன:**

பரராசசேகரம் **4-ம் பாகம்:**—வாத, பித்த, சிலேற்பனரோக நிதானங்கள்.
ஷை **5-ம் பாகம்:**—சுவாதம், பிரமேகம், நீரழிவு, கிரகணி, அதிசாரம் முதலியன.
ஷை **6-ம் பாகம்:**—சிரைவிதி (இரத்தம் குத்திவாங்க)
இரட்சாவிதி (சுடுதல்)
சத்திரவிதி, சல்லியவிதி.

**ஐ. பொன்னையா வைத்தியர்,**
ஏழாலை, சுன்னாகம்

# அறிவிப்பு

'ஞாயிறு' வெளியீடு நன்கு நடைபெறுவான் வேண்டிக் காரியங்களைச் செம்மையாக நிருவகித்து நடத்துமாறு *1934*-ம் ஆண்டு மார்ச் திங்கள் முதல்நாள் துவக்கமாக நவாலி திரு. க. கி. நடராஜன் அவர்களை உதவிக் காரியநிருவாகராக நியமித்திருக்கின்றோம் என்பதை இப்பத்திரிகையின் அன்பர்களுக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்பத்திரிகையின் ஆண்டுக் கட்டணப்பொருளைப் பெறுதற்கும், புதிய கையொப்பக்காரர்களைச் சேர்ப்பதற்கும் அவருக்கு அதிகாரம் உண்டு. இவ்வேற்பாட்டினால் இப்பத்திரிகை செவ்வனே நடைபெறுமெனவும், காலந்தவறாது வெளிவருமெனவும் நம்புகின்றோம்.

இங்ஙனம்,

மாசி, 18.

*(1-3-34)*

*க. நவரத்தினம்,*

காரியநிருவாகர்

## யாழ்ப்பாணக் கலாநிலையம்

காரிய நிருவாகக் கழகம்

**1933**

தலைவர்

**திரு. சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்., எப். ஆர். இ. எஸ்.**
(பரமேசுவரக் கலாசாலைத் தலைவர்)

---

செயலாளர்

**திரு. க. நவரத்தினம்**
(மத்திய கல்லூரி ஆசிரியர்)

---

அங்கத்தினர்

முதலியார் சு. திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை**
(திருநெல்வேலிச் சைவாசிரியர் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்)

திருவாளர் வி. நாகலிங்கம்
(வழக்கறிஞர்)

பிரமஸ்ரீ. தி. சதாசிவ ஐயர்
(தலைமைத் தமிழ் வித்தியாதரிசி)

திருவாளர் க. மதியாபரணம், பி. ஏ.
(யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழாசிரியர்)

திருவாளர் க. சுப்பிரமணியம், பி. ஏ.
(சென் ஜோன்ஸ் கல்லூரித் தமிழாசிரியர்)

திருவாளர் ச. சுப்பிரமணியம், பி. ஏ.
(மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

திருவாளர் பொ. தம்பு
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

---

நூல் நிலையப் பொறுப்பாளர்

திருவாளர் கா. வைரமுத்து
(வைத்தீசுவர வித்தியாலய ஆசிரியர்)

*Printed at the Saiva Prakasa Press, Jaffna,*
*and Published by K. Navaratnam,*
*Secretary, The Kala Nilayam, Jaffna.*